திருக்கோயில்

ஜனவரி 1977 ரூ. 1



சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில், காமிகாகம வெளியீட்டுவிழா நிகழ்ச்சியில், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., சென்னைத் துணையாணையர் திரு. எம். சூர்யராஜ், B.A.B.L., இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், B.A., தென்னிந்திய அர்ச்சக சங்கத்தில் பொதுக்காரியதரிசி ஸ்ரீ சி. சுவாமிநாத குருக்கள் ஆகிய பெருமக்கள் கலந்துகொள்ளுதல் (6—2—77).

COMMISSIONER
ARCHIVES AND ...
1977

முகப்பு :

சென்னைத் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி உற்சவத் திருவுருவம்.

திருக்கோயில்

மாலை : 19 20 நள ஆண்டு—தைத் திங்கள் சனவரி—1977 மணி : 4

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
அறநிலைய ஆட்சித் துறை,
சென்னை—600 034

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

பொருளடக்கம்

மயிலம் படிவிழாச் சிறப்புரை
—திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.
கல்வெட்டுத் தமிழ்
—பேராசிரியர் திரு ச. அகத்தியலிங்கம், எம்.ஏ., பி. எச்டி.
அண்டத்து அரும்பெறல் மேகன்
—திரு ந. ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.
ஆலய—நகர அமைப்புக்கள்
—திரு எம். ஐயாமணி சிவம்
ஒரு நுண்பொருள் விளக்கம்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
சமய ஒப்பியல்
—டாக்டர் திரு வ.ஆ. தேவசேனபதி, எம்.ஏ., பி.எச்டி.
தலவரலாற்றுக் குறிப்புகள் —ஆசிரியர்
திருவாசிரியம்
—திரு என். எஸ். தாதாசாரியர்
பழனிமலை வெண்பா—பழனி திரு இளங்கம்பன்
கோடலம்பாக்கமும், புலியூரும் —ஆசிரியர்
பல்லவர் காலத்தில் சைவ சித்தாந்தம்
—டாக்டர் திரு இரா. நாகசாமி
அகத்தீசுவரர் கோயில்
—திரு ஏ. ஏகாம்பரநாதன், எம்,ஏ.
மலை மேலே கலை முனிவர்
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
சைவ சித்தாந்த சாத்திரங்கள்
—திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.
ஸ்ரீ வைஷ்ணவ மாதர் மாநாட்டுத் தலைமையுரை
—திருமதி T. G. தாராபாய் அம்மையார், எம்.ஏ., பி.டி.

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

Q2 211, N58
158620
N77.19-4

மயிலம் படிவிழாச் சிறப்புரை

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை-34.

முன்னுரை :

தவத்திரு சுவாமிகள் அவர்களே !
மயிலம் முருகன் அடியார்களே !
வணக்கம் !

குடியரசு நாள் :

குடியரசுத் திருநாளாகிய இந்தப் புனித நன்னாளில் (26—1—77) இங்கு நிகழும் படி விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் பேறும் பெற்றமைக்கு மிகவும் மகிழ்ச்சியுறுகின்றேன். அடியார்களெல்லாம் தனக்குரிய குடிமக்களாக விளங்க, அருளாட்சிச் செங்கோல் நடாத்தி, அவர்களையெல்லாம் புரந்து காத்தருளும் பொருவிலா அரசனாக முருகப் பெருமான் விளங்குகின்றான். ஆதலின் நாம் நம் முருகப் பெருமானை, ஒரு வகையில் நம் குடியரசுத் தலைவன் என்று கூறிப் புகழ்ந்து மகிழலாம்.

எனவே குடியரசுத் திருநாளில் குடியரசுப் பெருந் தலைவனாகிய நமது முருகனைப் போற்றி மகிழ்தற் பொருட்டு, நாம் இப் படிவிழாவில் கலந்து கொள்வது, நமக்கெல்லாம் ஒரு நலஞ் சிறந்த நற்பேறாகும்.

மைலம், மயிலம் :

தொண்டை நாட்டில் உள்ள புகழ் மிக்க முருகன் தலங்கள் பலவற்றுள், மயிலம் என்னும் இம்மாட்சி மிகு தலமும் தலைசிறந்த தொன்றாகும். முருகன் அடியார்களில் ஒப்புயர்வற்றவராகிய அருணகிரிநாதர், இத்தலத்தைத் தமது திருப்புகழில் புகழ்ந்து போற்றியுள்ளார். அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப் பெற்றிருப்பது ஒன்றே, இத்தலத்தின் எல்லையற்ற மாட்சிமையை விளக்கப் போதிய சான்றாகும்.

''மதிமிஞ்சு போதக மேலா! ஆளா
மகிழ் சம்புவே தொழும் பாதா! நாதா!
மயிலந்தண் மாமலை வாழ்வே !
வானோர் பெருமாளே !

உறுதண்ட பாசமொடு ஆரா வாரா
எனை அண்டியே நமனார் தூதானோர்,
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ
மீதா அருள்வாயே ''

என்று அருணகிரிநாதர், தமது திருப்புகழில் இம் மயிலம் திருத்தலத்தில் வேண்டிக்கொண்ட வரத்தினையே, நாம் ஒவ்வொருவரும் இன்று இங்கு முருகன்பால் வேண்டிக் கொள்ளலாம்.

மயிலம்—பெயர்க் காரணம் :

இத்தலத்திற்கு மயிலம் எனப் பெயரமைந்ததற்குரிய காரணத்தை ஒரு சிறிது கருதிப் பார்ப்பின், நாம் இத்தலத்தின் பெருமையை நன்கினிது உணரலாம். சூரபதுமன் முருகனை எதிர்த்துப் போர் புரிந்தான். அப்போது அவன் பலவகை மாய வடிவங்கள் கொண்டு, முருகனை எதிர்த்தான். முருகன் அவனது மாய வடிவுகளை யெல்லாம் மாய்த்து, அவனது ஆற்றல் அழியச் செய்தான். அந்நிலையில் அவன் வானளாவி ஓங்கிய மாமரமாக வளர்ந்து நின்றான். தமது ஞான சக்தியாகிய வேற்படையை ஏவி, முருகன் அம்மாமரத்தை இரு கூறாகப் பிளந்தார். சூரன் சுய வடிவம் கொண்டு, முருகன் எதிரே வந்து நின்று எதிர்த்தான். அந்நிலையில் முருகனின் வேற்படையால் அவன் உடல் இரு கூறுகளாக வீழ்ந்தது. அவைகள் முறையே, மயிலும் சேவலுமாய் வடிவம் கொண்டன. அது கண்ட முருகன் சேவலைப் பற்றிக் கொடியாகக் கொண்டு, மயிலின் மீது திருவடி ஊன்றி அதன் மீது ஏறி அமர்ந்தான். அப்போதும் சூரன் செருக்கடங்காது சிறகு அடித்துப் பல திசைகளிலும் சுழன்று சுற்றிப் பறந்து திரிந்து அலைந்தான். இறுதியில் அவன் அயர்ச்சியுற்றுக் களைத்து நின்றான். முருகனின் திருவடி தன்மீது பட்டதினால், அவனுக்கு அறிவு சிறிது தோன்றியது. அவன் தனது பிழைகளை உணர்ந்தான். உளம் வருந்தித் திருந்தினான். பிறகு முருகனின் பெருமை உணர்ந்து அன்புடன் துதித்து வழிபட்டான்.

அந்நிலையில் கருணையங் கடலாகிய முருகன், அவன்பால் மனமிரங்கி அருள் புரிந்து ஆட்கொண்டார். அப்போது அவன், ''பெருமானே! யான் இப்போது கொண்ட, மயில் வடிவோடு என்றும் இருக்கவும், உமது திருவடிகள் எளியேன் மீது பதிந்திருக்க யான் அவற்றைச் சுமந்து திரியவும் அருள் புரிந்தருள்க!'' என்று வேண்டிக் கொண்டான். அதற்கு முருகன், ''வேண்டுவார் வேண்டுவன எல்லாம் அளித்தல் எமக்கு இயல்பேயாயினும், நீ அசுரனாக விளங்கிக் கொடிய பல அழிதகவுகள் செய்துள்ளாய். ஆதலின் அவைகள் முற்றும் அழியுமாறு மலைவடிவமாய் ஓராண்டு காலம் இருந்து கடுந்தவம் புரிந்தால், எம்மைத் தாங்கும் பேறு பெறுவாய்'' என்று அருளிச் செய்தார். அது கேட்ட சூரன், ''தேவரீர் பணித்தபடியே யான் தவம் புரிவேன். எவ்விடத்தில் தவம் புரிவதென்று அருளிச் செய்க'' என்று பணிந்து வேண்டிக் கொண்டான். அதற்கு முருகன், ''தொண்டை நாட்டில் பெண்ணையாற்றங்

கரைக்கு அருகே, மலைவடிவமாய் இருந்து தவம் செய்க'' என்று பணித்தருளினன். இவ்வாறு சூரபதுமனாகிய மயில், மலை வடிவமாக இருந்து தவம் புரிந்து அருள் பெற்றதனால், இத்தலத்திற்கு மயிலம் எனப் பெயரமைந்தது.

'' கற்பா கற்ப முடிவின்றிக்
கழறும் மயிலை மலை என்றே
நற்பேர் விளங்கக் கீர்த்திபெற்று,
நாதா நின்றன் மாதருடன்,
பொற்பாய் அமர்ந்தே அடியர்குழாம்
போற்ற நாளும் வரம்நல்கி,
நிற்பாய் உமைபாலா ! என்றான்,
நீல மயிலாய் நிலைநின்றான்''

எனவரும் மயூராசலப் புராணச் செய்யுளால், இவ்வரலாறு செவ்விதின் உணர்த்தப் பெறுகின்றது.

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

என்று, கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியர் பாடியருளியது போல, மிகவும் கொடியவனாகிய சூரபதுமனே அடியவனாக மாறி அன்புடன் வழிபட்டு, அருள் பெற்று உய்ந்த, மயிலம் என்னும் இம்மாட்சி மிகும் சிறந்த தலத்தில், நாமும் முருகனை அன்புடன் பணிந்து வழிபட்டால், நலங்கள் பலவும் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

படிவிழா :

முருகன், மலை நிலக் கடவுள் அல்லது குறிஞ்சிக் கிழவன் எனப்படுவான். முருகன் மலைமீது எழுந்தருளியிருத்தல் இறைவனின் பரத்துவ நிலையைக் குறிக்கும் அடையாளம் ஆகும். மலை மீதுள்ள முருகனை, நாம் படிகள் மீது ஏறிச் சென்று தரிசிக்கின்றோம். இதுவே படிவிழா என வழங்குகின்றது. இப் படிவிழா, ஆழ்ந்த நுண் பொருட் குறிப்புடையது. முருகன் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவன்; தத்துவாதீதன்! நாம் முருகனை அடைய வேண்டுமென்றால், தத்துவங்களைக் கடந்து சென்றே, தத்துவ அதீதனாக உள்ள அவனை அடைதல் வேண்டும். முருகன் 36 தத்துவங்களையும் கடந்து அப்பாற்பட்டு நிற்பவன். தத்துவப் படி நிலைகளைக் கடந்தால் முருகனை அடையலாம்.

'' ஆறுறையும் நீத்து அதன் மேல்நிலையைப்
பேறுஅடியேன் பெறுமாறு உளதோ ''

என அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியில் அருளிச் செய்திருப்பது, இவ்வுண்மையைச் செவ்விதின் விளக்குவதாகும்.

இக்கருத்தைச் சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்தில் மிக அரிய முறையில் விளக்கியருள்கின்றார். கண்ணப்ப நாயனார், நாணன் காடன் என்னும் வேடர்களுடன், காளத்தி மலையின் மீது ஏறிச் சென்று, அங்கே எழுந்தருளியிருக்கும் குடுமித் தேவரைத் தரிசித்து வழிபடச் செல்கின்றார். அதனைக்கூற வரும்போதுசேக்கிழார் சுவாமிகள், ''கண்ணப்ப நாயனார் தத்துவமாகிய படிகளின் மீது ஏறிச் சென்று அருள் வடிவினன் ஆகிய சிவ பரம் பொருளைச் சென்று அணைந்தார்'' என்கின்றார்.

'' நாணனும் அன்பும் முன்பு
நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும்
பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார
அணைபவர் போல, ஐயர்
நீள்நிலை மலையை ஏறி
நேர்படச் செல்ல லுற்றார் ''

எனவரும் சேக்கிழார் சுவாமிகளின் திருப்பாடல், படி விழாவின் தத்துவத்தைத் தெளிவுற உணர்த்தும் சிறப்பினதாகும்.

சேக்கிழார் பெருந் தகை தெளிவுற விளக்கிய இக்கருத்தினை, மேலும் தெள்ளிதின் விளக்குவது போல,

'' பேணித் தொழுமவர் பொன்னுலகு
ஆளப் பிறங் கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக்
கொடுத்து இமையோர் முடிமேல்,
மாணிக்கம் ஒத்து, மரகதம்
போன்று, வயிரம்மன்னி,
ஆணிக் கனகமும் ஒக்கும்,
ஐயாறன் அடித் தலமே''

என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்தலும், படிவிழாவின் தத்துவ நுட்பத்தினைச் சால்புற விளக்குகின்றது. ''மண்ணுலகில் உள்ள தன் அடியவர்கள், விண்ணுலகம் ஆகிய பொன்னுலகை ஆளும்படி, இறைவன் தன்னுடைய ஒப்புயர்வற்ற பேரருளால் ஏணி (சோபானம்) போன்ற படிநெறியினை அமைத்துக்கொடுத்து அருள்கின்றான்'' என்று, இப்பாடலில் திருநாவுக்கரசர் இனிது இயம்புகின்றார்.

முடிவுரை :

இத்தகைய சிறப்பு மிக்க படிவிழாவினை, குடியரசுத் திருநாளை முன்னிட்டு ஆண்டுதோறும் சிறப்புற நடத்தி வரும் அன்பர்களும், தவத்திரு சுவாமிகள் அவர்களும் செய்துவரும் சிறந்த தொண்டு, பெரிதும் போற்றத்தக்கது. இவ்விழாவில் கலந்து கொண்டு, மயிலம் முருகனைத் தரிசித்து மகிழும் வாய்ப்பினை எனக்கு நல்கிய உங்கள் அனைவருக்கும், என் அன்பும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வெட்டுத் தமிழ்

பேராசிரியர்: திரு. ச. அகத்தியலிங்கம், M.A., Ph. D.,
மொழிநூல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்க் கல்வெட்டுக்கள் பெரும்பான்மையும் கோயில்களில்தான் காணப்படுகின்றன. மொத்தம் ஒரு லட்சத்திற்கு மேல் கல்வெட்டுக்கள் உள்ளதாகவும், அவற்றுள் சுமார் இருபத்தையாயிரம் மட்டுமே கல்வெட்டுத் துறையினர் படி எடுத்துள்ளதாயும், அவற்றுள்ளும் ஏறக்குறைய ஐயாயிரம் கல்வெட்டுக்களே அச்சிடப்பட்டுள்ளதாயும் கூறுகின்றனர்.

தமிழகத்தின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் பெரும்பான்மையும் மலைச் சரிவுகளிலும் குகைகளிலும் காணப்படுகின்றன. பல்லவர் காலத்தின் இடைப் பகுதியிலிருந்துதான் கோயில்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் என்ற மூன்று பகுதி அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டிருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. ஆனால் கல்வெட்டுக்களிலிருந்து நேரே படிமம் எடுத்து படிக்கப் பட்டதன்று. அவற்றைப்பார்த்து, படித்து எழுதப் பட்டதாகும்.

பொதுவாகக் கல்வெட்டுக்கள் ஆராய்ச்சிக்குரிய கருவூலமாக இருக்கக் காணலாம். அவற்றில் பல துறை ஆராய்ச்சிக்குரிய சான்றுகள் உள்ளன. சான்றாக நாட்டு வரலாற்றுக்கும் (Political History), இலக்கிய வரலாற்றுக்கும் (History of Literature), சமூக வரலாற்றுக்கும் (Social History), மொழி வரலாற்றுக்கும் (History of Language), கல்வெட்டுக்கள் மூலப் பொருளாகப் பயன்படுகின்றன. இவற்றுள் முதலில் நாட்டு வரலாற்று ஆராய்ச்சிக்கே கல்வெட்டு பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. மொழியாராய்ச்சிக்குக் கல்வெட்டு பயன்படுத்தப்பட்டது மிக அண்மைக் காலத்தில்தான் ஆகும். அது சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இலண்டன் பல்கலைக் கழகத்தில் இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் கணபதியாப் பிள்ளை அவர்களால் துவங்கப்பட்டது.

அதற்குப் பிறகு பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் (முன்னாள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) ஆதரவில் பல ஆராய்ச்சி மாணவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் ஆறாம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களின் மொழியினைத் தற்கால மொழியியல் துணை கொண்டு ஆராய்ந்துள்ளனர். இன்னும் வேறு சில தமிழக அறிஞர் பெருமக்களும் வெளி நாட்டு அறிஞர்களும் இத்துறையில் உழைத்து வருகின்றனர்.

தமிழில் இலக்கியங்களின் மொழியை ஆராய்வதற்கு முன்னரே கல்வெட்டு மொழியை ஆராயத் துவங்கியது அதன் தனிச் சிறப்பாலே யாகும். மேலும் அது மொழியியலின் வளர்ச்சியையும் காட்டுவதாக உள்ளது.

மொழியாராய்ச்சி முதலில் வரலாற்று ஆராய்ச்சி (Historical Linguistics)யாகவே துவங்கியது. அப்போது மொழியியல் அறிஞர்கள் இலக்கியத்தில் காணப்படும் மொழியை மட்டுமின்றி, பேச்சு வழக்கிலும் கல்வெட்டிலும் காணப்படும் மொழியை அறிய ஆவல் கொண்டார்கள். காரணம் இலக்கிய மொழி பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டிருப்பினும் இன்று கிடைக்கும் வடிவத்தில் முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுதப்பட்டிருக்க முடியும். அதனால்தான் சங்க இலக்கியங்கள் பாடப் பெற்றது ஒரு காலத்தில் என்றும், இன்றுள்ள எழுத்து வடிவம் கொண்டது சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தான் என்றும் சுநீதிகுமார் சட்டர்ஜி போன்ற அறிஞர்கள் கருதுகின்றார்கள். ஆனால் கல்வெட்டு மொழியைப் பற்றி யாரும் அவ்வாறு ஐயம் கொள்வதில்லை. ஏனெனில் கல்வெட்டு,. எழுதப்பட்ட காலத்தில் உள்ள நிலையிலேயே இன்றும் உள்ளது. மேலும் இலக்கிய மொழி போன்று இடைச் செருகல் ஏற்படவும் வாய்ப்பில்லை. எனவே மொழியியல் அறிஞர்கள் கல்வெட்டு மொழியைப் பெரிதும் போற்றத் தலைப்பட்டார்கள்.

கல்வெட்டு மொழி பெரும்பான்மையும் பேச்சு வழக்கையொட்டி அமைந்துள்ளது. அதனால்தான் பல சொற்கள் பேசுவது போன்றே எழுதப்பட்டுள்ளது. ''தெற்கு'' என்பது ''தெக்கு'' என்றும், ''ஏற்றம்'' என்பது ''ஏத்தம்'' என்றும் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

மொழி காலந்தோறும் மாறுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. அதனால் கல்வெட்டு மொழியிலும் காலந்தோறும் மாறுபாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டில் அரிய இலக்கியத் தொடர்களும் பல நல்ல கலைச் சொற்களும் கையாளப் பட்டுள்ளன என்பது அறிதல் வேண்டும். ''முதுகண்'' என்ற தமிழ்ச் சொல் ''போஷகர்'' (Guardian) என்று இன்று வழங்கும் சொல்லிற்குப் பதிலாக வழங்கியுள்ளமையும்,

''பண்டாரம்'' என்ற சொல் ''கஜானு'' (Treasury) என்பதற்குப் பதிலாக வழங்கப் பட்டிருத்தலும் அறியத் தக்கன.

சட்டக் கருத்துக்களுக்குரிய சொற்களும் (Legal terms) கல்வெட்டுக்களில் காணப்படு கின்றன. ஒரு சொத்து ஒருவர்க்கு எல்லா உரிமையும் உடையது என்பதைத் 'தானுதி விளிய விக்கிரையங்களுக்கு உரியது' என்றும், நிலத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் அந் நிலம் வாங்குபவர்க்கு உரியது என்பதை 'இந் நிலத்து மேனேக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் மற்றும் எப்பேர்ப்பட்ட உரிமைகளும் அகப்பட விற்றுக் குடுத்தேன்' என்றும் குறிப் பிடுவது வழக்கம்.

இலக்கிய மொழியில் (Literary language) ஏற்பட்ட மாற்றத்தையும் அறியக் கல்வெட்டு உதவியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் பலரும் ''இவைகள்'' என்ற வடிவத்தை அஃறிணைப் பன்மைச் சுட்டுப் பெய ராக வழங்கி வருதல் கண்கூடு. அது, பேச்சு வழக்கில் (இதுக(ள்) என்றுதான் வழங்கி வரு கின்றது. 16-ஆம் நூற்றுண்டுக் கல்வெட்டு ஒன்றில் இவைகள் என்ற வடிவம் வந்துள்ள தால் இவ்வழக்கம் அப்பொழுதிருந்து பயிற்சி யில் இருந்ததாகக் கொள்ளலாம்.

ஒரு மொழி அது வழங்கும் எல்லா இடத் திலும் ஒரு மாதிரியாகப் பேசப் பெறுவதில்லே. இடத்திற்கு இடம் அது சிறிது மாறுபட்டு வழங்கும். அவ்வேறுபாடுகளேக் கிளேமொழி (Dialect)என்பர். முற்காலத்தும் தமிழ் அறிஞர்கள் இத்தகைய வேறுபாடுகளே உணர்ந் திருந்தனர் என்பதனைச் சோழ நாட்டுத் தமிழ், பாண்டிய நாட்டுத் தமிழ் என்ற வழக்குப் பயிற்சியால் அறியலாம். மொழியியல் ஆராய்ச் சியாளர்கள் மொழி என்று எடுத்துக் கொண்டு ஆராயும்போது ஒரு கிளேமொழியை அடிப்படை யாக எடுத்துக் கொண்டு ஆராய்வார்கள். ஒரு மொழியில் வழங்கும் பல கிளே மொழிகளேப் பற்றி ஆராயும் ஆராய்ச்சி (Dialectology) கிளே மொழியாராய்ச்சி என்ற தனிப் பிரிவாகவே வளர்ந்துள்ளது.

தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழகமெங்கும் காணப்படுவதால் அது கிளே மொழி ஆராய்ச் சிக்குப் பெரிதும் பயன்படும் எனலாம். திரு நெல்வேலியில் கிடைக்கும் பல கல்வெட்டுக் களில் 'கையாளுதல்' என்ற சொல்லும் ஏனைய இடங்களில் அப்பொருளேக் குறிக்க அனுபவித் தல் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள் ளன. கொங்கு நாட்டில் 'மக்கள் மக்கள்' என்ற சொல்லும், ஏனைய பகுதிகளில் அப் பொருளேக் குறிக்க, 'புத்திர பவுத்திர பரம் பரை' என்ற சொல்லும் வழங்கியுள்ளமை அறியத் தக்கது. இவ்வேறுபாடுகள் இடவேறு பாட்டால் வழங்கும் கிளே மொழி (Regional dialect) என்று கூறலாம். இவ்வாறே சமூக நிலேயில் வழங்கும் கிளே மொழி (Social dialect) பற்றியும் கல்வெட்டால் அறிய முடிகிறது. சில கல்வெட்டுக்களில் ''அவர்கள்'' என்பது 'அவாள்' என்றும், 'அவகள்' என்றும், பின் னது நடுத்தர வகுப்பினர் (வெள்ளாளர் போன் ருேர்) வழங்கும் தமிழ் என்றும் கொள்ளலாம்.

எனவே, கல்வெட்டில் பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும் கலந்துள்ளமை தெளிவா கும். பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும் தொல்காப்பியர் காலத்திலேயே வேறுபட்டிருந் தன என்பது, தொல்காப்பிய நூற்பாவால் அறிய லாம். சில இலக்கண விதிகள் வழக்கில் மட்டுமே உள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். சிறப்பு ஒருமை (Honorific singular) என்று வழங்கும் 'ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி யும் ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும் வழக்கினுகிய உயர் சொற் கிளவி' என்றும், 'இலக்கண மருங்கின் சொல்லாறல்ல' என்றும் கூறுவதால் அறியலாம். எனவே கல்வெட்டுத் தமிழில் அவ்விருகூறும் பெற்றுச் சிறப்புற்று விளங்குகின்றன.

தமிழில் உள்ள எல்லாக் கல்வெட்டுக்களே யும் சரியாகப் படித்து வெளியிட வேண்டியது மிக மிக அவசியம். அந்தப் பணியினே அரசாங் கம் மட்டுமின்றிப் பல்வேறு பல்கலேக் கழகங் களும், கோயில் நிர்வாகிகளும் ஏற்றுக் கொள் ளுதல் வேண்டும். அதன் பின் அவற்றில் உள்ள சொற்களின் அகராதி ஒன்று தயாரித்தல் அடுத்த முக்கியமான கடமையாகும். இது செம்மையாக நிறைவேறுமானுல் தமிழ் மொழி ஆராய்ச்சி வளர்ந்து சிறப்புறும் என்பதில் தடையில்லே.

"அண்டத்து அரும்பெறல் மேகன்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குரு வடிவில் வந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை, ''அண்டத்து அரும்பெறல் மேகன்'' என்று திருவாசகத்தில், திருவண்டப்பகுதி (66-95) என்னும் அகவலில், சிறப்புறப் போற்றி யுள்ளார். இறைவனை ஓர் அரும்பெறல் மேக மாக உருவகம் செய்து, முப்பத்தொரு வரிகளில் மிக விரிவாகவும், அழகாகவும் மாணிக்கவாசகர் விளக்கியருளியிருக்கும் திறம், பெரிதும் வியந்து நயந்து சுவைக்கத் தக்கதாக விளங்குகின்றது. அவ்வரிகளின் திரண்ட பொருட் சுருக்கம் வரு மாறு :

பாடலின் பொருள் :

''மிக மேலான இன்பப் பழங்கடல் ஆக விளங்கும் சிவமானது, கரிய பெரிய முகில் போலத் தோன்றி, திருப்பெருந்துறை என்னும் மலையின்மீது ஏறி, விந்து தத்துவம் ஆகிய மின்னல் ஒளியினை, எல்லாத் திசைகளிலும் பரவுமாறு செய்து, ஐம்புல அவாக்கள் ஆகிய பாம்புகள் இரியவும், உலகியற் றுன்பங்களாகிய கோடைகால வெம்மை ஒழியவும், அருள் மழை யினைப் பொழிந்தது.

''மழை பொழியுங்கால், மின்னலும் இடி யும் தோன்றுதல் இயல்பு. சிவம் அருள்மழை பொழியுங்கால், விந்து தத்துவம் மின்னலாக மின்னியது; நாததத்துவம் இடியிடித்தாற் போல முழங்கியது. மின்னியும் இடித்தும் மழை பொழியும் நிலையில் இந்திர கோபப் பூச்சிகள் பரவிப் பெருகும். உயிர்களின் அளவில்லாத பிறவிகள் இந்திர கோபப் பூச்சிகள் போல மிகுந்து காணப்படுகின்றன. கார் காலத்திற் குரிய தோன்றிப் பூக்கள் மலர்வது போல, அச்சிவத்தின் 'அஞ்சல்' என்ற திருக்கை விளங் கியது. காந்தள் மலர்களைப் போல, அடியார் களின் கூப்பிய கைகள் திகழ்ந்தன. அருள் ஆகிய வெள்ளம், இன்பச்சுழிகளைச் சுழல விட்டுக் கொண்டு பெருக்கெடுத்து ஓடுகின்றது''

''இவ்வருள் வெள்ளத்தின் நீரைத் தலைப் பட்டுப் பருகுதற்குத், தவப்பேறு ஒரு சற்றும் வாய்க்காத பேதை உயிர்கள் ஆகிய மான் கூட்டங்கள், பிறவித் துன்பமாகிய நீர்விடாய் மேற்கொண்டு, அறுவகைப் பொய்ச் சமயங்க ளாகிய கானல் நீரினை உண்மை நீர் என்று மயங்கி, அலைந்து திரிந்து வருந்துகின்றன.''

''இந்நிலையில் அருள் வெள்ளமானது பெருகுதலால், மலப்பிணிப்பு ஆகிய பந்தம் என்னும் ஆற்றின் கரைகள், இருபுறத்தும் இடிந்து சிதைந்து அழிகின்றன. இரு வினை களாகிய மாமரங்கள் வேரோடு பறித்து வீழ்த் தப்படுகின்றன. இவ்வருள் வெள்ளத்தினை அடியார்கள், தங்கள் உள்ளமாகிய பெரிய குளங்களில் நிரப்பிக் கொள்கின்றனர்.''

''அங்ஙனம் நிரப்பிக் கொண்ட அடியார் களாகிய உழவர்கள், வழிபாடு என்னும் வயலில், அன்பு என்னும் விதையினை விதைத்து, பேரின் பம் ஆகிய பயிர் விளையும்படி செய்து, சிவ போகம் என்னும் சிறந்த பயனை நிரம்பத் துய்த்து மகிழ்கின்றனர்.''

''இங்ஙனம் அருச்சனையாகிய வயலில், அன்பு ஆகிய விதையை விதைத்து, தொண்டர் கள் ஆகிய உழவர்கள், அநுபவித்து இன்புறும் படி தந்த, அண்டத்து அரும்பெறல் மேகன் ஆகிய சிவபெருமான், நீடு இனிது வாழ்க!''

என்பது, மேலே குறிப்பிடப் பெற்ற திருவாச கத்துத் திருவண்டப் பகுதி வரிகளின் திரண்ட பொருள் ஆகும். பொருள் பொதிந்த, அந்தச் சிறந்த இனிய அழகிய வரிகள் வருமாறு :

திருவண்டப் பகுதி வரிகள் :

''பரமா னந்தப் பழங்கடல் அதுவே,
கருமா முகிலில் தோன்றித்,
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்,
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய,
ஐம்புலப் பந்தனை வாள்அரவு இரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி வாள்ஒளி மிளிர,
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து,
முரசு எறிந்து
மாப்பெருங் கருணையின் முழங்கிப்,
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட,
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை
தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி,
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்,
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன;
ஆயிடை வானப்பேர் யாற்று அகவயிற்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்,
சுழித்தெம் பந்தமாக் கரைபொருது அலைத்து இடித்து
ஊழூழ் ஓங்கிய நங்கள்

இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து,
உருவ அருள்நீர் ஓட்டா, அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி, மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி, நிறைஅகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி,
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்,
தொண்ட உழவர் ஆரத் தந்த,
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க!''

இலக்கியச் சுவைத்திறன் :

இவ்வினிய அழகிய பகுதியின்கண், எல்லாம் வல்ல இறைவனை அவன்றன் பேரருட் பெற்றிமை பற்றி, மேகம் என்று குறிப்பிட்டுச் சிறப்பித்து உரைக்கத் தலைப்பட்ட மாணிக்க வாசகர், அவ்வடிப்படைக் கருத்தினையே படிப்படியே தொடர்புடைய, கடல்—மலை—மின்னல்—இடி—அரவு—கோடை—மழை—தோன்றிப்பூ—தம்பலப் பூச்சி—காந்தள் மலர்—வெள்ளம்—சுழி—கரை—மரம்—கானல் நீர்—மான் கூட்டம்—குளம்—வயல்—உழவர்— விதை —பயிர் என்னும் பலவற்றையும், ஒரு தொடர்பு படத் தொகுத்தமைத்து வரிசையாக்கி, அவைகள் பலவற்றினையும் அழகுற இணைத்துப் பிணைத்து, நீண்டதோர் உருவகம் (Sustained Metaphor) செய்து, இறைவனின் திருவருட் சிறப்பினை விளக்கியுள்ள திறம், அறிஞர் அனைவருக்கும் கழிபெருஞ்சுவை பயக்கும் இலக்கிய நலம் செறிந்த தொன்றாகும். திருவாசகத்தின் இலக்கியச் சுவை நலத்தின் திறத்திற்கு, இஃது ஒரு சிறந்த இனிய அரும் பெறல் எடுத்துக் காட்டு எனலாம்.

உருவகம் :

கவிஞன் தன் உள்ளத்தில் தோன்றும் நுண்ணிய கருத்துக்களை, ஏனையோர் உள்ளங்களிலும் நன்கினிது பதியும்படி, ஓர் உருவம் கொடுத்துத் திண்ணிய பொருளாக்கி, அழகும் சுவையும் அமையுமாறு வெளிப்படுத்துகின்ற ஓர் அரும்பெறல் அணியே, உருவகம் எனப்படும். கவிதைத் துறையில் உருவகம் என்னும் அணியானது, மிகவும் முதன்மையும் சிறப்பும் அருமைப்பாடும் வாய்ந்தது.

அருவமாகவும் நுண்மையாகவும் திகழும் கருத்துக்களுக்கும், பண்புகளுக்கும் ஓர் அழகிய பருவடிவம் படைத்துக் கொடுத்து, அவற்றை அனைவருடைய மனக்கண்ணுக்கும் புலப்படுமாறு கொணர்ந்து நிறுத்தி விளக்குவது, உருவக அணியின் சிறப்பியல்பாகும். இத்துணைச் சிறந்த உருவகங்களை, மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையனவாகக் கையாளும் திறன், பெரும் புலமை நலம் எய்தப் பெற்ற ஒரு சில மேதைகளுக்கே அமைந்து இயலும்(1).

உருவக வகைகள் :

இத்தகைய சிறந்த புலமை நலம் கைவரப் பெறாதவர்களுக்குத் தம்முடைய கவிதைகளில் உருவகம் புணர்த்தல், எளிதில் இயலமாட்டாது. மிக முயன்று ஒரோவழி உருவகம் புனைந்தாலும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதை போல, அஃது ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற் சென்று, வேறு பிறிதொன்றாகி, அறவே பிழைபட்டு முடிந்தொழியும். இன்னோரனைய பிழைபட்ட உருவகங்களையே, ''கலவை யுருவகம்'' (Mixed Metaphor) என்பர் அறிஞர்.

> "I smell a rat; I see it in the air; I will nip it in the bud"

என்னும் ஆங்கில மொழி வாக்கியம் போல்வன, இக்கலவை யுருவகத்திற்குப் பொருத்தமான நல்ல எடுத்துக்காட்டாகும்.

இங்ஙனம் ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற்குச் சென்று, பின் வேறொன்றாக முடிந்து பிழைபட்டொழியாமல், ஒன்றோடு ஒன்று இயல்பான தொடர்பும் இயைபும் பொருந்துமாறு, திறன் தெரிந்து தேர்ந்து அமைத்தல், சிறந்த கவிஞர் பெருமக்களுக்கே செவ்விதின் வாய்க்கும். இதனை இயைபு உருவகம் என வழங்குவர்.

மேலும் இவ்வியைபு உருவகத்தினையே அரைகுறையாகச் செய்து விடுக்காமல், முழுவதும் அமைந்து பொருந்துமாறு முற்றாக எடுத்து, நீளப் பிணைத்துத் தொடுத்து முடித்தல் என்பது, ஓர் அரிய பெரிய கலைத்திறன் என்பதில் ஐயமில்லை.

இங்ஙனம், எடுத்த ஒரு கருத்தினையே படிப்படியாக வளர்த்துப் பொருத்தமுற இயைத்து, நீள நெடுகத் தொடுத்து முடிக்கும் உருவகம் முற்றுருவகம் (Sustained Metaphor) எனப் பெயர் பெறும்.

இயைபு முற்று உருவகம் :

தனித்தனியே பல இடங்களிலும் சிதறிப் பிரிந்து கிடக்கும் பொருள்களை யெல்லாம், ஒருங்கே தொகுத்துத் தொடர்புபடுத்தி, அவ்வருங்கலைத் திறத்தால், நம்மனோரின் சிந்தனையுணர்வுக்குத் தெவிட்டாத விருந்தளித்து, உவகைச் சுவையூட்டி நிற்கும் மாட்சிமையுடையது, இயைபு முற்று உருவகம் என்னும் அணி(2).

---

(1) Metaphor is by far the most important figure of speech in poetry. Figures are the products of an emotional state. A thing is visualised as the symbol of an attribute; that is the essence of a metaphor. When Wordsworth calls the daisy, "a nun", he presents to us the picture of modesty, shyness, gentleness and purity. The greatest of all excellences is to be happy in the use of a metaphor. It is certainly a mark of great genius.''

—DOROTHY WILSON.

(2) "Metaphor is the supreme agent by which disparate and hitherto unconnected things are brought together in poetry for the sake of the effects upon attitude and impulse which spring from their collocation and from the combinations which the mind then establishes between them.''

—DR. I. A. RICHARDS.,

Principles of Literary Criticism, p. 239.

திருவண்டப் பகுதி என்னும் திருவாசகப் பாடலின்கண், இத்துணைச் சிறந்த இயைபு முற்றுருவக அணியானது, இணையற்ற எழில் மிக்க முறையில் அமைந்திருப்பது, திருவாசகத்தின் இலக்கியத் திறனை விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

உருவகப் பொருத்தம் :

(1) மாணிக்கவாசகர் சிவபெருமானைப் ''பரமானந்தப் பழங்கடல்'' எனக் குறிப்பிடுகின்றார். கடல் எல்லையற்றுப் பரந்து விரிந்து விளங்குவது. இறைவனும் அத்தகையவன். உலகைச் சூழ்ந்து கிடக்கும் கடல்களின் வேறு பிரித்து, இறைவனை உணர்த்துவதற்காகப் 'பழங்கடல்' எனவும், 'பரம ஆனந்தக் கடல்' எனவும் சிறப்பித்தார்.

(2) கடல் நீரே மேகமாக மாறி வருதல் போல, இறைவனே குரு வடிவத்தில் தோன்றி எழுந்தருளிப் போந்த அருமைப்பாடும் சிறப்பும் விளங்க, 'அண்டத்து அரும்பெறல் மேகன்' என்றார். மழை பெய்து உலகைக் காக்கும் மேகம், அருள் சொரிந்து உயிர்களைக் காத்து நலம் புரியும் இறைவனின் இயல்புக்கு ஒருபுடை உவமையாகும். மேகம் போன்று வரையா வண்மையுடைய இறைவன், 'மேகன்' எனச் சிறப்பிக்கப் பெற்றான். அவனது அருமையும் பெருமையும் முறையே, 'அரும்பெறல்' 'அண்டத்து' என்னும் அடைமொழிகளால் உணர்த்தப்பெற்றன.

(3) மேகம் ஒரு மலையைச் சென்று சார்ந்து, அங்கே தங்கிப் படிந்து மழைபொழியும் தன்மையதாதல் போல, இறைவன் குரு வடிவம் கொண்டுதிருக்கயிலையினின்று பெயர்ந்து சிறப்பு மிக்க திருப்பெருந்துறைக்குப் போந்தருளினன் ஆதலின், அத்தலத்தினை மலையாக உருவகம் செய்து 'திருவார் பெருந்துறை, வரையில் ஏறி' என்றார்.

(4) மேகம் மலையின்கட் சென்று தங்கி மழை பெய்யத் தலைப்படுங்கால், மின்னல் ஆகிய ஒளியைத் தோற்றுவிக்கும்; அதுபோல இறைவன் குருவடிவம் கொண்டு போந்து, தனது பேரெழில் ஒளி வடிவைக் காட்டினனாகலின், அதனைத் 'திருத்தகும் மின்னொளி' என்றார்.

(5) மேகத்தினின்று மழை பொழியத் தலைப்படுங்கால், மின்னலுடன் இடி முழக்கமும் நிகழ்தல் இயற்கை. அதுபோல இறைவனின் திருவுருவக் காட்சி எய்தும் பேறு பெற்ற அடியவர்களுக்கு, அவ் இறையருளால் மணி கடல் யானை குழல் மேகம் வண்டு தும்பி வீணை பேரிகை யாழ் என்னும் தசவித நாதங்கள் முழங்குதல் கேட்கப் பெறும் ஆதலின், அவ்வனுபவத்தினை 'முரசு எறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கி' என மாணிக்கவாசகர் மொழிந்தருள்கின்றார்.

(6) மேகம் மழை பொழியுங்கால் நிகழும் மின்னலொளியும், இடிமுழக்கமும் காரணமாகப், பாம்புகள் இறந்துபட்டு அழிவது இயல்பு. அம்முறையில் இறைவனின் திருவுருவக் காட்சியும், திருவருட்பேறும் தலைப்பட்ட அடியவர்களுக்கு, தம்மைக் கட்டுறுத்திப் பிறவியின்கண் செலுத்தி வந்த பந்தனைகள் ஆகிய ஐம்புல அவாக்கள் அறவே நீங்கி அழிந்தொழிதல் பற்றி ''ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய'' என்றார்.

(7) மேகம் மழை பொழியத் தொடங்கினால், கோடை காலத்தில் வெப்பம் குறைந்து தணிவு எய்தும். அது போன்றே இறைவனின் திருவருளுக்கு உரியவராயின பின், அடியவர்களின் துயரங்களும் முடிவெய்தும். இவ்வுண்மை ''வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப'' எனச் சுட்டப்பெற்றது.

(8) மேகம் மழை பொழிகின்ற கார் காலத்தில், தோன்றியும் காந்தளும் ஆகிய பூக்கள் மலரும்; இந்திர கோபப் பூச்சிகள் எங்கணும் தோன்றிப் பறந்து விரைந்தழியும். மாணிக்கவாசகர்க்கு இறைவன் குரு வடிவில் எழுந்தருளி, 'அஞ்சேல்' என்று காட்டியருளிய திருக்கையாகத் தோன்றிமலரும், இறைவனைக் காணப் பெற்று வணங்கிய அடியார்களின் கூப்பிய கைகளாகக் காந்தள்மலரும், இறைவனின் அருளை எய்தப் பெற்றதனால் அடியவர்களின் பிறப்பிறப்புக் கவலைகள் அழிந்தொழிதலாக இந்திர கோபப் பூச்சிகள் (ஈயல்) பரவி அழிதலும், பொருத்தமுற உருவகம் செய்யப் பெற்றுள்ளன.

(9) கார் காலத்தில் மழை பொழிவதற்கு முன்னர், வேனிற் காலத்து வெயிலில், காடுகளிலுள்ள மான் கூட்டங்கள் நீர்விடாய் கொண்டு, பேய்த் தேர் (Mirage) ஆகிய கானலினை, நீர் என்று மயங்கித் தேடி ஓடி அலைந்து திரிந்து வருந்தும். அறுவகைச் சமயத்தவர்களை மான் கூட்டமாகவும்; அவர்தம் பொருந்தாக் கொள்கைகளை நீர்விடாய் தணித்தற்குதவாத கானல் நீராகவும், இங்கு மாணிக்கவாசகர் உருவகம் செய்துள்ளார்.

(10) மழை பொழிதலினால் ஆற்றில் நீர் பெருகுதலை அருள் வெள்ளம் என்றும், அதன் கண் சுழிகள் கொழித்தலை இன்ப மேலீடு என்றும், இரு கரைகளும் சரிதலை உலகியற் பந்த பாசங்களின் ஒழிவு என்றும், இரு கரைகளிலுமுள்ள மரங்கள் வெள்ளப் பெருக்கால் வேர் அற்றுச் சாய்ந்து விழுதலைப் புண்ணிய பாவங்களாகிய இரு வினைகளும் நீங்குதல் என்றும், வெள்ள நீர் பாயப் பெறும் வயல்களை அருச்சனையாகிய வழிபாடு என்றும், விதையினை அன்பு என்றும், அடியார்கள் ஆகிய தொண்டர்களை உழவர்கள் என்றும், பிறவாறும் ஏற்றபெற்றி பொருத்தமுற உருவகித்திருக்கும் மாணிக்கவாசகரின் புலமை மாட்சிமை, பெரிதும் புகழ்ந்து போற்றற்பால தொன்றாகும்.

திருவண்டப்பகுதியின் சிறப்பு:

கவிஞனின் தூய சிறந்த உணர்ச்சியானது உந்தப் பெற்று, மேலெழுந்து பொங்கி ஆற்றலுடன் வெளிப்படும்போது, அழகிய இனிய அரிய சொற்களும் சொற்றொடர்களும், அக்

கவிஞன் ஒரு சிறிதும் முயற்சி செய்ய வேண்டாமல், தாமே தம்முள் இகலிக் கொண்டு முன் வந்து நின்று, ஏவல் கேட்டுப் பணி புரியும் நிலையில், அவன் பாடும் கவிதைகளில் மிகவும் சிறப்புற அமைந்து திகழும் என அறிஞர்கள் கூறுவர்.(3)

அவ்வுண்மைக்கு ஏற்பவே, இத் திருவண்டப்பகுதி அகவற் பாவின் சொற்களும், சொற்றொடர்களும் சுவை நிரம்பி, எளிதினிது பொற்புற அமைந்திருக்கின்றன. இனிய சிறந்த இவ்வியல்பு, நினைத்தொறும் நினைத்தொறும் நம்மனோர்க்கு இன்பம் விளைவிக்கின்றது. இச்சிறப்பெல்லாம் கருதியே, மேலைநாட்டுப் பேரறிஞர் ஆகிய திரு ஜி.யு. போப் அவர்கள், இத் திருவண்டப் பகுதியின் வரிகளை மிகச் சிறப்பாக விதந்தெடுத்து வியந்து போற்றியுள்ளார்(4).

முடிவுரை:

இதுகாறும் கூறியவாற்றால், தாலிபுலாக நியாயம் பற்றித் திருவாசகத்தின் இலக்கியத் திறம் இணையதென்று யாவரும் கருதியுணரலாம். இத்தகைய இலக்கியச் சுவையும் பக்திச் சுவையும் ஒருங்கே கலந்து நிறைந்து, இணையற்று விளங்கும் செந்தமிழ்த் தெய்வப் பனுவல் ஆகிய திருவாசகத்தினை, நம்மனோர் அனைவரும் பலகாலும் ஓதிப் பயின்று, நலங்கள் பெற்று மகிழ்வோமாக!

''திருக்குறள்போல் நீதிநூல்:
சிவஞான போதம்போல்
பெருக்கமிகும் மெய்ப்பொருள்நூல்;
பீடுயர் தொல்காப்பியம்போல்
திருத்தமிகும் இலக்கணநூல்;
சிறந்த திருவாசகம் போல்
உருக்கமிகும் இலக்கிய நூல்;
உலகினில்வே றெங்குமில்லை!''

—ந. ரா. முருகவேள்

---

(3) "When the moment of intense feeling comes, fine phrasing is out of question.''

—P. H. B. Lyon.

The Discovery of Poetry, p 184.

(4) "Lines 66—95 are well-nigh untranslatable for they contain a subtle and intricate allegory, by means of which the grace of the manifested Sivan, who is praised under the title of the 'Cloud' is set forth.... In these profound and pithy lines, every particular of the description has its mystical meaning....

—Dr. G. U. Pope.

நூல் விற்பனை

தமிழ்நாடு தேர்வுக் குழு (Tamil Nadu Public Service Commission)வின் மூலம் நடத்தப்பெறும் அறநிலையத் துறைச் செயல் அலுவலர்கள் நியமனத் தேர்விற்குப் பாடப் புத்தகமாக அமைக்கப் பெற்றுள்ள ''சைவம்—வைணவம்'' (Treatise on Saivam & Vaishnavam) என்னும் நூல், தற்பொழுது விற்பனைக்குத் தயாராக உள்ளது. ஒரு பிரதியின் விலை ரூபா 5/-. தபால் செலவு தனியே ரூபா 1.50. புத்தகம் வேண்டுவோர்,

''துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி அவர்கள்,
அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி கோயில்,
பழநி, மதுரை மாவட்டம்—624 601''

என்னும் முகவரிக்குப் பணம் அனுப்பிப் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

—ஆசிரியர்.

ஆலய—நகர அமைப்புக்கள்

சிவஸ்ரீ எம். ஐயாமணி சிவம், திருவாடானை.

கல்லா னிழல்மலை வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே

சத்தெ னச்சொலுந் தாவில் சிவத்திலுஞ்
சித்தெ னச்சொலுந் தேவி 'யிடத்திலும்
புத்தி ரப்பெயர் பூண்டிலகு ஆனந்த
வத்து வின்கழல் வாழ்த்தி வணங்குவாம்

முன்னுரை :

உலகத்து உயிர்களெல்லாம் உய்தி பெறுவான் வேண்டிக் கருணைக் கடலாகிய தாண்டவேசுவரப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்த நூல்கள் வேத சிவாகமங்களாகும். அவ்வருள் நூல்களில் வேதம் பொது நூலெனவும், சிவாகமங்கள் சிறப்பு நூலெனவும் திருமுறைகள் பேசா நிற்கும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த உண்மை ஞான நூல்களின் பொருளை மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து, நல்வாழ்வு வாழ வேண்டும் என்று திருவுளத்தில் முகிழ்த்தெழுந்த பெருங் கருணையினாலே சிவபெருமாள் திருவாய் மலர்ந்தருளிட் செய்த சைவாகமங்களில் காணப்பெறும் பல்வேறு விஷயங்களில் உடம்பெடுத்த மக்கள் அனைவரின் வாழ்விற்கும் உறுதுணையாகி நகர கிராமங்களின் அமைப்பும் உயிரனைத்தும் உய்தி பெற ஆலயங்களும் இன்றியமையாதன என்பதை ஓர்ந்து நகர அமைப்புக்களும் ஆலய அமைப்புக்களும் சிறப்புற எடுத்துச் செல்லிதின் விளக்கப் பெற்றுள்ளன. வேதப் பசுவின் பாலாகிய சிவாகமக் கடலுள் எளியேன் புகுந்து தேடுதற்குக் குருவருளும், அதன் பயனாகிய சிவ ஞானமாகிய பேறுகளாம் மணிகளும் கிட்டும் என்ற ஆசையால் ஆழ்கடலில் ஆழ அமுக்கி முகந்த நாழி நீர் போல, என்னறிவுக் கெட்டிய வாறு எழுதிய இக்கட்டுரையை இங்குச் சமர்ப்பிக்கிறேன். பிழை பொறுத்துச் செம்மை செய்வது அறிஞர் கடன் என்று தெரிவிக்க என்னுள்ளம் நாணுகிறது. ஏனெனில்,

கருவிக ளனைத்து மென்னுட்
கலந்துநின் றியக்கா நிற்கும்
ஒருவனை யன்றி யானே
யுஞற்றுத லின்மை யாலே
மருவுமென் பாடற் குற்றம்
பொறுமென மதிக்க நாணி,
திருவமர் கல்வி சான்றோர்
திறத்தொன்றும் செப்பிலே னால்''

என்ற இனிய பாட்டு எனக்கு நினைவுக்கு வருகிறது. அதன்படி செய்தும் செய்வித்தும், சொல்லியும் சொல்வித்தும் எல்லாம் நிகழ்த்துபவன் எம்பெருமானே ஆதலால் என்க.

மக்கள் நலத்திற்குரிய ஆலயங்கள் அமைத்தற்கு நகரங்கள் இன்றியமையாதன. ஆகலின் முதற்கண் நகர அமைப்பினை விளக்கிப் பின்னர் ஆலயங்களின் அமைப்பினை எழுத முற்படுகின்றேன்.

சைவாகமங்கள் :

சைவாகமங்கள் சர்வேசுவரனால் அருளிச் செய்யப் பெற்ற பெருஞ் சிறப்பினையுடையது. இவை காமிகம், முதல் வாதுளம் ஈறாக 28 பகுப்பினை உடையன. ஆதிப்படைப்பின் ஆரம்பத்தில் சிவசக்தியின் சேர்க்கையினின்றும் தோன்றிய யோக மாயையினால் சிருஷ்டியின் வித்து கலக்கப் பெற அதில் தோன்றிய ஒலியே பின்னர் பிந்துவாகி, சக்தி வடிவங்களாக 50 அக்கரங்களாயின. அவைகள் இணைந்து பதங்களாகவும், சொற்களாகவும் விரிந்தன: இதனை,

ஐம்ப தெழுத்தே யனைத்து வேதங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே

என்ற திருமூலர் திருவாக்கால் அறியலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த சைவ ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பாதங்களைக் கொண்டன. அவற்றுள் கிரியை என்ற பகுதியில் (கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம்) பெறுதல், நிறுத்துதல், விழாக் காண்டல், கழுவாய் என்ற நால்வகை முறைகள் பேசப்படுகின்றன. அவற்றுள், காமிகாகமத்தில், கர்ஷணம் என்ற தலைப்பின் கீழ் கிராம, நகர, ஆலய அமைப்புக்கள் மிகவும் விரிவாகக் காணப்பெறுகின்றன. காரணாமகம், சுப்ரபேதாகமம் கிரணாமகம் முதலிய சைவ ஆகமங்களிலும் ஓரளவு கூறப்பட்டுள்ளன. சிவாகமங்கள் முழுவதும் இக்காலத்தில் காண்பது அருமையாகிவிட்டதால் முற்றிலும் ஆராய்ந்து எழுத முடியவில்லை.

நகர அமைப்பு :

இந்த முறைகள் சைவாகமங்கள் தவிர மற்றும் வேதத்தின் அங்கமாகிய கல்ப சூத்திரங்களிலும், சிற்ப நூல்களாகிய பானுசாரம் மயமதம், மகாவிஸ்வகர்மீயம், வாஸ்துவித்யை, காசிபம், முதலியவற்றிலும் கௌடில்யர் அர்த்த சாஸ்திரம், சுக்ரநீதி இவைகளிலும், புராணங்களிலும், ஆங்காங்குப் பேசப்படுகின்றன. முதலாவதாக சைவ ஆகமங்களில் காணப்படும் முறைகளை ஆய்வோம்.

1. கால நிர்ணயம் :

நல்ல சுபகரமான உத்தராயணத்தில் மார்கழி மாசி என்ற இரண்டு மாதங்கள் நீங்கலாக சுக்ல பட்சத்தில் பிரதமை, சஷ்டி, அட்டமி, நவமி, சதுர்த்தசி திதிகள் நீங்கலாக மற்றைய சுப திதிகளில், அனுஷம், புனர்வசு, மகம், அசுவதி, ரோகணி, சுவாதி, மிருகசீரிடம், திருவாதிரை, ஹஸ்தம் உத்தரத்திரயங்கள், ரேவதி, திருவோணம் முதலிய புண்ணிய நட்சத்திரங்களில், புதன் வெள்ளி வியாழக்கிழமைகளில் சுப லக்னத்துடன் ஜீவதிருஷ்டிகளுடன் கூடிய சுப வேளையில் அரசன் அல்லது எஜமானர் கிராமம் முதலியவைகளில் ஜன்ம நட்சத்திரங்களுக்கு அனுகூலமான தினங்களில் தொடங்கப் பெறுதல் வேண்டும்.

2. கிராம நகர பேதங்கள் :

இவை நகரம், பட்டணம், துர்க்கம் அல்லது சேனுமுகம், ராஜதானி, கேடம், கர்வடம், சிபிரம், புரம், குடிகம், கிராமம் என்று பத்து விதங்களாகக் காணப்படுகின்றன.

1. கிராமம் : இவைகள் சுமாப 15 பகுப்புகளாக மண்டனக் கிராமம், சதுர்முக கிராமம், மங்கள கிராமம், விஸ்வேசக் கிராமம், நித்யமங்கள கிராமம், கரவட கிராமம், வஸந்த கிராமம் என்பன முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

2. நகரம் : பல்வேறு தொழிற்சாலைகளும், அரசாங்க நிர்வாக மாவட்டத் தலைமை அலுவலகங்களும், கலைச் செல்வங்களும், காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத் தலை நகராகும்.

3. பட்டணம் : நதிகள், கடற்றுறை முகங்கள், வியாபாரத் தலைமை நிலையங்கள், கருவூலங்கள், ஆபரணத்தொழிற் கூடங்கள், நெசவு சாலைகள், அயல்நாட்டு வர்த்தகர் தங்கும் இடங்கள், மாவட்டத் தலைமை அதிகாரிகள், சுங்க அதிகாரிகள் தங்குமிடங்களுடன் கூடிய நகரைக் குறிக்கும்.

4. கர்வடம் : சுமார் 500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்களும், ஆறு, காடு, மலை இவைகளின் சமீபத்தில் உள்ளதுமான இடமாகும்.

5. புரம் : இது சாமான்யமாகவுள்ள சுமார் 200க்கு மேற்படாத கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள் வசிக்குமிடமாகும்.

6. கேடம் : ஆற்றங்கரை மலையுச்சிகள் இவைகளில் பிரிந்து பிரிந்து குடிசை கட்டி வாழும் மக்களின் இருப்பிடம்.

7. குடிகம் : இது தாழ்ந்த குடிமக்கள் என்று முன்னுளில் கருதப்பட்டு வந்த ஒருசில மக்கள் வசிக்கும் சேரிகள் அமைந்த இடம்.

8. சிபிரம் : எப்பொழுதும் நாட்டுப் பாதுகாப்பிற்காக, யுத்த வீரர்களைச் சேர்த்தும் தயார் செய்வித்தும் சேனுமுகத்தின் சுற்றுப் புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடமாகும்.

9. ராஜதானி : அரசருடைய மாளிகையும் மற்றும் மந்திரிகள் பிரதானிகள் சேனு வீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களுடன் சுமார் இரண்டு லட்சம் ஜனத் தொகைக்கு மேற்பட்ட நால்வகை ஜாதியினரும் வாழுமிடம்.

10. சேனுமுகம் அல்லது துர்க்கம் : நாட்டின் பாதுகாப்பிற்காக உள்ள நான்கு பக்கங்களிலும் கோட்டைகள், பொறியியல் யந்திரங்கள், யுத்ததளவாட உற்பத்தி சாலைகள், யுத்த வீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலியவற்றையுடைய ராஜதானியை, அடுத்துள்ள இடமாகும்.

3. பூமி பரீட்சை :

பூமியானது, அதன் கண்ணுள்ள மரங்களாலும், செடி கொடிகளாலும் அதில் வாசம் செய்யும் மிருகங்கள் பட்சிகளாலும் மண்களின் நிறத்தாலும் வாசனையாலும் ருசிகளாலும் 12 பேதங்களாகப்பேசப்படுகின்றன. அவையாவன: சைவம், பிராம்ஹம், வைஷ்ணவம், ஐந்திரம், யட்சம், பௌதிகம், ஆஸுரம், பைசாசம், ராட்சஸம், வாயவ்யம், வாருணம்; ஆக்னேயம் எனப் பன்னிரண்டு ஆகும்.

மருது, அரசு, விளா, அசோகம், தாழை, நிலத்தாமரை, துளசி, அருகு முதலிய மரம் செடிகளும், செம்போத்து, கிளி, அன்னம் முதலிய பறவைகளும், பசு ஆடு முதலிய மிருகங்களும் வசிக்கும் பூமி சைவ பூமியாகும். வில்வம், புரசு, தர்ப்பை, குசம், நாணல் முதலியனவும், ஹோமத்திற்குரிய சாமான்களும் கிடைக்கும் பூமி பிரம்ம பூமி ஆகும். இதைப் போலப்பலவிதமான அடையாளங்களாலும் பூமிகளின் பேதங்களைக் கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்தப் பூமிகளில் ஆஸுரம், பைசாசம், ராட்சஸம் என்ற பூமிகள் கிராம நகரங்கள் அமைத்தற்குக் கூடாவாம். இந்த வித பூமிகள் நிறங்களால் நான்கு வகைப்படும். இவ்வாறு சோதிக்கப்பட்ட பூமியின் மண்கள் ருசியாலும் மணத்தாலும் சோதிக்கப்பட வேண்டும்.

நல்ல மல்லிகை, புன்னை, தாமரை, நெல், பாதிரி முதலிய வாசனையுள்ள பூமி உயர்ந்தது; எல்லா தான்யங்களும் விளையக்கூடியது. தேன், வெல்லம், எண்ணெய்ச் சிக்கு, பிணம் முதலிய வாசனை உள்ளது நீக்கப்படத் தக்கதாகும் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது.

குறிப்பிட்ட நல்ல பூமியை முழங்கால் அளவு தோண்டி அதே மண்ணைக் கொண்டு அந்தப் பள்ளத்தை நிரப்ப மண் மிகுதியானுல் உத்தமம், சரியானுல் மத்திமம், குறைந்தால் அதமம்; அதமம் கூடாது.

நீர் பரீட்சை :

மேலே சொன்னபடி முழங்காலளவு பள்ளம் வெட்டிக் குடங்களில் புஷ்பம் போட்ட நீரை, அந்தப் பள்ளத்திலிட்டு நிரப்பும்போது, புஷ்பங்கள் மேல் நோக்கி மிதந்தும் வலமாகவும் சுழன்ருல் உத்தமம் ; கீழ் நோக்கிக் கவிழ்ந்தும்

இடமாகவும் சுழன்றால் கூடாது என்று காமிகாகமம் கூறுகிறது.

தான்ய பரீட்சை :

கடுகு, எள் போன்ற தான்யங்களை விதைத்தால் மூன்று நாட்களுக்குள் முளை காணவேண்டும். அப்படியுள்ள பூமி சுபமாகும் என்று காமிகாகமத்தில் காணப்படுகிறது. இப்படிப் பல முறைகளால் பரிசோதனை செய்யப்பெற்ற நல்ல பூமியில், நல்ல வெண்மை நிறமுள்ள காளைகளால், பாலுள்ள மரங்களால் செய்யப்பட்ட கலப்பைகளைக் கொண்டு கிழக்கு முகமாகவும் வடக்கு முகமாகவும் உழவு செய்தல் வேண்டும்.

4. திக் பரிட்சை அல்லது சங்கு ஸ்தாபனம் :

அந்தப் பூமியைச் சமப்படுத்தி, நடுவில், சுமார் முக்கால் அடி கனமும், 18' 6'' உயரமும் உள்ள, பாலுள்ள ஓர் முளையை அடித்து, அதன் நிழல் காலை 6 மணிக்குப் படும் இடத்திலும், மாலை ஆறு மணிக்கு விழும் இடத்திலும் அடையாளம் செய்து கொண்டு அயனும்சங்களைக் கழித்து, கிழக்கு மேற்கு என்று அடையாளம் செய்ய வேண்டும் எனக் காரணாகமம் கூறுகிறது. இதிலிருந்தே தெற்கு வடக்கு முதலியவைகளும் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

5. ஆயாதிப் பொருத்தம் :

முன்கூறியபடி திக்குகளை அறிந்த பின் வேண்டிய அளவு சம சதுரமாக அல்லது வட்டமாக நிலத்தைத் தண்டம் என்ற அளவுகோலால் அளந்து கொண்டு, நான்கு பக்கங்களிலும் உள்ள சுற்றளவுகளைக் கூட்டி மொத்த அளவை 8-ல் வகுத்தால் என்ன யோனி என்பது தெரிய வரும். மிகுந்தது 1. துவஜ யோனி, 2. தூம யோனி, 3. அச்வ யோனி, 4. சிம்ம யோனி, 5. விருஷப யோனி, 6. நாய் யோனி, 7. கஜ யோனி, 8. கழுதை யோனி. இவைகளில் துவஜம், விருஷபம், கஜம் என்ற யோனிகள் வரும்படி அளவைக் கூட்டிக் குறைத்துக் கொள்ள வேண்டும். மற்ற யோனிகள் கூடாது. இதே போல நட்சத்திரம், ஆயுள், ராசி, ஆதாயம், விரயம் முதலியவைகளைக் கண்டு எஜமானருக்கும் கிராமத்திற்கும் பொருத்தமானதாக அளவுகள் அமைத்தல் வேண்டும் என்று காரணாகமம் பேசுகிறது. கிராமம் நகரங்கள் தண்டப் பிரமாணம் என்ற அளவு கோலால் அளக்கப் பெறுதல் வேண்டும்.

தண்டம் என்ற அளவுகோல் விவரம் :

பரமாணு	8 கொண்டது 1 அணு
அணு	8 கொண்டது 1 ரேணு
ரேணு	8 கொண்டது ஒரு ரோமம்
ரோமம்	8 கொண்டது 1 கலீக்ஷுகா
கலீக்ஷுகா	8 கொண்டது 1 யூகம்
யூகம்	8 கொண்டது 1 யவம்
யவத்தின் குறுக்களவு	8 கொண்டது 1 அங்குலம்
அங்குலம்	12 கொண்டது 1 விதஸ்தி (0' 9'')
விதஸ்தி	2 கொண்டது 1 ஹஸ்தம் (1' 6'')
ஹஸ்தம்	2 கொண்டது 1 தனுர்முஷ்டி (3' 0'')
தனுர்முஷ்டி	2 கொண்டது 1 தண்டம் (6'0'')
தண்டம்	2 கொண்டது 1 ராஜ தண்டம்
ராஜ தண்டம்	2 கொண்டது 1 பிரமதண்டம்

இந்த அளவைகள் அஜிதம் என்ற ஆகமத்தில் உள்ளன.

6. வாஸ்து விந்யாஸம் :

மேலே சொன்ன தண்டப் பிரமாணத்தால் அளந்து நாற்சதுரமாகச் செய்யப்பட்ட பூமியை தென் வடல் 8 பதங்களும் கிழ மேல் 8 பதங்களுமாக $8 \times 8 = 64$ அறுபத்துநான்கு பதங்களாகச் செய்வது மண்டுக வாஸ்துவாகும். $9 \times 9 = 81$ எண்பத்தொன்று பதங்களாகச் செய்வது பரம சாயி வாஸ்துவாகும். மேலே கண்டபடி பிரித்துள்ள பதங்களுக்கு 53 தேவதைகளின் பெயரால் அடையாளம் செய்தல் வேண்டும். அந்தந்த இடங்களில் அந்தந்த தெய்வங்களைப் பூசித்து, சிவாகமங்களில் கூறிய படி அந்தந்த தேவர்களைத் திருப்தி செய்வித்த பின்னர் அந்த பூமியை $9 \times 9 = 81$ பாகம் செய்தால் நடுவில் உள்ள 9 பதங்கள் பிரம்ம பதம் ஆகும். இந்தப் பதத்தில் ஆலயங்கள், மடங்கள், சபைகள், பிரம்ம விசாரம் செய்யுமிடங்கள், வேதாகமாத்யயன மண்டபங்கள் இவைகள் அமைக்க வேண்டும். அதற்கு வெளியில் உள்ள சுற்றில் 16 பதங்கள் தைவிக பதம் ஆகும். இதிலும் ஆலயங்கள், பொதுச் சாவடிகள், அக்கிரஹாரங்கள் முதலிய கட்டப்பெறுதல் வேண்டும். இதற்கு வெளியில் உள்ள சுற்றில் 24 பதங்கள் மானுஷ பதம் ஆகும். இதில் ஜனங்கள் வசிக்கும் வீடுகள், சாலைகள், வீதிகள், ராஜ கிருஹங்கள் முதலியன அமைத்தல் வேண்டும். இதற்கு வெளிச் சுற்றில் உள்ள 36 பதங்கள் பைசாச பதமாகும். இதில் உட்பாதியில் வீடுகளும் தெருக்களும் அமைப்பதுடன் வெளிப் பாதியில் மயானம், துர்க்கை கோயில், குளங்கள், சலவை செய்யுமிடம், மத்ஸ்ய மாம்ச வியாபாரிகள் தங்குமிடம், வைத்தியசாலை, ஆயுதசாலை, கோட்டைகள் முதலியன அமைத்தல் வேண்டும். இவ்வாறு அமைக்கும் கிராமம், நகரம், பட்டணம் முதலிய அமைப்புக்கள் நூறு தண்ட அளவு முதல் பத்தாயிரம் தண்ட அளவு வரை பேசப்படுகின்றன.

7. கிராம நகர விந்யாஸம் :

மேலே கூறப்பட்டபடி தயாரிக்கப் பெற்ற பூமியில் கீழே கண்ட முறைப்படி கிராமங்கள், நகரங்கள், பட்டணங்கள் முதலியவைகளின் வீதிகளையும் வீடுகளையும்ஆலயங்களையும் அமைத்தல் வேண்டும். அந்த அமைப்புக்கள் கீழே கண்ட பிரகாரம் 12 விதங்களாகும்.

1. தண்டகம் :

கிழக்கு மேற்கில் நீண்ட சதுர வடிவாகவும் மேற்கே விஷ்ணு கோயிலிலும், கிழக்கே சிவன் கோயிலிலும் பெரும் பகுதி 2 பக்கமும் பிராமண அக்கிரஹாரமும், அதற்கு வெளியில் கீழ்மேல்

இரண்டு தெருக்களும் குறுக்கு வீதிகளும் உள்ள கிராம அமைப்புகளாகும். இதற்குப் பெரும்பாலும் காவிரிக் கரை ஓரமாக அமைந்துள்ள அக்கிரஹாரக் கிராமங்களை ஒப்பிடலாம்.

2. ஸ்வஸ்திகம் :

இது, சுற்றிலும் 4 வீதிகளும் நடுவில் கோயிலும் ஒரு பக்கம் நுழைவாயிலும் வளைவான மறுபக்கம் வெளிவரும் வாயிலும் உள்ள நகர அமைப்பாகும். இது அரசர்களின் கோட்டைகள் கொத்தளங்கள் கட்டுவதின் அமைப்பாகும்.

3. பிரஸ்தரம் :

இஃது, சமசதுரமானதும் நடுவில் கோயிலும் சுற்றிலும் அக்கிரஹாரங்களும் அதற்கு வெளியில் நான்கு வீதிகளும் நான்கு மூலைகளிலும் வீதிகளின் சந்திப்பில் 16 பகுப்புகளும் உள்ளது. ராஜக்கிரகமும் இதரர்வீடுகளும் உள்ள நகரமாகும். இது பெரும்பாலும் மதுரை ஸ்ரீரங்கம் திருவானைக்கா திருக்கோயில் முதலிய ஊர்களின் அமைப்பை ஒத்ததாகும்.

4. பிரகீர்ணகம் :

இஃது ஒரு பக்கம் மலையும், மற்றொரு பக்கம் நதியும் கூடிய நீண்ட பட்டணத்தின் அமைப்புகளாகும்.

5. ஸம்பத்கரம் அல்லது ஸர்வதோபத்ரம் :

இதுவும் பிரஸ்தரம் போன்ற அமைப்புடன் கூடியது. மூலைகளில் 16 பகுப்புகள் இல்லை. நடுவில் கோயிலும் குளமும், வெளியே சமசதுரமாக ஆறு வீதிகள், ராஜதானி அமைப்புக்களின் இலக்கணம் உடையது. புதுக்கோட்டை நகர அமைப்பைப் போன்றது.

6. பாரகம் :

இஃது கயிறு போல நதிக்கரை ஓரத்தில் ஒரே வீதியுடன் கூடிய கிராம அமைப்பு.

7. பத்மகம் :

இஃது ஒரு பக்கம் வட்டமாகவும் மறுபக்கம் 4 பட்டமாகவும் உள்ள ராஜதானி. சேனாமுகம் என்ற நகர அமைப்பாகும். இதில் சைன்யங்கள் ஆயுதசாலைகள் இருப்பதுடன் நடுவில் ஆலயங்களும் மானுஷ பதத்தில் வீடுகளும் அமைத்தல் ஆகும்.

8. ஸ்ரீபிரதிஷ்டிதம் அல்லது சதுர்முகம்:

இந்த நகரம் நான்கு சதுரமாகவும் நான்கு மூலைகளிலும் கோணங்களின் நேர்வீதிகளும் சுற்றிலும் 3 வீதிகளும் நடுவில் கோவிலும் எட்டு துவாரங்களுடனும் கூடிய அமைப்பாகும்.

9. ஸ்ரீ வத்ஸம் கார்முகம் :

இஃது கிழக்கு மேற்காக ஓடும் நதிக்கரைகளில் நதியின் பிரவாகம் வந்து நகரத்தை அழித்துவிடாமல் அமைக்கும் நகரமாகும். இதில் பிரம்மபதம் கோயிலாகும். தைவிகபதம் பொதுக் கட்டிடங்கட்குரியது. மானுஷம், பைசாசம் 2 பதங்களும் வீடுகளின் அமைப்புக்குரியன. முக்கோணமாக 3 வீதிகளும் 3 குறுக்கு வீதிகளும் கூடிய நதிக்கரை நகரம் இது. காசி கயா போன்ற நகரங்களின் அமைப்பாகும்.

10. வைதிகம் :

இது ஒரே தெருவுடனும் பிராமணர்கள் மட்டும் தனித்து வசிக்கக் கூடியதுமான அக்ரஹார கிராமம்.

11. நந்தியாவர்த்தம் :

இது நீண்ட சதுரமானதும் அரசர்கள் வசிக்கக் கூடியதும், பிரதான 3 வீதிகளும், 3 சிறு வீதிகளும், நடுவில் கோவிலும் நான்கு பக்கங்களிலும் குளங்களும் நாநா ஜாதி தொழில் பிரிவினர்களும் வசிக்கக் கூடிய நதி உள்ள பட்டணமாகும்.

12. கும்பகம் :

இது நான்கு புறமும் தெருக்கள் வளைந்து சென்றும் நேரான மங்கள வீதிகள் இல்லாமலும் இரண்டு கிராமங்கள் இணைந்தும் உள்ள கிராம அமைப்பாகும். மேலே கண்டபடி பரமசாயி அல்லது மண்டுக பதத்தின் மீது நகர கிராம அமைப்புக்களை நிர்ணயம் செய்தல் வேண்டும். அப்படி அமைப்பதில் வீதிகளையும் அமைத்தல் வேண்டும்.

வீதிகள் அமைப்பு :

1. ராஜ மார்க்கம்—10 தண்டம் 60 அடி.
2. மங்கள வீதி அல்லது ரத வீதி—8 தண்டம் 48 அடி.
3. புற மார்க்கம்—4 தண்டம் 24 அடி.
4. க்ஷுத்ர மார்க்கம்—.75 தண்டம் 4.5 அடி
5. ஜல மார்க்கம்—.5 தண்டம் 3 அடி.

ராஜ மார்க்கம் யானை குதிரைகளுடன் பவனி வரவும், மங்கள வீதி ரதோற்சவம் நடத்தவும், புற மார்க்கம் வண்டிகள் போக்குவரத்திற்கும், க்ஷுத்ர மார்க்கம் தாழ்ந்த ஜாதியார் மலஜலங்கள் எடுப்பவர்கள் செல்லவும், ஜல மார்க்கம் ஜல தாரைகள் ஏற்படுத்தவும் அமைக்க வேண்டும்.

வீடுகள் அமைப்பு :

வீடுகள் 3 தண்டம் அகலமும், 7, 9 தண்டம் நீளமும் உள்ளவைகளாக இருத்தல் வேண்டும். 7 தண்டம் அகலமுள்ள வீடுகளுக்கு 11 தண்டம் நீளமிருக்க வேண்டும். ஊரின் மேற்குப் பாகத்தில் விஷ்ணு கோயிலும், கிழக்கே சிவாலயமும் நடுவில் வீதியும் இரண்டு பக்கமும் உயர்ந்த செல்வர்களின் வீடுகளும், பின்புறம் எளியவர் வீதிகளும் அதன் பின்னர் இரண்டு வீதிகளும்கிழக்கு மேற்காக நீண்ட சதுர வடிவமாக உள்ள சர்வதோபத்ரம் என்ற அமைப்பில் உள்ள கிராமம் தண்டக கிராம

மாகும். கிழக்கு மேற்காகச் செல்லும் வீதிக்கு ராஜ வீதி என்றும், தெற்கு வடக்காகச் செல்லும் வீதிக்கு வாமன வீதி என்றும் பெயர்.

காரணுகமம் பிராகார லட்சண விதிப் படலத்தில் கூறியபடி வீடுகளின் அமைப்பு கீழ் வருமாறு : ஊரின் நடுவில் திருக்கோயில், இரண்டு அல்லது மூன்று பிரகாரங்களுடனும் நான்கு வாயில்களுடனும் இருத்தல் வேண்டும். திருக்கோயிலின் சுற்றுலேச் சுவருக்கு வெளியில் 4 தண்டம் அகலம் உள்ள வீதிகள் நாற்புறமும் செய்து, அதற்கு வெளியில் வாமன வீதிக்கு வடக்கே கிழக்கில் பூசகர்கள் வீடுகளும், கிழக்கு வடகிழக்கு இவற்றின் நடுவே மடங்களும், கிழக்கு திக்கில் சைவர்களின் இருப்பிடங்களும், கிழக்கு வீதி மத்யநாராசத்திற்குத் தெற்கில் வாத்தியக்காரர்கள் நாட்டியமாடுபவர்கள் ஸ்ரீகளும், தென்கிழக்கில் சத்ர சிகிச்சை செய்பவர்களும், தெற்கு வாமன வீதிக்கு மேற்கே வைத்தியர்கள் சோதிடர்கள் வீடுகளும், மேற்கே பரிசாரகர்கள் விடுதிகளும், வடக்கில் வேதப் பிராமணர்கள் வீடுகளும் அமைத்தல் வேண்டும். இந்த வீடுகளின் பின்புறம் க்ஷுத்ர மார்க்கங்களும் முன்புறம் ஜலமார்க்கங்களும் அமைத்தல் வேண்டும். அதற்கு வெளியில் மர்யாதை என்று சொல்லும் மங்கள வீதியின் உட்புறம் கிழக்குத் திக்கில் ஸ்நானம் செய்யக் குளமும், தென்கிழக்கு தெற்கு நடுவில் குடி தண்ணீர் ஊருணியும், தெற்கு, தென்மேற்கு நடுவில் பசுத் தொழுவம், பால் பண்ணைகளும், தென் மேற்கு தெற்கு நடுவில் மகப்பேறு விடுதியும், மேற்கு வடமேற்கு நடுவில் வைத்திய சாலைகளும், வடக்கு வடமேற்கு நடுவில் ஆரம்ப பள்ளியும், வடக்கு வடகிழக்கு நடுவில் உயர் நிலைப்பள்ளியும், ஈசானத்தில் தானியக் கிடங்கும் அமைத்தல் வேண்டும். அதற்கு வெளியில் மர்யாதை என்ற வீதியில், மறுபக்கம் பிறசமயத்தவர்கள் வசிக்க விடுதிகளும், மகாமர்யாதையில் முறையே கிழக்கு முதல் வைசியர் (வியாபாரிகள்), வாணியர், குயவர், நெசவுத் தொழில் செய்பவர், ஓடம் ஓட்டுபவர், நாவிதர், கோபாலகர், தச்சர், கொல்லர் முதலியவர்களின் வீடுகளும், அதற்கு வெளியில் மத்ஸ்யமாம்சம் விற்பவர், புஷ்ப வியாபாரிகள், கூத்தாடிகள், வண்ணர் முதலியோர் வீடுகளும், ஈசானத்தில் மயானமும், அதற்கு வெளியில் பிணம் சுடும் தொழிலாளர்கள் குடீரங்களும் இருத்தல் வேண்டும் என்று காணப்படுகிறது. மகாமர்யாதையில் நான்கு கோணங்களிலும் குளங்களும், வடக்கில் துர்க்கை கோயிலும் குளமும் நிருதியில் சாஸ்தா கோயிலும் இருத்தல் வேண்டும்.

ஆலய அமைப்பு :

மேலே காணப்பட்ட முறைகளின்படி நிர்ணயம் செய்த தண்டகம், சர்வதோபத்ரம் முதலிய கிராமங்களின் நடுப் பாகமாகிய பிரம்ம பதத்தில் ஆலயங்கள் அமைத்தல் வேண்டும். இந்த ஆலயங்கள் 2 முதல் 5 வரை சுற்றுப் பிராகாரங்களுடனும் நான்கு கோபுர வாயில்களுடனும் நடுவில் விமானங்களுடனும் அமைத்தல் வேண்டும் எனச் சைவாகமங்கள் விரிவாகப் பேசுகின்றன.

1. பூ பரிட்சை (முன்பு கூறியது போல) கர்ஷணம் (உழவு) செய்தல், சங்கு ஸ்தாபித்தல், வாஸ்துபதம் செய்து பூசித்தல் முதலிய சோதனைகளைச் செய்த பின்னர் ஆலயம் கட்டுதல் வேண்டும்.

2. சல்யோத்தாரம் : ஆலயம் கட்ட நியமித்துள்ள பூமியை 25 அடி ஆழம் வெட்டி மண்ணை அப்புறப்படுத்தி விட்டு, ஓடு, கல், மயிர், எலும்பு முதலிய அசுபத்தைத் தரும் பொருள்களை நீக்கி நல்ல சுத்தமான மணலால் நிரப்புதல் வேண்டும். இவை 4 தண்டம் என அளவு காணப்படுகிறது.

3. இஷ்டிகா ஸ்தாபனம் : இதற்கு ஆத்யேஷ்டிகா ஸ்தாபனம் என்று பெயர். (கால் கோள் விழாவாகும்). நான்கு செங்கல்களைப் பூஜை செய்து ஹோமம் முதலியன செய்து குறிப்பிட்ட ஸ்தாபனம் செய்ய வேண்டும்.

4. கர்ப்ப நியாஸம் : திருக்கோயிலின் மூல மூர்த்தி வைக்கும் இடத்திலும் கோபுரங்களில் கால்கள் நிறுத்துமிடத்திலும் சபைகள் மடங்களின் ஈசான்ய பாகத்திலும் விமானங்களில் ஸ்தூபியின் அடிப்பாகத்திலும் கர்ப்ப நியாஸம் வேண்டும்.

தங்கம், வெள்ளி, செம்பு முதலியவைகளில் ஏதாவதொன்றில், நல்ல கனமுள்ள தகட்டால் 25 அறைகள் கொண்டதாக, ஒரு முழம் அல்லது அரை முழ அளவில் ஒரு பேழை செய்து அதில் நவரத்தினங்களும், தங்கம் முதலிய உலோகங்களும், ஹரிதாரம், வீரம், பூரம், ரசம் முதலிய தாதுப் பொருள்களும், எல்லா வகை தானியங்களும் 8 வகை மிருத்திகை (மண்)களும், ஒஷதிகளும், மற்றும் அஷ்டமங்கலக் குறிப்புகளைக் காட்டும் அடையாள சாமான்களும் வைத்து ஆகமங்களில் கூறியபடி பூஜை செய்து ஸ்தாபித்தல் வேண்டும்.

5. உபபீடம் அமைத்தல் : குறிப்பிட்ட இடத்தில் திருக்கோயிலின் பிரசாதம் ஹஸ்தம் என்ற அளவையினல் 20—30—50 அளவுள்ள அகல நீளமுள்ளது உத்தம பிரசாதம். 10-12-16 ஹஸ்த அளவுள்ளது மத்யம பிராசாதம். 7-8-9 ஹஸ்தம் கொண்டது அதம பிராசாதமாகும். அளவு அப்படி நிர்ணயம் செய்த பிராசாதத்தின் அடிப்பரப்பை 25 பாகம் செய்து 9 பங்கு கர்ப்ப கிருஹமும் 16 பங்கு சுற்றுச் சுவர் கனமும் உள்ளதாக அமைக்க வேண்டும். லிங்கத்தின் அளவைக் கொண்டு பிராசாதம் அமைக்கும் முறையில் மகாலிங்கத்தின் சுற்றளவு 3 கொண்டது பீடமாகும். அந்த பீடத்தின் அளவு 3 பங்கு கொண்டது கர்ப்ப கிருஹ அகலமாகும். கர்ப்ப கிருஹ அளவில் 3-ல் ஒரு பங்கு சுற்றுச் சுவராகும். அப்படி நிர்ணயம் செய்த பிராசாத கர்ப்ப கிருஹ அளவை 8 பாகம் செய்து, ஒரு பங்கு சேர்த்துக் கொண்டு உபபீடம் அமைக்க வேண்டும். உபபீடத்தின் உயரமும் அகலத்தின் 8-ல் ஒரு பாகமாக இருத்தல் வேண்டும். இந்த உபபீடம் ஸ்ரீகரம், லலிதம், பத்ரம் என மூன்று வகைப்படும்.

அதிஷ்டானம் அல்லது பிராசாதம் :

அதிஷ்டானம், மஸூரகம், விஸ்வதாரம், திருதாலகம் என்ற பெயர்கள் ஒரே பொருளுள் ளவைகளாகும். இது உபபீடத்தின் மேல் மேலே விமானத்தின் கீழ்பாகம் வியாளம் என்ற வர்க்கம் வரையுள்ளது. இந்த அதிஷ்டானங் கள் சதுரமாகவும், விருத்தமாகவும், கோணங் களாகவும் இருக்கலாம். அதிஷ்டானம், பாத பந்தம், பிரதிபந்தம் என்ற இரண்டு வகை யாகக் காணப்படுகின்றது.

பாதபந்தம் என்ற வர்க்கம் பாத பந்தம், பத்மகம், பத்ம புஷ்கலம், பத்மாஸம் என்ற 4 பகுப்புகளுடன் கூடியது.

பிரதிபந்தம் என்ற வர்க்கம், பிரதிபந்தம், பிரதிக்கிரமம், ப்ரகீர்ணகம், பிரதிசுந்தரம் என்ற நால்வகையாகும். ஆக 8 பேதமுடை யன அதிஷ்டான அமைப்புக்களாகும். கட்டு ரையின் விரிவஞ்சி ஒவ்வொன்றின் அளவுகளையும் வித்யாஸங்களையும் எழுதாமல் பெயர்களை மட்டும் குறிப்பிட்டுச் செல்லுகிறேன். காமிகம் என்ற ஆகமத்தில் இந்த அதிஷ்டான வர்க்கம் பற்றிப் பல வேறு விதமான பஞ்சரங்களும், கர்ணகூடங்களும், கோஷ்டங்களும், முகசாலை களும், உபரிசாலைகளும் காணப்படுகின்றன. இந்த அதிஷ்டானம் 5, 8, 12, 16 என்ற கோஷ்டங்கள் என்ற அமைப்பில் காணப்படு கிறது. சாதாரணமாக 8 கோஷ்டங்கள் உள்ள திருக்கோயில்களே அதிகமாக உள்ளன. முன் வாசலின் இரண்டு பக்கத்திலுமுள்ள கோஷ்டங் களில் துவாரபாலகர்களும், தென்புறமுள்ள கோஷ்டங்களில் நிருத்த கணபதி, தட்சிணா மூர்த்தியும், மேற்கு கோஷ்டத்தில் விஷ்ணு அல்லது லிங்கோத்பவரும், வடக்கு கோஷ்டங் களில், பிரம்மா துர்க்கையும், கோஷ்ட தேவ தைகளாகப் பேசப் பெறுகின்றனர்.

அர்த்த மண்டபம் :

இது கர்ப்பக் கிரகத்தின் முன் பக்கம், கருவறையின் பாதியளவாகவாவது சரியாகவா வது செய்யலாம்.

மகாமண்டபம் முதலியன :

அதற்கு வெளியில் மகாமண்டபம் அல்லது வேத மண்டபம். இது 4, 2 ஸ்தம்பங்களுடன் கூடியதாக இருக்கலாம். இதற்கு வெளியில் உள்ளது ஸ்நபன மண்டபம். அதற்கு வெளியில் உள்ளவை விருஷப மண்டபமும், அடுத்து நிருத்த மண்டபமும், அதற்கு வெளியில் கோபு ரத்துவாரமும் அமைத்தல் சாஸ்திர சம்மதம் ஆகும். மகாமண்டபத்திற்கு வெளியில் உள்ள மண்டபங்கள் 16, 32, 64, 96, 100 கால் களுடன் கூடியதாகவும் பேசப்படுகின்றன. அந்த மண்டபங்கள் நந்தியாவர்த்தம் 4 கால் கள், ஸ்ரீ பிரதிஷ்டிதம் 16 கால்கள், வீராஸனம் 20 ஸ்தம்பங்கள், ஜயபத்ரம் 32 தூண்கள், ஸ்ரீயாவர்த்தம் 36 கால்கள், மாணிபத்ரகம் 64 கால்கள், விசாலம் 100 கால்கள் என்ற பெயர் உடையதாகும். மண்டபங்கள் எல்லாம் பிராசாத உயரத்திற்குக் குறைவாக இருக்கக் கூடாது.

விமானம் :

பிராசாதம், விமானம், கோபுரம், மேரு என்ற பல பெயர்களால் அழைக்கப் பெறும். இது திராவிட, நாகர, வேசரம் என்ற மூன்று வகையாக 96 பேதங்களில் காணப்படுகின்றது. கழுத்து முதல் வட்ட வடிவமானது வேசரம். கழுத்தடி முதல் எட்டு பட்டையானது திரா விடம். எல்லாமும் சமசதுர வடிவம் நாகரம் எனப்படும். இந்த விமானங்கள் தூங்கானை மாடம், கைலாசம், மந்தரம், நளிநகம், ப்ரலீ நகம் என்றெல்லாம் பல பேதங்களுடன் காணப் படுகின்றன.

பிராகாரங்கள் :

அதிஷ்டானத்தைச் சுற்றியுள்ளது அந்தர் ஹாரம். அதற்கு வெளியில் உள்ளது மத்ய ஹாரம். அதற்கு வெளியே மர்யாதி. அதன் வெளியில் மகாமர்யாதி என்று பெயர். அந்தர் ஹாரம் ஒரு தண்ட அளவும், மத்யஹாரமாகிய இரண்டாம் பிராகாரம் 2 தண்ட அளவும், மர்யாதி என்ற 3வது பிராகாரம் 4 தண்ட அளவும், மகாமர்யாதி 7 தண்ட அளவுள்ளதாக வுமிருத்தல் வேண்டும்.

மகாமர்யாதிக்கு வெளியில் 4 கோபுர வாயில்கள் இருத்தல் வேண்டும். இரண்டாவது பிராகாரத்தில் அக்னி மூலையில் பாகசாலையும், ஈசானத்தில் யாகசாலையும், கிழக்கு ஈசான மத்தியில் கிணறும், கிழக்கு தென்கிழக்கு மத்தியில் வாத்யசாலையும், மற்றும் சுற்றுப்புறங் களில் ஆயுத மண்டபம், புஷ்ப மண்டபம் முதலியனவும், குபேர திசையில் சயனஸ்தான மும் இருத்தல் வேண்டும்.

பரிவார தேவதைகள் :

கோபுரத்தின் தெற்கே சூரியனும், அதற்குத் தெற்கே பாகசாலையும், தெற்குத் திக்கில் உமையவளும், சிறிது நிருதியை ஒட்டி மேற்கே சோமாஸ்கந்தரும், அதற்குத்தெற்கே விநாயகரும், மேற்குத் திக்கில் ஸ்கந்தரும், வாயுவில் லட்சுமியும், அதற்குக் கிழக்கே சண்டிகையும், வடக்கே மகிஷாசுரமர்த்தினி யும், ஈசான உத்ரதிக்கு மத்தியில் நடராஜப் பெருமானும், அதற்கு மேற்கே சந்திரசேகர மூர்த்தியும், வடக்கே கௌரி ஆலயமும், நடேச ரின் ஈசானத்தில் சயனாலயமும், கோபுரத்தின் வடக்கே க்ஷேத்திரபாலரும், அதற்கு வடக்கே யாகஸ்தானமும், இறைவன் திருமுன்னே இடப தேவரும், அதற்கு வெளியில் பலிபீடமும் அமைக்க வேண்டும் என்று காரணாகமம் கூறு கிறது. மேலும் விமானங்களில் உள்ள தேவர் களின் விவரமும், 2, 3 பிராகாரங்களில் உள்ள தேவதைகளின் ஸ்தான நிர்ணயங்களும் கூறப் படுகின்றன.

முடிவுரை :

சைவ ஆகமங்களில் காணப்படும் நகர அமைப்புக்களும் ஆலய அமைப்புக்களும் எழுதப்புகின் பெரிய தனித் தனி நூல்களாகவே எழுத வேண்டியதாகும். அவைகள் அனைத்தும் விரிவாக அறிதற்குரியன. எனினும் விரிவஞ்சி இவ்வளவில் அமைகின்றேன்.

***

வரலாற்றில் வரதட்சணை ஒழிப்பு

தென்னக வரலாற்று வானில் வெள்ளி போல் பிரகாசித்து நிற்பது விசயநகரப் பேரரசின் எழுச்சியும், வீழ்ச்சியுமேயாகும். 13-ஆம் நூற்றுண்டில் குருவித்யாரண்யரின் ஆசியுடன் ஹரிஹரன், புக்கன் என்ற இரு சகோதரர்களால் தோற்றுவிக்கப்பட்டு, சுமார் மூன்றரை நூற்றுண்டுகள் சீரும், சிறப்புமாக விளங்கியது விசய நகரப் பேரரசு. துங்கபத்திரை நதிக்கும் கீழ் உள்ள தென்னகம் முழுவதும் இப்பேரரசின் கீழ் விளங்கியது.

தக்கணத்தை ஆண்ட பாமினி, கோல்கொண்டா சுல்தான்களின் ஆதிக்கத்தினின்றும், இந்து மதத்தையும், இந்து மத தர்மத்தையும் பாதுகாக்க, மராட்டிய சத்ரபதி சிவாஜிக்கு முன் தோற்றுவிக்கப்பட்டது இந்த விசய நகரப் பேரரசு. விசய நகரப் பேரரசர்களின் காலத்தில் இந்து மதமும், இந்து தர்மமும் நன்கு பாதுகாக்கப்பட்டது. மாலிக்காபூரினல் பாழாக்கப்பட்ட தென்னகக் கோயில்கள் பழுதுபார்க்கப்பட்டு, நிவந்தங்கள் அளிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. கலையழகு மிளிரும், கவின்மிக்க புதிய கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டன. வேத விற்பன்னர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் சான்ற பிராம்மணர்களும், நன்கு போற்றப்பட்டு அரச மரியாதை அளிக்கப்பட்டனர்.

விசய நகரப் பேரரசர்களில் புகழ் வாய்ந்தவர், சிறந்த நல்ல வீரர், கலைகளின் காவலர் என வெளிநாட்டு யாத்திரிகர் 'நூனிஸ்' போன்றவர்களால் புகழப்படுபவர் 'கிருஷ்ணதேவ ராயர்' ஆவார்.

இவருக்குச் சரியாக 83-ஆண்டுகளுக்குமுன் விசய நகரப் பேரரசை ஆண்டவர், மூன்றும் புக்கருடைய மகனன 'பிருதா தேவராயர்' என்றழைக்கப்பெறும் மூன்றும் தேவராயர் ஆவார். 'கஜவேட்டைக்காரர்' என்ற பட்டப் பெயரையும் உடையவர் ஆவார். சங்கம வமிச மன்னர்களில் சிறந்த புகழ் வாய்ந்தவர். இவரது பேரரசு தெற்கே இலங்கை வரையிலும், ஒரிசாவிலிருந்து மலபார் வரையிலும் பரவியிருந்தது. இவரது காலத்தில் வாழ்ந்த 'ஸ்ரீ நாத திண்டிமர்' என்ற தெலுங்கு மஹாகவிக்குக் கனகாபிஷேகம் செய்தார். இப்பேரரசர் குலத்திற்கு ஒரு நீதி முறை என்று ஆட்சி புரியாமல், 'நடுவு நிலைமை' மாருமல் வழுவாது ஆட்சி புரிந்தவர்.

மூன்றும் தேவராயரின் நேரடியாட்சியில், வடாற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூருக்கு அருகில், பாலாற்றங்கரையிலுள்ள விரிஞ்சிபுரத்தைத் தலைநகராகவும் படைவீட்டைப் பாசறையாகவும் கொண்டு திகழ்ந்தது, இராஜ கம்பீர ராஜ்யம். இந்த விரிஞ்சிபுரத்தில் உள்ள பெருமாள் கோயிலில் காணப்படும் கல்வெட்டுச் சாசன ஒப்பந்தம், வரனுக்கு தட்சணை கொடுக்கும் பழக்கத்தைக் கண்டித்திருக்கிறது.

கல்வெட்டு :

"ஸ்ரீமன் மஹா இராஜாதி ராஜ பரமேஸ்வரரான ஸ்ரீவீரப் பிரதாப தேவராய மஹாராஜர், பிரிதிவி ராஜ்யம் பண்ணி, அருளா நின்ற ஸகாப்தம் 1347-இன் மேல் செல்லாநின்ற விஸ்வாவஸு வருஷம் பங்குனி மீ 6க்கு சஷ்டியும், புதன்கிழமையும் பெற்ற அநிழத்து படைவீட்டு இராஜ்யத்து அஸேஷ வித்ய மஹாஜனங்களும் அக்கரபுஷ்கராணி கோபிநாத(ன்) சந்நிதியிலே தர்மஸ் ஸ்தாபந ஸமய பத்ரம் பண்ணிக் கொடுத்தபடி இற்றைநாள் முதலாக இந்த படைவீட்டு ராஜ்யத்து பிராம்மணரில் கன்னடியர், தமிழர், தெலுங்கர், இலாடர், முதலான அஸெஷ க்ஷேத்ரத்தில் அஸெஷ ஸூத்ரத்தில் அஸெஷஸா ஸாவையிலவர்களும் விவாஹம் பண்ணுமிடத்து கன்யா தானமாக விவாஹம் பண்ணக் கடவராகவும், கன்யாதானம் பண்ணுமல் பொன் வாங்கிப் பெண் குடுத்தால், பொன் குடுத்து விவாஹம் பண்ணினல் இராஜ தண்டத்துக்கும் உட்பட்டு பிராம்மணத்துக்கும் புறம்பாகக் கடவாரென்று பண்ணிந தர்ம ஸ்தாபன சமய பத்ரம்.

இப்படிக்கு,

அஸெஷ வித்ய மஹா ஜனங்கள் எழுத்து,
(தெ.இ.க. தொகுதி-1, பக்கம் 83).

இதிலிருந்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே பொன் வாங்கிப் பெண் எடுக்கும் கொடிய பழக்கம் விஜயநகரப் பேரரசின் காலத்திலேயே தடை செய்யப்பட்டுக் கண்டிக்கப்பட்டு உள்ளது தெரிகின்றது. பிராம்மணரும், அவரைச்சார்ந்த பிறரும் பெருமையுடன் பேணி வந்த சமுதாயக் கொடுமைகளுள் ஒன்றுன வரதட்சிணை முறை வன்மையாகக் கண்டிக்கப் பட்டுள்ளது புலனுகின்றது.

இத்தகைய சமயச் சார்புடைய சமுதாயக் கேடால் உயர்ந்த குடும்பங்களை விட உருக்குலைந்து, சீரழிந்த குடும்பங்கள் பலவாகும். இன்றைய மத்திய அரசு மேற்கொண்டுள்ள 'வரதட்சணை ஒழிப்பு' சட்ட நடவடிக்கைக்கு முன்னேடியாக விஜய நகரப் பேரரசர் மூன்றும் தேவராயரின் விரிஞ்சிபுர சாசனம் விளங்குகின்றது.

**

ஒரு நுண்பொருள் விளக்கம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து, அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழிக்கு அளப்பருந் தொண்டுகள் பல ஆற்றிய சான்றோர் பெருமக்களில், தலைசிறந்த ஒருவராகக் குறிப்பிடத்தக்கவர், ஆசிரியர் மறைமலையடிகளார் (1876—1950) ஆவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் முப்பெரும் மொழிகளிலும் தேர்ந்து தெளிந்த சிறந்த புலமை வாய்ந்தவர் அடிகளார்.

சிறப்பியல்பு :

இலக்கணம், இலக்கியம், தருக்கம், ஆராய்ச்சி, கவிதை, உரைநடை, வரலாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப்பெழுதுதல், புதினம் புனைதல், நாடகம் இயற்றல் முதலிய பற்பல துறைகளிலும், அடிகளார் தமது அறிவிலச்சினைகளைப் பொறித்தருளி யுள்ளார். ''ஒரு சிறு சொற்றொடர் அமைப்பதற்குக் குறைந்தது இருபது நூல்களை ஆராய்ந்தார். இயற்கை எழிற் புனைவுரையாக ஒருவரி எழுதுவதற்குக் குறைந்தது நூறு கல்தொலைவு பயணம் செய்தார்'' என்று தாமஸ் பேபிங்டன் மெக்காலேயைப் பற்றி, வில்லியம் மாக்பீஸ் தாக்கரே என்பவர் குறிப்பிடுவது(1) போன்ற சிறப்பு இயல்பைப் பெற்றிருந்தவர், ஆசிரியர் மறைமலையடிகளார்! அவர்தம் நூல்களும் கருத்துக்களும் பழமைநலமும், புதுமை எழிலும் பொலிந்து, பயில்வாருக்குப் பெரு நலம் பயப்பனவாகும்.

தண்ணளி :

இத்தகைய பெருநலஞ்சான்ற அடிகளார், தமிழ் இளைஞர்கள்பால் மிக்க பரிவும் அன்பும் உடையவர். தமக்கு ஓய்விருக்கும் காலங்களில் எல்லாம், தம் பக்கல் அவ்வப்போது போந்து பணிந்து பழகும் தமிழிளைஞர்களோடு கலந்து உரையாடி, அவர்கள் வினவும் ஐயங்களுக்கு ஏற்ற பெற்றி தெளிவுரைகள் நல்கி, அவர் மகிழ்விப்பது உண்டு. அக்காலங்களில் தமிழ் இளைஞர்களுக்கு மிகவும் எளியராய், இனியராய் விளங்கித் தண்ணளி புரியும் அவரது இயல்பு,

''ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே; மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னாய் பெரும! நின் ஒன்னா தோர்க்கே!''

எனப் புறநானூற்றில், ஔவையார் அதியமானின் அருமைப் பாட்டினையும், எளிமைத் தண்ணளியினையும் வியந்து போற்றிப் புகழ்ந்திருக்கும் முறையில் அமைந்திருக்கும்.

சித்தர் பாடல் :

அம்முறையில், அடிகளார் ஒரு சமயம் தமிழ் இளைஞர்கள் சிலருடன் கலந்துரையாடி மகிழ்விக்கும் வாய்ப்பு நேர்ந்தது. அதுபோது, சித்தர் பாடல் ஒன்று பற்றியபேச்சு இடையே போந்தது. அடிகளார் கடவுளுணர்வில் அழுந்திய உள்ளத்தினர். மக்களின் நல்வாழ்விற்குக் கடவுளுணர்ச்சியும் வழிபாடும் மிக மிக இன்றியமையாதன என்று வற்புறுத்தும் கொள்கையுறுதிப்பாடு பெரிதும் உடையவர். ஆதலின், அதனை இயலும் போதெல்லாம் இளைஞர்களின் உள்ளத்திற் பதியச் செய்ய முயலும் விருப்பமும் இயல்பும் கொண்டவர். அந்நிலையிலேயே, சித்தர் பாடல் ஒன்று பற்றிய பேச்சு இடையில் போந்தது. பொதுவாக அனைவரும்அப்பாடலைக் கடவுள் வழிபாடு (கடவுளுக்கு உருவ வழிபாடு) தேவையற்றது என்று வற்புறுத்துவதற்கே, மேற்கோளாக அடிக்கடி எடுத்துக் குறிப்பிடுவது வழக்கம்.

''நட்ட கல்லைத் தெய்வம் என்று
நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொண என்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ?
நாதன் உள்ளிருக்கையில்;
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ? ''

என்பது அந்தப் பாடல். சிவவாக்கியர் என்னும் சித்தர் பெருமான் அருளிச் செய்தது அது. அப்பாடலில் ''நட்ட கல்லும் பேசுமோ?'' என்பதுதான், மிகவும் முதன்மையான உயிர்ப்புடைய பகுதி. 'பேசுமோ?' என்ற வினவிற்குப் 'பேசாது' என்பதனையே விடையாகப் பெரும்பாலோர் துணிந்து கொண்டு கூறுவர். அவ்வடிப்படையிலேயே, மேற்சுட்டிய சித்தர் பாடலை அடிகளார்பால் இளைஞர் ஒருவர்குறிப்பிட்டார்.

வினவுத்தரம் :

அப்போது அடிகளார், தமக்கே உரிய புன்முறுவல் பூத்துப் பொலிந்த எழில் முகத்

(1) "To write a line of description he travelled hundred miles; to write a single sentence he consulted atleast twenty books".
—W. M. Thackeray.

துடன், அவ்விளைஞரை நோக்கி, ''அப்பாடலின் பொருள் அதுவன்று. அதனை நுனித்து ஊன்றி ஆழ்ந்து நோக்கினுல்தான், அதன் உண்மைப் பொருள் புலனுகும். உயர்ந்த சான்றேர்களின் தெய்விகப் பாடல்களில், ஏதேனும் ஒரு வினு அதன்கண் இயல்பாக அமைந்து கிடக்கும். மேல்நோக்காகக் காண்போர்க்கு அஃது எளிதிற் புலப்படாது. அழுந்தி ஆராய்ந்து காணும் அருட்பேறு வாய்ந்தோர்க்கே, அஃது எளிதிற் புலப்பட்டு விளங்கும். சான்றேர்கள் தமது கவிதையில் ஏதேனும் ஒரு வினுவை எழுப்பி, அதற்குரிய விடையையும் அங்கேயே செறித்துக் குறிப்பிற் புலப்பட வைப்பர். அம்முறைமையினை 'வினுவுத்தரம்' என்னும் ஓர் அணியாக அணி நூலார் வழங்குவர்.

''நட்ட கல்லும் பேசுமோ?
நாதன் உள்ளிருக்கையில்''

என்னும் பாடற் பகுதி, கடவுள் உண்மையையோ, கடவுளுக்கு நாம் செய்யும் உருவ வழிபாட்டையோ மறுப்பதன்று. நாதன் இருக்கின்ருன், உள்ளே இருக்கின்ருன் என்றே அப்பாடல் கூறுகின்றது. ஆதலின் அது கடவுளுண்மையினைக் கடிவதன்று என்பது தேற்றம்.

''நட்ட கல்லும் பேசுமோ?''

என வினவும் முறையில் அமைந்துள்ள வரியானது,

''நட்ட கல்லும் பேசும்; ஒ(ம்);
நாதன், உள்ளிருக்கையில்''

என்றும் கூட, நாம் படித்துணர்ந்து பொருள் கொள்ளத் தக்க முறையில், அமைந்திருக்கின்றது எனக் கொள்ளுவதற்கும் இடனுண்டு என விளக்கியருளினர், மறைமலையடிகளார்!

கருத்து விளக்கங்கள் :

1. ஒன்றினை ஏற்ற பெற்றி உணரும் தன்மை, உணர்பவர்களின் இயல்பையும், திறனையும் பொறுத்தே அமைகின்றது. ''உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'' என்பது தொல்காப்பியம். ''பேசுமோ?'' என்னும் ஐய வினுவிற்குப் ''பேசும்'' என்பது, செவ்வனிறை என்னும் தெளிவான நேரிய விடையாக அமைந்துள்ளது எனவும், நாம் ஈண்டுக் கொள்ளுதல் கூடும் (2).

2. இனி 'பேசும்?' என்பதனையே வினுவாகக் கொண்டு, அதற்கு 'ஓம்' (ஆம்) என்பது விடையாகக் கொள்ளுதலும் பொருந்தும். ''அருளின் நீர்மைத் திருக்கொண்டு அறிவரும் தெருளில் நீர்இது செப்புதற்கு ஆம் எனின்..'' எனவரும் பெரிய புராணச் செய்யுளில் 'ஆம்' என்னும் சொல், 'ஆமோ?' என்னும் வினுப் பொருளில் வந்திருத்தல் இங்கு அறியற்பாலது. தூய தமிழ் வழக்கிற்குப் புகழ்பெற்ற யாழ்ப்பாணத்துத் தமிழ் நன் மக்கள், நம்மனோர் 'ஆம்' என்பதனையே 'ஓம்' என வழங்குதல் காணலாம்.

3. 'பேசுமோ?' என்பதனைப் 'பேசும், ஓம்' எனப் பிரித்தல் கூடுமோ எனில், அங்ஙனம் பிரித்தற்குச் சான்றேர் இலக்கியங்களில் ஆட்சியும் விதியும் இருத்தலினுற் கூடும்.

''போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்'.
போற்றியோ நமச்சி வாய
புறம் எனைப் போக்கல் கண்டாய்....''

எனவரும் திருவாசகத் திருப்பாடலில் 'போற்றியோ' என்பது, 'போற்றி ஓம் நமச்சிவாய' என்று கொள்வதற்கும், ஏற்புடைத்தாக இருத்தல் காணலாம். (3)

4. 'நட்ட கல்லும் பேசும்' என்னும் உண்மையினை நன்கினிது வலியுறுத்துவதன் பொருட்டு, இறைவனை நாத தத்துவத்தின் தலைவன் என்னும் பொருளில், 'நாதன்' என்றும்; அவனே எல்லா ஒலிகளுக்கும் இயல்பான மூலமுதல் ஒலியாகத் திகழும் ஓங்காரத்தின் பொருளாக விளங்குகின்ருன் எனக் குறிக்க 'ஓம் நாதன்' என்றும்; சிவவாக்கியர் குறிப்பிட்டதாகக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

''திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவன்எனவே கண்டவர்க்குச்
சிவன்உறைவன் அங்கே....''
—சிவஞானசித்தியார்.

5. இனி ''உள்ளிருக்கையில்'' என்னும் தொடர், வழிபடுவோனது உள்ளத்தில் இறைவன் இருக்கின்ருன் என்பதனை மட்டுமேயன்றி, நட்ட கல்லினுள்ளும் இறைவன் இருத்தலை நன்கினிது உணர்த்தி நிற்கின்றது.

''இந்தனத்தின் எரி
பாலின் நெய்
பழத்தின் இரதம்
எள்ளின்கண்
எண்ணெயும் போல்
எங்கும்உளன் இறைவன்''

ஆதலின், இறைவன் நட்ட கல்லினுள்ளும் இருக்கின்ருன் என்பதில் ஐயமில்லை. அங்ஙனம் இருத்தலால் அவன் பேசுவான் என்பதும் அறிவிற்குப் பொருத்தமேயாகும்.

6. இறைவனுக்கு இரு வகை நிலைகள் உண்டு. ஒன்று கடந்த நிலை. அந்நிலையில் அவன், நமது மனமொழி மெய்களுக்கு எட்டாத

(2) ''எழுத்தோரன்ன பொருள்தெரிபுணர்ச்சி, இசையிற்றிரிதல் நிலையிய பண்பே'' என்னும் தொல்காப்பிய நூற்பாவும், ''எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி, இசைத்திரிபால் தெளிவெய்தும் என்ப'' என்னும் நன்னூற் சூத்திரமும், இங்ஙனம் பிரித்துப் பொருள் கொள்ளுவதற்கு மிகவும் ஆக்கம் அளித்து அரண் புரியும். இஃது, ஒருவர் "God is nowhere" என எழுதி வைக்க, அதனை வேருெருவர் "God is now here" எனப் பிரித்துப் படித்தாற் போல்வதாகும். —ஆசிரியர்.

(3) இங்ஙனம் மகரஒற்று மறைந்திருப்பதாகத் தெளிந்து விரித்துரைத்துக் கொள்வதற்குரிய இலக்கண விதி, ''மவ்வீறு ஒற்றழிந்து உயிர்ஈறு ஒப்பவும், வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்''; ''எண் மூவெழுத்தீற்று எவ்வகை மொழிக்கும் முன்வரு ஞநமய வக்கள் இயல்பாம்'' என்னும் நன்னூற் சூத்திரங்களாகும். —ஆசிரியர்.

நிலையில் மிகவும் அரியவனாகவும், பெரியவனாகவும் இருக்கின்றான். மற்றொன்று கலந்த நிலை (4). அந்நிலையில் அவன் யாண்டும் நீக்கமற நிறைந்து, எல்லா உயிர்களுக்கும் உடனாய் ஒன்றி நின்று உதவி புரிந்து எளியவனாகவும், இனியவனாகவும் விளங்கி வருகின்றான். இவ்விரு நிலைகளில், ஞானிகளுக்கு இறைவன் என்றும் எங்கும் எதிலும் கலந்த நிலையிலேயே காட்சி தந்தருள்கின்றான். ஆதலின், எங்குமுள்ள இறைவனை, நட்ட கல்லிலும் கூட, ஞானிகள் காண்டல் இயலும். ஞானிகள் அகமும் புறமும் ஒரு தன்மையராகப் பெற்றவர்கள். ஆதலின் புறத்தும், அகத்தும் அவர்கள் சிவத்தையே காண்பார்கள். ''பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்'', ''சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்''. திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட திருக்கயிலைக் காட்சி, இவ்வுண்மையினையே நமக்குச் செவ்விதின் அறிவுறுத்தும்.

''உள்ளும் புறம்பும் ஒருதன்மைக்
காட்சியருக்கு
எள்ளும் திறம்ஏதும் இல்''

எனத் திருவருட் பயன் கூறுவதற்கேற்ப, உள்ளும் புறமும் ஒத்த நிலையிலுள்ள ஞானிகளுக்கு எத்தகைய வேறுபாட்டுணர்வும் இல்லை.

7. உள்ளத்தினுள்ளே சிவம் உள்ளமையைக் கண்டுணர்ந்து கொண்ட ஞானிகள், புறப்பொருள்களிலும் சிவபரம்பொருள் நீக்கமற நிறைந்து நிற்றலைக் காண வல்லவர்கள் ஆவர். ''ஜ்ஞானினும் சர்வதா: சிவ:'' என்றபடி, ஞானிகளுக்கு எல்லாப் பொருள்களினுள்ளும், எல்லா உயிர்களினுள்ளும் இறைவன் எழுந்தருளிக் காட்சி தருவான். நல்லொழுக்கத்தாலும், புலனடக்கம் கைவந்த தவநலத்தாலும், தியானம் முதலிய சிறந்த சாதனைகளாலும், மனத் தூய்மையும் தகுதியும் வாய்க்கப் பெற்றவர்கள், கல்லிலும் செம்பிலும் கூடக் கடவுளைக் காண்பார்கள். கல்லும் செம்பும் கூட, அவர்களுக்குக் கடவுளாக விளங்கி, அவர்களுடன் கலந்தினிது பேசும். தெளிவுக் காட்சி (Clairvoyance), தெளிவுக் கேள்வி (Clairaudience), முதலியன பற்றிய, இந்நாளைய மேலைநாட்டு அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சி நூல்களும், இவ்வுண்மையை ஓரளவு மெய்ப்பித்து வருகின்றன.

8. இனி, 'சுட்ட சட்டியும் சட்டுவமும் கறிச்சுவை அறியா' எனினும், அவற்றைக் கொண்டு கறி சமைத்துச் சுவையறிவான் ஒருவன் உளன் என்பது தெளிவு. ஆதலின் சுட்ட சட்டிதான், அர்ச்சைத் திருமேனி ஆகிய இறைவனின் திருவுருவம்; சுடுவிக்கும் நெருப்பு அயரா அன்பு ஆகிய உண்மைப் பக்தி; மற்றும் கும்பாபிடேகம் சம்ப்ரோட்சணம் முதலிய மந்திரங்களின் சார்பான சடங்குகள். சுடுவித்தல், வழிபாடு ஆகிய உண்மைப் பூசனை; சட்டுவம், வழிபாட்டுக்குரிய துணைப் பொருள்கள்; சமைக்கும் கறி, இறைவனிடமிருந்து பெறும் அருள்; கறிச் சுவை, இறையருளின் இனிய அனுபவம்; சுவை அறிபவன், இறையருளனுபவத்தில் திளைத்து இன்புறும் அடியவன். என்றிங்ஙனமெல்லாம் கருதியுணர்ந்து, இயை புருவகமாகவும், முற்றுருவகமாகவும் கொள்ளுதற்கு ஏற்ற வகையில், ''சுட்ட சட்டி சட்டுவம் கறிச் சுவை அறியுமோ?'' என்னும் பகுதி, இப்பாடலில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

முடிவுரை :

இங்ஙனம், அரிய பெரிய பற்பல கருத்துக்களை, எளிய இனிய முறையில், சுருங்கத் தொகுத்துக் கூறி, அடிகளார் அவர்கள் சிறந்த பல அறிவுருளுரைகள் வழங்கி மகிழ்வித்தார்கள். அடிகளார் அளித்த விளக்கம் ஓர் அரும் பெரும் புதையல் போலவும், புதியதொரு சிந்தனை யுலகுக்குச் செலுத்தும் இனியவாயில் போவும் அமைந்து, பெருமகிழ்ச்சி விளைவித்தது. ''கடல் நீரைப் பருகப் பருக நீர்வேட்கை மிகுமேயன்றித் தணியாது; அதுபோல வறிதே நூல்களைக் கற்கக் கற்க ஐயங்கள் பெருகுமேயன்றிக் குறைய மாட்டா. நூல்கள் பலவற்றைக் கற்றும் தெளிய முடியாத ஐயங்களையெல்லாம், நல்லாசிரியன் ஒருவன் கூறும் எளிய சிறிய சொல்லொன்றே இனிது போக்கிவிடக்கூடும்'' என்று திருக்களிற்றுப்படியார் என்னும் சிறந்ததொரு ஞான நூல் கூறுகின்றது. அதன் உண்மையினை அடிகளாரின் அறிவுரைகள் தெற்றென உணர்த்தின. ''என்னை ஓர் வார்த்தையுட்படுத்துப் பற்றினாய்; பதையேன் மனம் மிக உருகேன்'' என மணிவாசகர் அருளிய திருவாசகப் பகுதியினை நினைப்பிக்கும் வகையில், அடிகளாரின் அரிய விளக்கவுரை விளங்கியது. பலரும் பொதுவாகக் கூறும் முறையின் வேறாகப் புதியதொரு முறையில் பொருள் புலப்படும்படி பிரித்துக் காட்டி, மெய்ப்பொருள் தெருட்டியருளிய அடிகளாரின் நுண்மாண் நுழைபுலம் எண்ணி எண்ணி வியந்து மகிழ்தற்குரியது. ''அருட்கண் இலாதார்க்கு அரும் பொருள்கள் தோன்றா'' எனவும், ''கற்றறிவாளர் கருத்தில் ஓர் கண் உண்டு'' எனவும், திருமூலர் திருமந்திரம் கூறுதல், எத்தகைய பேருண்மை என்பது இதனால் அவ்விளைஞர்களுக்கு இனிது விளங்கிற்று.

தனிப்பெரும் புலமைச் செல்வர்!
சைவசித் தாந்தச் சான்றோர்!
முனைத்தநற் கொள்கை வீரர்!
மும்மொழிப் புலமை வேந்தர்!
மனித்தருள் தெய்வம் போன்ற
மறைமலை அடிக ளார்தம்
எனைப்பல தொண்டும் போற்றி
இறையடி பணிந்து வாழ்வாம்!

—ந. ரா. முருகவேள்.

(4) "Though much stress is laid on the transcendence of the Absolute, its immanence can never be lost sight of. These are only two aspects which are, as Miss Underhill happily puts it, enshrined in the Greek and Latin names of God, 'Dues' (The Transcendant Light) and 'Theos' (The Inward love) which blend into one in the integral experience of the mystic''
—N. G. Damle,
Contemporary Indian Philosophy, P. 191.

சமய ஒப்பியல்

டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனபதி, எம். ஏ., பி. எச்டி.,
(தத்துவப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்)

கடவுள் உண்டு என்னும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைக்கே சமயம் என்னும் பெயர் பெரும்பாலும் வழங்கு கிறது. எனினும் இந்த நம்பிக்கையை நேரடியாகவோ முற்றிலுமோ ஏற்காத கொள்கைக்கும் (எடுத்துக்காட்டு—பௌத்தம்) இப்பெயர் வழங்குகிறது. உடம்பிற்கு வேருக உயிர் உண்டு என்பதை ஆராய்ச்சியின் தொடக்க நிலையிலாவது ஏற்றுக் கொண்டால் அதன் தொடக்கம், தன்மை, முடிவான நிலை போன்றவற்றைப் பற்றிக் கேள்விகள் எழ இடமுண்டு. இவ்வகையில் நம் நாட்டில் தோன்றிய சமயங்களிலும் வெளிநாடுகளில் தோன்றிய சமயங்களிலும் உயிரைப் பற்றி நிலவி வந்துள்ள முடிபுகளை ஒருங்கு வைத்து ஆய்வதால் மிகுந்த பயன் ஏற்படும். சமய ஒப்பியல் என்னும் துறை மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்கள் சிலவற்றில் சிறந்த இடம் பெற்றுள்ளது. இயன்ற வரை நாமும் நம் சமயத்தைப் பிற சமயங்களோடு ஒப்பியல் முறையில் ஆராய்வது பயனுடைத்தாம்.

சமய நூல்களைப் பயில்வது எங்ஙனம் என்பதைப்பற்றி ஒப்பியல் முறையில் பார்க்கும் போது பல விளக்கங்கள் ஏற்படலாம். பொதுவாக நூல்களையும் சிறப்பாகச் சமய நூல்களையும் பதிப்பிடுவதில் மேலைநாட்டு முறைகள் நமக்கு உதவுவனவாயுள்ளன. ஒரு நூலின் பிரதிகள் பல கிடைக்குமாயின் அவற்றின் வேறுபாடுகளை நுணுகி ஆராய்ந்து, பேசப் பெறும் பொருளுக்கும் அதனைப் பேசுபவரின் உள்ளப் போக்கிற்கும் ஏற்ப எதனைப் பாடமாகக் கொள்வது எதனை நீக்குவது என ஒருவாறு துணியலாம். சொற்களின் பொருளைத் தவருக உணர்ந்திருப்போமாஞல் தவறு நீங்க வழியேற்படும். 'சூழ்ச்சி' என்னும் சொல் தீங்கு செய்வதற்காகத் தவருன வழியில் ஏற்பாடு செய்வதையே இக்கால வழக்கு உணர்த்துகிறது. இப்பொருளைப் பண்டைய இலக்கியத்தில் புகுத்திஞல் அங்கே கூறப்பெறும் கருத்தை நாம் சரிவரத் தெரிந்து கொள்ள முடியாது போகும்.

''பொல்லா ஆக்கையின் புணர்வினை யறுக்கலுறு
சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே''
-(திருவாய்மொழி 2:3)

இங்கே சூழ்ச்சி, வழி அல்லது உபாயம் எனப் பொருள்படும். இதனை அடுத்து வரும் திருவாய்மொழி 'சூழ்ச்சி ஞானச் சுடரொளியாகி' என்று தொடங்குகிறது.

இங்கே 'சூழ்ச்சி' என்பது 'எல்லாவற்றையும் சூழ்ந்துள்ள' என்று பொருள்படும். பழங்காலக் கருத்துக்கள் பிற்காலங்களில் வழக்கு ஒழிந்து போயிருக்கலாம். எனவே சொல்லளவில் பார்க்கும்போது அவற்றை நாம் தெரிந்து கொள்ள முடியாமல் போகலாம். இத்தகைய நிலை ஏற்படும்போது ஒரு நூல் எழுதப்பெற்ற காலத்திலேயே அல்லது அதன்பொருளையொத்த பொருளைப் பற்றியதாக எழுதப்பெற்ற வேறு நூல்களில் ஏதாவது விளக்கம் காணமுடியுமா என்று பார்க்கலாம்.

''ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங் குன்தாளிணையன்புக்
காரா அடியேன் அயலே மயல்கொண் டழுகேனே''
—(திருச்சதகம் 87)

தருமையாதீனப் பதிப்பில் (1966) 'ஊரிலுள்ள ஏனைய பசுக்கள் மாலைக்காலத்தில் தம் இல்லத்தை அணுகியபொழுது தம் கன்றுகளைக் கனைத்து அழைக்க, குருட்டுப் பசுவும் தன் இல்லத்தை அண்மையிற் கண்டது போலத் தன் கன்றினைக் கனைத்து அழைத்தலையாம்....' இதஞல் மெய்யடியார்கள் நீ பேரின்பப் பொருளாதலை உணர்ந்து உன்னை, ''தேனே, அமுதே, கரும்பின் தெளிவே என்று இன்புற்றுப் புகழ அதனைக் கண்டு யானும் அவ்வாறே புகழ்கின்றேன்' எனக் குறித்தவாறும்'' என விளக்கம் கூறப்பட்டுள்ளது. இத்தகைய விளக்கம் திருவாசகத்தை அரிதின் முயன்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி. யு. போப் அவர்களுக்குக் கிடைக்காததால் 'ஊர்ப் பசுவிற்கு முடிசூட்டி எனவே குருடுக்கு முடிசூட்டி' ('To crown the village cow and so have crowned the blind') என்று பொருள்படும் சொற்களால் மொழிபெயர்த்துள்ளார். ஆயினும் 'குறிப்பு தெரியவில்லை. ''வீணில் முயன்றேன்'' என்று பொருள்' என அடிக்குறிப்பு எழுதியுள்ளார்.

இனி ஒப்பியல் முறையில் இத்தொடரைப் பார்க்கும்போது நம்மாழ்வார் திருவிருத்தம் நினைவுக்கு வருகிறது :

''மைப்படி மேனியும் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே
மெய்ப்படி யாலுன் திருவடிசூடுந் தகைமை யினர்
எப்படியூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கு மென்னும்
அப்படியானும் சொன்னேன் அடியேன் மற்றியா தென்பனே''

இதற்கு உரையாசிரியர்கள் பின்வருமாறு விளக்கம் தருகின்றனர் : 'மேய்வதற்காக ஊருக்கு வெளியே சென்ற கண்தெரிந்த பசுக்கள், ஊருக்குத் திரும்பும்போது கனைப்பதைக் கேட்டுக் குருட்டுப் பசுவும் கனைப்பதைப் போல இறைவனுடைய திருமேனியின் அழகைக்கண்டு அவன் திருவடியைத் தம் முடிமேற் கொண்டு அவனை வைதிகர் புகழ்வதைக் கேட்டு நானும் புகழ்கின்றேன்.'

இவ்விளக்கம் அப்பர் திருப்பாடலை நினைவூட்டுகிறது.

“ஞானத்தால் தொழுவார் சிலஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனைநானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தாய் உனைநானுந் தொழுவனே”

“கோவுடனே கூடியதோர் குருட்டாவும் ஊர் புகுதும்” என உமாபதிசிவம் கூறுவதும் நினைவிற்கு வருகிறது. இவ்வாறு ஒப்பியல் முறையில் சமயங்களை ஆராயும்போது ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு விளக்கம் பெறலாம். கடவுள் உண்மைக்குச் சைவசித்தாந்தத்தில் கூறப்பெறும் காரணங்கள் சிவஞான போதத்தில் சுருக்கமாகவும், சிவஞான சித்தியாரில் விளக்கமாகவும் காணலாகும். மேலைநாட்டில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே கடவுள் உண்மைக்குக் காரணங்கள் கூறப்பட்டுள. இங்கே எடுத்துக்காட்டாக கி.பி. 1596—1650 ஆண்டுகளில் வாழ்ந்த பிரெஞ்சு தத்துவ அறிஞர் டேக்கார்ட் என்பவர் கூறிய காரணங்களைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

1. வித்தின்றி விளைவில்லை; காரணமின்றிக் காரியமில்லை என்பது அனைவர்க்கும் உடன்பாடு. இதனை அடிப்படையாகக் கொண்டு அவர் பின்வருமாறு கூறுகிறார். ‘கடவுள் ஓர் உள்பொருள். அனைத்தாம் பண்புகளையும் அவர் உயர்ந்த வகையிலும் குறைவின்றியும் உடையவராயிருக்கிறார். கடவுளைப் பற்றித் தெளிவான எண்ணம் என் உள்ளத்திலிருக்கிறது. நிறைவும் வரம்பின்மையும் உடைய கடவுளைப் பற்றிய இந்த எண்ணத்திற்கு நிறைவின்மையும் வரம்புடைமையும் கொண்டுள்ள நான் காரணம் என்பது பொருந்தாது. எவ்வாறு இல்பொருளிலிருந்து உள்பொருள் தோன்றாதோ அவ்வாறே குறைவுடைய காரணத்திலிருந்து நிறைவுடைய காரியம் தோன்றாது. எனவே கடவுளைப் பற்றிய எண்ணம் அவராலேயே உண்டாக்கப்பட்டதாதல் வேண்டும்.

நிறைவு பற்றிய எண்ணத்தைக் குறைகளை நீக்குவதால் பெற முடியாதா? சிறிதளவு வெண்மையைக் கண்டால் கற்பனையால் அதனைப் பெரிதாக்கி முழு வெண்மையை எண்ண முடிவதைப் போலவே குறையுடைய பொருள்களிலிருந்து குறைவிலா நிறைவையும் பெறமுடியாதா என்னும் ஐயம் எழலாம். இத்தகைய ஐயத்திற்கு இடமில்லை என்று டேக்கார்ட் கருதுகிறார். குறைவுடைமையைத் தெரிந்து கொள்வதற்கே மேல்வரிச் சட்டமாக நிறைவு பற்றிய எண்ணம் தேவைப்படுகிறது. உயர்வைப் பற்றிய எண்ணம் இன்றேல் தாழ்வைப் பற்றிய எண்ணம் எழாது. உண்மை என்பது உரைகல்லாக இருப்பதால்தான் ஐயம் எழ இடம் உளதாகிறது. உலகத்தில் மாற்றறியாத செழும் பசும் பொன்னே இல்லையெனில் மட்டமான பொன் என எதனையும் ஐயுற மாட்டோம். இவற்றையெல்லாம் கருதும்போது நிறைவைப் பற்றி நம் உள்ளத்தில் தெளிவாக உள்ள எண்ணத்திற்குக் காரணம் கடவுளே என்று டேக்கார்ட் கூறுவது வலியுறுகிறது. இது காரணகாரியத் தொடர்பை அடிப்படையாகக் கொண்ட முடிபு.

2. தன் இருப்பு மறுக்க முடியாதது. நான் இல்லையென்று ஒருவன் சொல்வது முரண் கூற்றாகும். நான் இருக்கின்றேன் என்பது மறுக்க முடியாத உண்மையாயின் என் இருப்பிற்குக் காரணம் யாது? நானேஎன்னைச் செய்துகொண்டிருக்கமுடியாது; அவ்வாறு செய்திருக்க முடியுமாயின் நான் என்னைக் குறைவற்றவனாகப் படைத்துக் கொண்டிருப்பேன். என் பெற்றோர்களே என் இருப்பிற்கு முழுக் காரணம் எனின் அவர்களேனும் என்னைக் குறைவற்றவனாகப் படைத்திருக்க வேண்டும். அவ்வாறில்லையே ! மேலும் அவர்களைப் படைத்தவர் யார்? அவர்களின் பெற்றோர்களெனின் இவ்வாராய்ச்சி வரம்பின்றிப் பின்நோக்கிச் செல்லும். இதனைத் தவிர்ப்பதற்கு முதற் காரணமாக ஒன்றை ஏற்க வேண்டும். அம் முதற் காரணம் கடவுள்தான். இம்முடிவைப் பிரபஞ்ச இயலான காரணம் என்பர்.

3. உண்மை இயல் காரணம் என வழங்குவதற்குத் தடைகளும் விடைகளும் கூறப்பட்டு வந்துள்ளன. இஃது எண்ணத்திலிருந்து எண்ணம் குறிப்பிடும் பொருளை உய்த்து உணர்வது. முக்கோணம் என்னும் எண்ணம் எழுமாயின் அதன் மூன்று கோணங்களின் எண்ணிக்கை இரு நேர்கோணங்களின் எண்ணிக்கைக்குச் சமமானது என்பது அவ்வெண்ணத்திலிருந்து உய்த்து உணரக் கூடியதாகிறது. அவ்வாறே கடவுள் பற்றிய எண்ணத்திலிருந்து அவரது இருப்பும் உய்த்துணரக் கூடியதாகும். இதனால் உள்ளத்தில் எத்தகைய எண்ணம் தோன்றினாலும் அதற்கு ஈடாக ஓர் உள்பொருள் உண்டுஎன்பது சரியாகாது. டேக்கார்ட் இங்கே பேசுவது, அளவை முறையில் கட்டாயமாக எழும் எண்ணங்களைப் பற்றி மட்டுமே. கடவுளைப் பற்றிய எண்ணம், உயர் பண்புகள் அனைத்தையும் உள்ளிட்ட நிறை பொருளைப் பற்றியதாகும். நிறைபொருள் என்பதில் யாதொரு குறையும் இருத்தலாகாது. இருப்பு என்பது முதன்மையானதொரு பண்பு. இப்பண்பு இன்றேல் கடவுள், பிற நற்பண்புகள் அனைத்தையும் பெற்றிருப்பினும் நிறைபொருள் என்னும் பெயருக்கு உரியவராகார். எனவே, கடவுள் நிறைபொருள் என்னும் எண்ணமே அவர் உள்பொருள் என்பதை உள்ளிட்டதாகும். இக்காரணத்தை எதிர்த்தவர் ; ‘உள்ளத்தில் எண்ணம் இருப்பதாலேயே அதற்கு ஈடாக ஒரு பொருள் இருப்பதாகக் கொள்ளமுடியுமா? நூறு ரூபாய் நோட்டைப்பற்றிய எண்ணம் இருப்பின் அதற்கு ஈடான பணம் சட்டைப் பையிலிருப்பதாகுமா” என்பதைப் போன்ற தடையை எழுப்பினார். கடவுள் பற்றிய எண்ணம் பிற எண்ணங்களினின்றும் முற்றிலும் வேறுபட்டது என்பதை நாம் மறத்தலாகாது. ‘குறைவிலா நிறைவே’ என்று மாணிக்கவாசகர் கூறுவதைநினைவுகொள்ளலாம். பிற எண்ணங்களுக்கு ஈடாகப் பொருள்கள் உளவாகலாம் இலவாகலாம் — ஆயின் கடவுள் என்னும் நிறைபொருள் பற்றிய எண்ணம் இருப்பையும் தன்னுள் கொண்டது. இவ்வாறு தடைக்கு விடை கூறப் பெறுகிறது. கடவுள் உண்மைக்கு வேறு காரணங்களும் கூறப் பெறுகின்றன. இவற்றையெல்லாம் சித்தாந்தத்தோடு ஒப்பியல் முறையில் ஆராய்வது இன்பமும் பயனும் ஒருங்களிக்கத் தக்கது. உயிர், தளை, வீடு பற்றிய முடிபுகளையும் இவ்வாறே ஆராயலாம், இன்பமும் பயனும் அடையலாம்.

**

தலவரலாற்றுக் குறிப்புகள்

(காவிரித் தென்கரைத் தலங்கள்)

(முற்றொடர்ச்சி)

விடையா ருங்கொடியாய்
        வெறி யார்மலர்க் கொன்றையினாய்
படையார் வெண் மழுவா
        பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில் சூழ்திருக்
        கற்குடி மன்னி நின்ற
அடிகேள் எம்பெருமான்
        அடியேனையும் அஞ்ச லென்னே

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

5. திருமூக்கீச்சரம் - உறையூர் :

திருச்சி-கோட்டை இரயில் நிலையத்துக்கு மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது உறையூர். பல வளங்களும் உறைவதற்கிடமாய் இருப்பதால் உறையூர் எனப்பெயர் பெற்றது என்பர். இறைவனருள் பெற்ற கோழி ஒன்று அரசனுடைய யானையைத் தன் மூக்கினால்தாக்கி இறைவன் பெருமையை வெளிப்படுத்தியதால் மூக்கீச்சரம் எனப்பெயர் பெற்றது. கோழி சிறகை விரித்திருக்கும் அமைப்பில் இவ்வூர் அமைப்பு உள்ளதால் இப்பெயர் பெற்றதென்றும் சொல்வர். சுவாமி—பஞ்சவர்ணேசுவரர். அம்பாள்—காந்திமதியம்மை. தலவிருட்சம்—வில்வமரம். தீர்த்தம்—சிவ தீர்த்தம். இது கோயிலுக்குமுன் திருக்குளமாக உள்ளது. உதங்க முனிவருக்கு ஐந்து நேரங்களிலும் அரதனம், படிகம், பொன், வயிரம், இவை நாலுங் கலந்த சித்திரலிங்கமாகப் பஞ்ச வர்ணத்தில் காட்சியளித்தமையால், சுவாமி பஞ்சவர்ணேஸ்வரர் எனப் பெற்றார். காசிபன் மனைவி கத்துரு வழிபட்டுத் தனக்குற்ற நோய் நீங்கப் பெற்றார். கத்துருவின் மகன் கார்க்கோடகன் பூசித்துத் தன் பேரன்னையை வஞ்சித்தமையால் வந்த குருடு நீங்கப் பெற்றான். கருடன் வழிபட்டுத் தன்னைத் தரிசித்தோரும், தன் ஒலி கேட்டோரும் நற்பயன் பெறும்படியான வரத்தைப் பெற்றான். சூர ஆதித்த சோழன், நாகராஜன் புதல்வியாகிய நாககன்னி—காந்திமதியை மணந்து நாகலோகத்திலிருந்து கொண்டு வந்த ஐந்து இலிங்கங்களை இங்குப் பிரதிட்டை செய்ய எண்ணியபோது அவை மூலலிங்கத்துடன் சேர்ந்து பஞ்சவர்ணமாயின. இதனால் பஞ்சவர்ணேசுவரர் எனப்பெயர் பெற்றார் என்பதும் ஒரு ஐதிகம். திருமால் பிரமன் கபிலன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் சேர்ந்து வழிபட்ட தலம். இதைத் ''தென்னவன், செம்பியன், வில்லவன் சேரும் மூக்கீச்சரம்'' என்ற ஞானசம்பந்தர் தேவாரம் இனிது விளக்கும். சம்பந்தரால் பாடல் பெற்ற சிறப்புடையது. கல்வெட்டுக்கள் பல படி எடுக்கப்பட்டுள்ளன. 42 ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்கள் உள்ளன. ஆண்டிற்கு ரூ. 7,500 வருமானம் வருகிறது. ரூ. 5,000 மதிப்புள்ள திருவாபரணங்கள் உள்ளன. மகாவித்துவான் பிள்ளையவர்களால் புராணம் பாடப்பட்டுள்ளது.

அன்னம்அன்ன நடைச்சாய லாளோ டழகெய்தவே
மின்னையன்ன சடைக்கங்கை யாள்மேவிய காரணம்
தென்னன் கோழியெழில் வஞ்சியும் ஓங்கு செங்
        கோலினான்
மன்னன் மூக்கீச் சரத்தடிகள் செய்கின்ற தோர்
        மாயமே.
வெந்தநீறு மெய்யிற் பூசுவராடுவர் வீங்கிருள்
வந்தொனரவ் வளை கொள்வதும் இங்கொரு மாய
        மாம்
அந்தண்மா மானதன் நேரியன் செம்பிய னாக்கிய
எந்தைமூக்கீச் சரத்தடிகள் செய்கின்றதோரேதமே.

—சம்பந்தர்.

6. திருச்சிராப்பள்ளி :

திரிசிரன்—மூன்று சிரங்களையுடைய அரக்கன்—பூசித்துப் பேறு பெற்றமையால் இத்தலம் திரிசிராப்பள்ளி எனப் பெற்றது. அது இப்பொழுது மருவித் திருச்சிராப்பள்ளி என வழங்குகிறது. ''முச்சென்னி மடங்கலேறனையான் நாமவரையிது'' என்ற திருவிளையாடற்புராணச் செய்யுட் பகுதியால் இவ்வுண்மை புலனாகும். திருக்காளத்தி, திருக்கோணமலை போல இதுவும் தட்சிண கயிலாயம் எனப்படும். கோயில் சுமார் 500 அடி உயரமுள்ள மலைமேல் உள்ளது. அதற்கு மேல் சுமார் 200 அடி உயரத்தில் உச்சிப் பிள்ளையார் கோயில் உள்ளது. செட்டிப் பெண் ஒருத்தி கருவுயிர்க்கும்போது அவளது தாயார் மருத்துவம் பார்க்க இயலாமல் காவிரி வெள்ளம் தடை செய்ததால் இறைவனே அவளது தாயாக வந்து மருத்துவம் பார்த்தமையால் தாயுமானார் என்று பெயர் பெற்றார் இங்குள்ள இறைவன். சாரமாமுனிவர், நாகலோகத்திலிருந்து கொணர்ந்த செவ்வந்திப் பூவைப் பராந்தக சோழன் கவர்ந்த சிவாபராதத்தின் பொருட்டுச் சுவாமி மேற்கே திரும்பி உறையூரை மண்மாரி பெய்யச் செய்த ஐதிகத்தில் சுவாமி மேற்கு நோக்கிய சந்நிதியாக உள்ளார். சுவாமி—தாயுமானார். அம்பாள்-மட்டுவார் குழலியம்மை. தீர்த்தம்—நன்றுடையான், தீயதில்லான் முதலியன. சம்பந்தர் ஒரு பதிகமும், அப்பர் ஒரு பதிகமும் பாடிப் பரவியுள்ளனர். அதிமதுரமான கவிகள் பாடிய ஸ்ரீ தாயுமான சுவாமிகளும், அவர்கட்கு உபதே

சித்த ஸ்ரீ மௌன குரு சுவாமிகளும் எழுந்தருளி அருளாட்சி புரிந்த மௌன மடம் அடிவாரத்தில் உள்ளது. இம்மடம் தருமையாதீன அருளாட்சியில் இலங்குவது. இம்மௌன மடத்துக் கட்டளையின் சார்பில் தாயான ஈசற்கு உச்சிக் காலமும், சாயரட்சையும், இதர ஏறுபடிகளும் நடைபெறுகின்றன. கல்வெட்டுக்கள் பல உள்ளன.

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம்உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே

கைம்மகவேந்திக் கடுவனொ டூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே
—திருஞானசம்பந்தர்.

மட்டு வார்குழ லாளொடுமால் விடை
இட்ட மாவுகந் தேறும் இறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே

அரிச்சி ராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சி ராது நடக்கும் நடக்குமே.

தாயு மாய்எனக் கேதலை கண்ணுமாய்ப்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே
—திருநாவுக்கரசர்.

7. திருஎறும்பியூர் :

இத்தலம் திருச்சிக்குக் கிழக்கே ஆறேகால் கல் தொலைவில் உள்ளது. திருச்சி-தஞ்சை இருப்புப் பாதையில் திருவெறும்பூர் என்ற பெயரில் ஒரு நிலையமாக இருப்பது. நிலையத்தில் இருந்து வடமேற்கே அரை மைல் தொலைவில் உள்ளது இக்கோயில். கோயில் சுமார் 60 அடி உயரமுள்ள மலைமேல் உள்ளது. தேவர்கள் எறும்புருவம் எடுத்துப் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தினால் இப்பெயர் பெற்றது. அப்பர் சுவாமிகளால் பாடப் பெற்ற சிறப்புடையது. பிரம்ம தேவர், நைமிச முனிவர் முதலியோர் பூசித்தமை அப்பர் தாண்டகத்தால் அறியக் கிடக்கின்றது. சுவாமி—எறும்பீசர். அம்பாள்—நறுங்குழல் நாயகி.

விரும்பி யூறு விடேல்மட நெஞ்சமே
கரும்பி னூறல்கண் டாய்கலந் தார்க்கவன்
இரும்பி னூறல் அறாததோர் வெண்டலை
எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே.

இன்ப மும்பிறப் பும்இறப் பின்னொடு
துன்ப மும்முட னேவைத்த சோதியான்
அன்ப னேஅர னேயென் றரற்றுவார்க்கு
இன்ப னாகும் எறும்பியூ ரீசனே

பன்னியசெந் தமிழறியேன் கவியேல் மாட்டேன்
எண்ணொடு பண்நிறைந்த கலைக ளாய,
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியுங் காட்டி,
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக்
கொண்ட
தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக்கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன்
நானே.

—திருநாவுக்கரசர்.

8. திருநெடுங்களம் :

இத்தலம் இப்பொழுது திருநட்டாங்குளம் என வழங்குகிறது. வங்கிய சோழன் பூசித்துப் பேறு பெற்ற தலம். சுவாமி—நித்திய சுந்தரர். அம்பாள்—ஒப்பிலா நாயகி. சம்பந்தர் ''மறை யுடையாய்'' என்ற பதிகம் பாடித் துதித்துள்ளார். இப்பதிகம் இன்றும் இடர்களையும் ஏற்ற முடையதாக இலங்குகிறது. இத்தலம் எறும்பியூருக்கு வடகிழக்கே ஏழு கல் தொலைவிலும், தொண்டமான்பட்டி என்ற இரயில் நிலையத்திலிருந்து வடக்கே இரண்டு கல் தொலைவிலும் உள்ளது.

மறை யுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறை யுடையாய் பிஞ்ஞகனே
யென்றுனைப் பேசினல்லால்
குறை யுடையார் குற்றம் ஓராய்
கொள்கையினால் உயர்ந்த
நிறை யுடையார் இடர் களையாய்
நெடுங்களம்மே யவனே.

நின்னடியே வழிபடுவான்
நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரை வவ்வேல்
என்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவி நாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே.

—திருஞானசம்பந்தர்.

9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி :

இத்தலம் திருச்சி-தஞ்சை இருப்புப் பாதையில் பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது. திருவையாற்றுக்கு மேற்கே 11 மைல், திருப்பூந்துருத்திக்கு மேற்கே 7 மைல். இத்தலத்தில்தான் காவிரியினின்று குடமுருட்டியாறு பிரிகிறது. உறையூர் நந்தவனத்தில் திருடிய செவ்வந்தி மலரைப் பராந்தக சோழன் தன் பத்தினிகளுக்குக்

கொடுப்ப அவர்களுள் மூத்தாள் மட்டும் அம் மலரை அரண்மனையில் உள்ள சிவபெருமானுக்கு அணிந்து வந்தாள். அதனால் உறையூரில் மண் மாரி பெய்தும் மூத்தாள் மட்டும் அதற்குத் தப்பி இத்தலத்திற்கு வர, அவளுக்காக இரங்கிய சிவபெருமான் கானல் வெப்பம் தணித்தருளினர். சம்பந்தரும் அப்பரும் பாடிப் பரவியுள்ளனர். சுவாமி—தீயாடியப்பர். அம்பாள்—வார்கொண்ட முலையம்மை. தீர்த்தம்—காவிரி. கணங்கள் பூசித்துப் பேறு பெற்றதைச் சம்பந்தர் தேவாரம் அறிவிக்கின்றது. காவிரித் தென்கரைத் தலங்கள் 127-ல் இது 9-வது தலம்.

பண்ணினர் அருமறை பாடினர் நெற்றியோர்
கண்ணினர் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினர் விரிபுனல் மேவினர் சடைமுடி
அண்ணலார் எம்மையா ளுடையஎம் அடிகளே.

—திருஞானசம்பந்தர்.

மாட்டுப் பள்ளி மகிழ்ந்துறை வீர்க்கெலாம்
கேட்டுப் பள்ளிகண் டீர்கெடு வீரிது
ஒட்டுப் பள்ளி விட்டோ டலுறுமுனம்
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே.

மாட்டைத் தேடி மகிழ்ந்துநீர் நும்முளே
நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்
கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே
காட்டுப் பள்ளியு ளான்கழல் சேர்மினே.

—திருநாவுக்கரசர்.

10. திருஆலம்பொழில்:

தஞ்சாவூரிலிருந்து வடக்கே திருவையாறு செல்லும் தார்ச் சாலையில் ஆறாவது மைலில் உள்ள திருக்கண்டியூரை அடைந்து, அங்கிருந்து மேற்கே இரண்டு மைலில் உள்ள திருப்பூந்துருத்தி யடைந்து, அங்கிருந்தும் மேற்கே ஒரு மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கிழக்கே ஆறு மைலில் உள்ளது இது. அட்டவசுக்கள்பூசித்துப் பேறு பெற்ற தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. கோயிலுக்கு எதிரில் பெரிய தாமரைத் தடாகம் உள்ளது. சுவாமி—ஆத்மநாதர், தேவி—ஞான அம்பிகை. தீர்த்தம்—காவிரி. தலவிருட்சம்—ஆலமரம். தலவிருட்சத்தால் பெயர் பெற்ற தலம். அப்பர் திருத்தாண்டகப் பதிகம் ஒன்று பாடிப் பரவியுள்ளார். அதில் ஒவ்வொரு பாவின் ஈற்றிலும் ''திருஆலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே'' என்று அறிவுறுத்தியுள்ளார். சிதைந்த நிலையில் கல்வெட்டுக்கள் சில உள்ளன. காவிரித் தென்கரைத் தலங்களுள் பத்தாவது தலம்.

—ஆசிரியர்.

கருவாகிக் கண்ணுதலாய் நின்றான் தன்னைக்
கமலத்தோன் தலையரிந்த காபா லிய்யை,
உருவார்ந்த மலைமகளோர் பாகத்தானை
உணர்வெலாம் ஆனானை ஓசை யாகி,
வருவானை வலஞ்சுழியெம் பெருமான்தன்னை
மறைக்காடும் ஆவடுதண் டுறையும் மேய,
திருவானைத் தென்பரம்பைக் குடியின்மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே

—அப்பர்.

கும்பாபிஷேக விழா

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள, மூவரால் பாடப்பெற்ற திரு அச்சிறுபாக்கம், சங்கு தீர்த்தக் குளக்கரையில் புதியதாய் சுமார் ஐம்பதாயிரம் ரூபாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அருள்மிகு பால தண்டாயுதபாணி திருக்கோயில் குடமுழுக்குப் பெரு விழாவின் துவக்க விழா ''கொடை வள்ளல்'' திரு டி. கச்சூர்லால் சௌக்கார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. அறநிலையத் துறை உதவி ஆணையர் திரு கே. நடராஜன் அவர்கள் முன்னிலையிலும், வழக்குரைஞர் திரு வி. வரதா ரெட்டியார், B.A., B.L., அவர்கள் தலைமையிலும், குடமுழுக்கு விழாப் பெருஞ் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நடுப் பகலில் ஆயிரம் பேருக்கு மேல் அன்னதானம் நடைபெற்றது. சொற்பொழிவும், இன்னிசை அரங்கும் சிறப்புற நிகழ்ந்தன. திருவாளர்கள் பி. சரவண நாயகர், வி. புருடோத்தமன், திரு ஏ. கே. கபீர்தாசன் ஆகிய அன்பர்கள் இவ்விழாவிற் பெருந்தொண்டாற்றினர்.

—ஆசிரியர்

திருவாசிரியம்

திரு. என். எஸ். தாதாசாரியர், தஞ்சை

158620

காசினியோர் தாம்வாழக் கலியுகத்தே வந்து உதித்து
ஆசிரியப்பா அதனல் அருமறைநூல் விரித்தானைத்
தேசிகனைப் பராங்குசனைத் திகழ்வகுளத் தாரானை
மாசடையா மனத்துவைத்து மறவாமல் வாழ்த்துவமே.

முன்னுரை :

சைவத்தில் சந்தான குரவர்—சமய குரவர் என இரு வரிசைகள் உண்டு. இரயிலுக்குத் தண்டவாளங்கள் போல், தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டும், இறைப்பற்று என்ற இரயிலுக்கு, சைவமும், வைணவமும் இரு தண்டவாளங்கள் ஆகும். அதனல் ஸ்ரீ வைணவத்திலும் ஆழ்வார்—ஆசாரியர் என இரு வரிசைகள் உண்டு. மாணிக்கவாசகரை இருவகையாகவும் சைவம் மதிப்பதுபோல், நம்மாழ்வாரை, ஆழ்வார்—ஆசாரியர்கள் என்ற இரு வரிசைகளிலும் முதல்வராக ஸ்ரீ வைணவம் போற்றும். அதனல்தான் நம்மாழ்வாரை ''இரட்டைத் தாம்பூலம் பெற்றவர்'' என்பர். அவரைப் போல் ஓர் அற்புதப் பிறவியும், அவருடைய அருளிச் செயலைப்போல் ஓர் வியத்தகு படைப்பும், கற்ருேர் மற்ருேர்களையும் மெய் மறக்கச் செய்கின்றன என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. நம்மாழ்வாருக்குப் பராங்குசன் எனவும் ஒரு பெயர் உண்டு. அதற்கு மூன்று வகையில் பொருள் கூறுமவர் —பர—அதாவது யானைபோல் கேட்பாரற்ற வகையில் சுதந்திரனை பகவான். அங்குச—அவனையும் தம் வசப்படுத்தும் அங்குசம் போன்றவர் என்றும் பொருள் கூறுவர். ஆழ்வாரும் தாமே ''மால்வண்ணனை மலக்கு நாவுடையேற்கு'' என அருளினர். நம்மாழ்வாருடைய பாடல் என்ருல் திருமாலுக்கு அளவிலா மயக்கம். பெருமான் மகுடம் சாய்க்கும்படிக்குக் கவி சொல்லும் ஞானத் தமிழ்க்கடலே'' எனவும் புலவர் ஒருவர் புகழ்ந்தார். இவருடைய பாடல் இருக்கும்பொழுது தமிழர்களான நமக்கு யாது குறை? யாது தேவை? என்கிருர் ஸ்ரீ மணவாள மாமுனிவர் ஒரு தனிப் பாடலில்.

உடை கோவணம் உண்டு, உறங்கப்புறம் திண்ணை உண்டு,
அடை காய் கனி உண்டு, அருந்தத் தண்ணீர் உண்டு,
சட கோபன் ஈந்ததமிழ் ஆயிரம் உண்டு, தாரணியில்
வடகோடு உயர்ந்தென்ன? தென்கோடு சாய்ந்தென்ன? வான்பிறைக்கே

(அடை-வெற்றிலைபாக்கு. கோடு-வளைவு)

இப்பாடலில் ''தமிழ் ஆயிரம்'' என்ற சொல் ஆழ்வார் அருளிச் செயல் அனைத்தையும் குறிப்பதாகக் கொள்ளலாம். வடகோடு — தென்கோடு என்பதற்கு வானநூல்படி விளக்கம் : சந்திரன்—பங்குனி — சித்திரை மாதங்களில் உதிக்கும் பொழுது தெற்குப் பக்கம் சாய்ந்தால் போல் உதித்தாலும், வைகாசிமுதல் மார்கழி வரை, வடக்குப் பக்கம் சாய்வாகத் தோன்றினலும், தை, மாசி மாதங்களில் சமமாகத் தோன்றினலும், நாட்டில் மழை நன்ருகப் பொழியும் என வான நூல் கூற்று. இக்கருத்தை ஒட்டிய தமிழ்ப் பழமொழி ஒன்றும் உண்டு. வடகோட்டில் வரப்பெல்லாம் நெல்—தென்கோட்டில் தெருவெல்லாம் சோறு. நடுவில் நாடெல்லாம் அங்காடு என. நம்மாழ்வார் பாடல்களை நாம் நித்தம் ஓதி மகிழ்ந்தால் எதற்கும் கவலை வேண்டாம். நாடு தழைக்கும் என்றவாறு: நம்மாழ்வார் அமுதமென அருளிச் செய்த நான்கு நூல்களில் இப்பொழுது திருவாசிரியத்தில், ஒரு பாடலின் விளக்கம் காண்போம்.

திருவாசிரியம் :

இந்நூல் ஏழு பாடலுடன் ஆசிரியப்பாவினல் அந்தாதித் தொடையில் அமைந்தது. ''ஆசிரியப்பா அதனல்'' என அருளாளப் பெருமாள் எம்பெருமானர் தனியன் கூறுகிறபடியால் ஆசிரியப் பாவினல் அமைந்த நூலானதினல் இந்நூல் திரு என்ற சிறப்புப் பெயருடன் திருவாசிரியமாயிற்று. ''அடி ஒன்றுக்கு நான்கு சீராய், இயற்சீருடன் வெண்சீர் விரவியும், மூன்றடிக்குக் குறையாமல், பல அடிகளால் அகவல்ஓசை உற்று, இறுதியில் 'ஏ' என்னும் அசையுடன் முடிவது ஆசிரியப் பாவாகும். திருவாசிரியத்தில் 1, 2, 3, 6 நான்கு பாடல்கள் நேரிசை ஆசிரியப் பாவினலும், 4, 5, 7 மூன்றும் நிலைமண்டில ஆசிரியப் பாவினலும் அமைந்தவை. இந்நூலுக்கு முகவுரை இடுகையில் இதற்கு முந்திய பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் ஆழ்வார் இவ்வுலகைவிட்டு வைகுந்தம் சென்று, அங்கு எம்பெருமானைக் கண்டு அநுபவிக்க விரும்பினர். ஆனல் ஆழ்வார் மேலும் கொஞ்ச நாளைக்கு இந்நிலவுலகில் இருந்து, மேலும் தமிழ் விருந்தை யாவருக்கும் அளிக்க

வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி, இவ்வுலகிலேயே நாம் ஆழ்வார் திருவுள்ளம் கொண்டபடி இத்தரிசனம் தருவோம்'' எனத் தீர்மானித்து, உள்ளது உள்ளபடி தம் திவ்வியவடிவை அவருக்குக் காட்டினர். தான் கண்டது கண்டபடியே ஆழ்வார், திருவாசிரியம் பாட்டிலும் பாரித்து அருளுகிருர்'' எனப் பூருவர்கள் குறிப்பிட்டார்கள். இத்திருவாசிரியம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் மூன்ருவது ஆயிரமாகிய இயற்பாவில் ஆருவது நூலாகும். இதில் வரும் கருத்துக்கள் யஜுர் வேத சாரமாய்த்து:

உலகு படைத்து :

திருவாசிரியத்தில் வரும் இரண்டாவதுபாசுரமாவது

''உலகு படைத்து, உண்ட, எந்தை, அறைகழல்,
சுடர்ப் பூந்தாமரை, சூடுதற்கு அவாவார்,
உயிருருகி யுக்க நேரிய காத
லன்பி லின்பின் தேறல் அமுத
வெள்ளத் தானும் சிறப்புவிட்டு, ஒருபொருட்
கசைவோ ரசைக திருவொடு மருவிய
இயற்கை மாயாப் பெருவிற லுலகம்
மூன்றினெடு நல்வீடு பெறினும்
கொள்வது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே''

கருத்து : உலகம் யாவையும் தமது சங்கல்பத்தினல் படைத்தும், விழுங்கியும், காத்தும் அருளும் எம்பெருமானுடைய திருவாபரணங்கள் பூண்ட பூமலர்கள் போன்ற திருவடிகளைத் தலைக்கு அணியாக என்று அணிவோம்? என விரும்பி வேண்டிய இந்த ஆத்மாவானது ''என்று'' ''என்று'' என நினைந்து நினைந்துஇன்புற வேண்டிய தனது பேரானந்தத்தை விட்டுவிட்டு, ஏதோ நிலையற்ற, காகமாமிசம் போல் ஒன்றுக்கும் உதவாத சிற்றின்பத்தில் ஆசைப்பட்டு அலைகின்ற புல்லர்களைப் பற்றி நமக்கு ஏன் கவலை? அவர்கள் அப்படியே என்றும் அலைந்து கெடட்டும். எம்பெருமானே என் நேரில் நின்று வைகுந்தப் பெருவாழ்வை இப்பொழுதே தருகிறேம் என்ருலும், அச்சுவை பெறினும் வேண்டாம் அது.

இங்கேயே பசியன் உணவை நினைந்து நினைந்து இன்புறுவது போல் எம்பெருமான் திருவடிப் போதுக்கே நினைந்திருப்போம். நினைந்திருப்பவர்களை நினைப்போம் என்பது கருத்து.

நயவுரை :

திருக்குறளில் காமத்துப் பாலில் வரும், ''எனைத்து ஒன்று இனிதே காண் காமம் தாம் வீழ்வர், நினைப்பவருவ தொன்றில்'' என்ற வழியே ஆழ்வார் இப்பாடலில் ஒரு பொருளை அடைந்தபின் ஆசை அடங்கிவிடும். ஆனல் அப்பொருளை எப்போது காண்போம்? என்ற எண்ணம் சுவைக்கச் சுவைக்க இன்பம் பயக்க வல்லது என்ற மனேதத்துவத்தை வடித்துக் காட்டுகிருர். வடமொழியில் அணியாளர்கள் என்ற அலங்கார நூல் வல்லுநர்கள் காதல் பூரண நிறைவு பெற்று, அதன் சிறப்பைப், பெற வேண்டுமானல் அக்காதல் ''கண்டதும் கலவி'' என்பதால் தேருது. காதல் முளைத்து, வளர்ந்து பூத்து, காய்த்து, பழுக்க வேண்டும். காதல் இன்பத்திற்குமுன்னிலையாக10ஸ்தாயிபாவங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில், கண்நோக்கம், மன ஒற்றுமை, சங்கல்பம், அதாவது விரும்பிய பொருளை நினைந்து நினைந்து ஏங்குதல். இதனல் தான் காமம் நிறைவு பெறும் என்று கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும். ஆங்கிலக் கவிஞன் கோல்ட் ஸ்மித் என்பவர் தனது ''விக்கார்ஃஆப் வேக்ஃபீல்ட்'' என்ற நூலிலும் இக்கருத்தை மிகவும் அழகாக எடுத்துக் கூறுகிருர். திருமணத்துக்கு முதல் நாள் இரவே திருமண இரவைவிட இன்பம் பயக்கும் என. திருமழிசை ஆழ்வாரும் ''வீடதான போகம் எய்தி வீற்றிருந்த போதிலும், கூடும் ஆசை அல்லது ஒன்று கொள்வனே குறிப்பில்'' என இப்புடையிலே அருளினர். ''என்றுகொலோ வாழ்த்து நாளே? அணுகு நாளே! கூப்பு நாளே! வணங்கு நாளே! இருக்கும் நாளே!'' என்றெல்லாம் பாரித்த குலசேகர ஆழ்வார் வழியும் இத்தகைத்தே. ஆளவந்தாரும் ''கதா'' (எப்பொழுது), ''கதா'' (எப்பொழுது) எனப் பாரித்து நின்றதை அவருடைய அருமையான துதி நூலில் காணலாம். ஆழ்வார் இப்பாசுரத்தால் தம்மையே நமக்கு வாரமாக்கி வைத்திருக்கும் எம்பெருமானிடம் போய், பணம் கொடு, பண்டம் கொடு எனக் கேட்பது, குபேரனிடம் போய் கோவணம் விரும்பிக் கேட்டதற்கு ஒப்பான பெரிய குற்றமாகும். எம்பெருமானிடம் உள்ள ஏற்றத்துக்கும், எளிமைக்கும், பெருந்தன்மைக்கும் இது இழுக்காகும் என்று காட்டினர். அத்துடனின்றி எம்பெருமானை அநுபவிப்பாரைக் காட்டிலும் அவனையே காதலித்துக் காத்திருக்கும் பொன்னடியார்களை நினைத்திருப்பதே நமக்கு சால்புடைத்து என்பதையும் காட்டுகின்ருர். எம்பெருமானுடைய திருவடியை நம் தலைமேல் தாங்குவது என்பதனலேயே பக்தர்கள் அடியவர்கள் ஆனர்கள். அடியார் என்பதற்கு, எம்பெருமானுடைய திருவடியையே சொத்தாக உடையவர்கள், உரிமை பெற்றவர்கள், அடியில் குடியிருப்பவர்கள், அடியைத்தொட்டு முடியைக் காண்பவர்கள், அடிபிடித்துக் கர்மம் கொள்பவர்கள், அடியே தமக்கு முடியாக உடையவர்கள் என்றெல்லாம் பொருள். மற்றும் ஆழ்வார் சிற்றின்பப் பற்று உடையவர்களைப் பற்றிக் கவனிக்க வேண்டாம். ''மின்னில் நிலையில மன் உயிர் யாக்கைகள்'' என்றிருப்பதால் விரைவில் நினைக்க வேண்டியதை நினைத்து நிலை பெறலாம் என்கிருர். இப்பாசுரத்தில் ஒரு பொருட் பன்மொழி என்ற இலக்கணப்படி அவா, காதல், அன்பு, இன்பம், தேறல், அமுதம் என்று ஒரே கருத்துள்ள பல சொற்களை அடுக்கிக் கூறி, தமக்குற்ற பேரவாவைச் சுவைக்கிருர் எனலாம்.

**

காப்பு

பாத விநாயகனே! பண்ணில் களிப்போய்நின்
பாதத்தை யானும் பணிந்தேத்தக்—கோதில்
பழனிமலை வெண்பாவைப் பாடிடஎன் நாவில்
அழகுடனே வந்தமர்ந்(து) ஆள்.

கலைமகள் வணக்கம்

சொல்லின் பொருளாகிச் சுந்தரம்செய் நாமகளே!
கல்லில் கலையாய்க் கனிபவளே—கொல்லிமலைத்
தேனாய் இனிக்கும் திருப்பாக்கள் என்றனக்கு
வானாய் அளிப்பவளே வா.

(நூல்)

தண்டேந்தி வேலனவன் தாகம் தணிக்குமலை
கண்டோரை ஈர்க்கும் கனகமலை—விண்டுரையா
அற்புதஞ்சேர் பக்தி அமைந்தோரின் நெஞ்சத்தில்
நிற்கும் பழனி மலை.

போகர் தொழுதமலை ; பூமணக்கும் செல்வமலை ;
மேகங்கள் தங்கி மிதக்குமலை—மோகத்தைக்
கொன்றழிக்கும் தெய்வமலை கோலங்கள் கூட்டுமலை
என்றும் பழனி மலை.

அங்கமெலாம் வெண்ணீ(று) அணிந்தமலை தூயதெனும்
தங்கமணி மாலை தரித்தமலை—பொங்கும்
சரவணமாப் பொய்கையினைச் சார்ந்தமலை : வானோர்
பரவும் பழனி மலை.

கந்தன் அமர்ந்தமலை ; காசினியோர் போற்றுமலை;
சிந்தைக் குகந்த சிவமலையாம்—பந்தமெனும்
ஆசைத் தளையறுத்தோர் அன்றாடம் போற்றுமலை
மாசில் பழனி மலை.

உச்சிக்கு உயர்ந்தமலை ஓங்காரம் பேசுமலை
அச்சம் அழிக்கும் அழகுமலை—மெச்சும்
பெரியமலை : பெட்புடையோர் போற்றுமலை ஆளும்
அரிய பழனி மலை.

தேம்பிடுவார் தம்மையெலாம் தேற்றுமலை; தேசுமலை
ஓம்முருகா என்றால் உதவுமலை—ஆம்நமது
நற்றுணையாய் நிற்குமலை நல்லன்பர் வாழ்த்துமலை
பொற்பார் பழனி மலை.

ஆண்டியப்பன் வாழுமலை; அண்டியவர்க் கானமலை
ஆண்டியையும் வேந்தன்என்று ஆக்குமலை —வேண்டுமுயர்
வெற்றிகளை நல்குமலை வீரத்தால் காக்குமலை
பற்றும் பழனி மலை.

தூரத்தே தோன்றுமலை துய்யவொளி வீசுமலை
பாரத்தைப் போக்கும் பசியமலை—ஈரத்தைச்
சேர்க்குமலை செம்மையருள் செய்யுமலை துன்பத்தைப்
பேர்க்கும் பழனி மலை.

எளியோர்க்(கு) இரங்குமலை ஏதங்கள் போக்கி
ஒளியதனைச் சேர்க்குமலை ஒப்பில்—அவியதனுல்
ஆளும் முருகன் அமர்ந்தமலை; காத்திடுமே
நாளும் பழனி மலை.

எல்லோர்க்கும் நல்லமலை; எண்ணத்(து) உயர்ந்தமலை
பொல்லா வினையகற்றும் பொன்மலையாம்—சொல்லரிய
ஆற்றல் அளிக்குமலை அன்புருவாய் ஆனமலை
போற்றும் பழனி மலை.

மறைமலையடிகள் நூற்றாண்டு விழா

சென்னை—மயிலாப்பூர்—எட்வர்ட் எலியட் சாலை—இராஜேசுவரி திருமண மண்டபத்தில், 28—1—77 & 29—1—77 ஆகிய இரு நாட்களிலும் மறைமலையடிகளார் நூற்றாண்டு விழாவும், ''செந்தமிழ்ச் செல்வி'' திங்கள் இதழின் ஐம்பதாம் ஆண்டுப் பொன்விழாவும், முறையே சிறப்புற நடைபெற்றன. முன்னையதற்குத் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்பமை புலவர் கா. கோவிந்தன் அவர்களும், பின்னையதற்குத் தமிழகச் சட்ட மேலவைத் தலைவர் 'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம் அவர்களும் தலைமை தாங்கினர்.

மறைமலையடிகளார் விழாவில், திருமதி சாரதா நம்பியாரூரன், நீதிபதி எஸ். மகராஜன், நீதிபதி எஸ். மோகன், செட்டிநாட்டரசர் இராஜா சர் முத்தையா செட்டியார், திரு சி. ஜி. அரங்க பாஷ்யம், ஐ.ஏ.எஸ்., முன்னுள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு அழகரடிகளார், திருவாளர்கள் ந. ரா. முருகவேள், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் அவ்வை நடராசன், டாக்டர் சொ. சிங்காரவேலன், வ. சுப்பையாப் பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். மறைமலையடிகளாருடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தொண்டுகள் புரிந்தமைக்காக, தவத்திரு அழகரடிகள், திருவாளர்கள் மறை. திருநாவுக்கரசு, ந. ரா. முருகவேள், கோவை இளஞ்சேரன், சிறுவை மோகனசுந்தரம் ஆகியவர்கள் தாமிரத் தட்டும், பொற்சால்வையும் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர்.

''செந்தமிழ்ச் செல்வி'' பொன் விழாவில், திரு தேவாரம் த. நடராஜன், திரு புண்ணியகோடி, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், டாக்டர் சாலை இளந்திரையன், டாக்டர் வ. செ. குழந்தைசாமி, அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்., டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், திரு அ. உத்தண்டராமப் பிள்ளை, ஐ.ஏ.எஸ்., புலவர் இளங்குமரன், டாக்டர் பொற்கோ, வ. சுப்பையாப் பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். பெருந் திரளான தமிழன்பர்கள், இரு நாட்களிலும் திரளாக வந்திருந்து, விழாக்களைக் கண்டும், கேட்டும் மகிழ்ந்து இன்புற்றனர்.

—ஆசிரியர்.

கோடலம் பாக்கமும் புலியூரும்

முன்னுரை :

சென்னையில் இந்நாளில் சிறப்புடன் விளங்கி வரும் பகுதிகளில் கோடம்பாக்கம் என்பது ஒன்று என்பது யாவரும் அறிந்ததே. கோடம் பாக்கம் என்னும் ஊர்ப் பெயரின் காரணம் பற்றித் தலபுராண முறையில், பலவகை விளக்கங்கள் கூறப்படுகின்றன. சிவபெருமான், திரிபுர அசுரர்களை அழிப்பதற்காக, மேரு மலையை வில்லாக வளைத்த இடம் கோடம்பாக்கம் [கோடு+அம்பு+ஆக்கம்=கோடம்பாக்கம்; (கோடு—மலை)] என்று ஒரு சிலர் கூறுவர்.

மற்றும் சிலர், ஆதிசேடனின் வழியில் வந்த கார்க்கோடகன் என்னும் நாக அரசன், திருமாலை வழிபட்ட இடம் கோடம்பாக்கம் (கோடகன்+பாக்கம் = கோடம்பாக்கம்) எனக் கூறுவர். இச்செய்திக்கு அடையாளமாக ஆதிமூலப் பெருமாள் என்னும் பெயரில் திருமால் கோயில் கொண்டு எழுந்தருளியிருத்தலை, இவர்கள் தம் கருத்துக்குச் சான்றாகக் காட்டுவர்.

இத்தகைய விளக்கங்கள் எங்ஙனம் இருப்பினும், இந்நாளில் கோடம்பாக்கம் என வழங்கி வருவது, பண்டைக் காலத்தில் கோடலம்பாக்கம் எனப் பெயர் பெற்றிருந்தாகத் தெரிகின்றது.

இலக்கியங்களில் இது ''கோடலம் பாகை' எனவும், 'கோடல்' எனவும் குறிப்பிடப் பெற்றுள்ளது. 'பாகை' என்பது 'பாக்கம்' என்பதன் மரூஉ. கோடலம்பாக்கம் என்பதே இந்நாளில் கோடம்பாக்கம் என வழங்கி வருகின்றது. இவ்வுண்மை பின்வரும் செய்திகளாலும், சான்றுகளாலும் உணரப்படுகின்றது.

(கோடல் — காந்தள் மலர்).

ஞானமிர்தம் :

'ஞானமிர்தம்' என்பது, ஒரு சிறந்த சைவ சித்தாந்த சாத்திர ஞானப் பெரு நூல். இது சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிலும் பழைமை வாய்ந்தது. சங்க இலக்கியங்களைப் போன்ற தமிழ் நடைநலம் சான்றது. சிவஞான போதத்திற்கு உரை இயற்றிய பாண்டிப் பெருமாள், சிவஞான சுவாமிகள் என்பவர்களால் மேற்கோள் நூல் என மதித்துப் போற்றப் பெற்ற மாட்சிமையுடையது. சிவஞான சித்தியார்க்கு உள்ள அறுவர் உரையிலும், சிவப்பிரகாசத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் வகுத்த நல்லுரையிலும், ஞானமிர்தப் பகுதிகள் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன. சிவப்பிரகாசப் பெருந் திரட்டு, முத்தி முடிவு என்னும் பழைய நூல்களிலும், இதன் பாடல்கள் பல தொகுக்கப்பட்டுள்ளன.

வாகீச முனிவர் :

இத்தகைய சிறந்த ஞானப் பெரு நூல் இயற்றியவர், வாகீச முனிவர் என்னும் மாபெருஞ் சான்றோர் ஆவர். இவர் சென்னைக்கு அணித்ததாக உள்ள திருவொற்றியூரில் சில காலம் வாழ்ந்து வந்தார். இரண்டாம் இராசாதி ராசன் (கி.பி. *1163—1186*) காலத்தில், அவனது ஒன்பதாம் ஆட்சி யாண்டில், திருவொற்றியூரில் பங்குனி உத்திரப் பெருவிழா நடைபெற்றது. அதற்கு இரண்டாம் இராசாதிராசச் சோழனும் வந்திருந்தான். ஆறும் திருநாள் அன்று, திருவொற்றியூர் இறைவனை படம்பக்க நாயகதேவர், அக்கோயிலில் உள்ள மகிழ மரத்தின் கீழ்த் திருவோலக்கம் (மகிழடி சேர்வை) செய்தருளினர். அதுபோது அங்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் வரலாறு ஆகிய ''ஆளுடை நம்பி ஸ்ரீ புராணம்'' விரிவுரை செய்யப் பெற்றது. அதனை இராசாதிராச சோழனுடன் இருந்து கேட்டவர்களுள் வாகீச முனிவரும் ஒருவர் என்று, கல்வெட்டு (S.I.I.Vol. V. 1. No: 1354) ஒன்று விளக்குகிறது. இவ்வண்ணம், அரசரும் மதித்துப் போற்றும் மாட்சிமை பெற்றிருந்தவரும், கோளகி மடம் என்பதன் தலைவராக விளங்கியவரும், ஞானமிர்த நூலின் ஆசிரியரும் ஆகிய வாகீச முனிவர், திருவொற்றியூரிலும், கோட(ல)ம்பாக்கத்திலும் வாழ்ந்து வந்தார் எனத் தெரிகின்றது.

வாகீச முனிவர் கி.பி. *1145* முதல் கி.பி. *1205* வரை வாழ்ந்தவராதல் கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர். எனவே, ஒரு கல்வெட்டுச் சான்றின்படி கி.பி. *1232* ஆண்டிற்குச் சிறிது முன்பின்னாக வாழ்ந்திருந்தவர் என அறிஞர்கள் ஆராய்ந்து அறிவித்துள்ள

ஆசிரியர் மெய்கண்டார், இவர்க்குப்பிற்பட்டவராதல் வேண்டும், சைவ சித்தாந்த சாத்திரங்களின் தனிப் பெருஞ் சான்ருேராகிய ஆசிரியர் மெய்கண்ட தேவருக்கும் முற்பட்ட ஒரு சைவச் சான்ருேர், கோடம்பாக்கத்தில் வாழ்ந்திருந்தனர் என்னும் செய்தி, நாம் அறிந்து பெருமிதம் எய்துவதற்கு உரியது ஒன்றேயன்ருே?

பரமானந்த முனிவர் :

இனி, இவ்வாகீச முனிவர் மட்டுமேயன்றி, அவர் தம் ஞானுசிரியர் ஆகிய பரமானந்த முனிவர் என்பவரும் கோடம்பாக்கத்திலேயே தங்கி வாழ்ந்திருந்தனராவர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அவர்தம் இயற் பெயர் அருண்மொழித் தேவன் என வழங்கியது. இப் பரமானந்த முனிவர்பால்தான் வாகீச முனிவர் சைவ சித்தாந்த நூல்களைப் பாடங் கேட்டுப் பயின்றுணர்ந்து, புலமை நலம் கைவரப் பெற்று ஒளிர்ந்தார்.

''புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத் தன்ன ஆற்றல்எங் குரிசில்!
குணப்பொற் குன்றம்! வணக்க வாரா
ஐம்புல வேழத்து வெந்தொழில் அவியக்
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ஏந்தினன் நிறீஇத்
தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி!
பரமா நந்தத் திருமா முனிவன்!'' எனவும்,

''பாடல் சான்ற பல்புகழ் நிறீஇ
வாடாத் துப்பின் கோடல் ஆதி!
அருள் ஆபரணன்! அறத்தின் வேலி!
பொருள்மொழி யோகம் கிரியையிற் புணர்த்த
அருண்மொழி திருமொழி போலவும்......''

எனவும், ஞானமிர்தத்துள் (4, 28) வாகீச முனிவர் பரமானந்த முனிவரைப் புகழ்ந்து பாராட்டிப் பரவி மகிழ்கின்ருர். இச்செய்திகளை,

''இருள்நெறி மாற்றித்தன் தாள் நிழல்
இன்பம் எனக்களித்தான்
அருள்மொழித் தேவன்! நற் கோடலம்
பாகை அதிபன்! எங்கோன்!
திருநெறி காவலன்! சைவ
சிகாமணி! சிவசமய
மருள்நெறி மாற்ற வரும்
பரமானந்த மாமுனியே''

என வாகீச முனிவர் பாடியுள்ள தனிப் பாடலும் இனிது விளக்குகின்றது. இவ்வாற்ருல் ஏறத்தாழ 800—900 ஆண்டுகளுக்கு முன்பே, நம் கோடம்பாக்கம் இலக்கியப் புகழ் பெற்றுச் சிறப்புடன் இலங்கி வந்தமையினை, யாவரும் இனிது தெளியலாம்.

இதனுற் கோடம்பாக்கம் புதியதாக உண்டானதன்றி, மிகவும் பழமை வாய்ந்ததாதல் நன்கினிது தெளியப்படும். இந்நாளைய எழும்பூர் (EGMORE) முதற் குலோத்துங்க சோழனின் (கி. பி. 1070) செப்பேடுகளில் குறிக்கப்பெற்றுள்ளது. மேலும் அது கி.பி. ஏழாம் நூற்ருண்டில் மகேந்திர வர்மன் (கி.பி. 600—630), நரசிம்ம வர்மன் (கி. பி. 630—668) காலத்தவர் ஆன திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

இடும்பா வனம் எழுமூர் ஏழூர்
எறும்பியூர் ஏராரும் ஏம கூடம்
கடம்பை இளங்கோயில் தன்னிலுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே.

—க்ஷேத்திரக்கோவை: 5.

எனவரும் பாடலிலும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. இவ்வாறே, நுங்கம்பாக்கம் என்பது முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1012) செப்பேடுகளில் கூறப்பட்டுள்ளது. புதுப்பாக்கம், வேப்பேரி, செம்பியம், வியாசர்பாடி என்பவை விஜயநகர அரசர்களின் சாசனங்களில் இடம் பெற்றிருக்கக் காண்கிருேம். திருவொற்றியூர், திருமயிலை, திருவல்லிக்கேணி, திருவான்மியூர் என்னும் தலங்களின் பழைமை அனைவரும் அறிந்ததொன்று.

தொண்டை நாடு :

பண்டைக் காலத்தில் தமிழகத்தின் வட பகுதி 'தொண்டை நாடு' என வழங்கப் பெற்று வந்தது. 'தொண்டை நன்னுடு சான்ருேர் உடைத்து' என்பது அவ்வைப் பிராட்டியார் திருவாக்கு. இத்தொண்டை நாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது.

1. புழற் கோட்டம்.
2. புலியூர்க் கோட்டம்.
3. ஈக்காட்டுக் கோட்டம்.
4. மணவிற் கோட்டம்.
5. செங்காட்டூர்க் கோட்டம்.
6. பையூர்க் கோட்டம்.
7. எயிற் கோட்டம்.
8. தாமல் கோட்டம்.
9. ஊற்றுக்காட்டுக் கோட்டம்.
10. களத்தூர்க் கோட்டம்.
11. செம்பூர்க் கோட்டம்.
12. ஆம்பூர்க் கோட்டம்.
13. வெண்குன்றக் கோட்டம்.
14. பல்குன்றக் கோட்டம்.
15. இளங்காட்டுக் கோட்டம்.
16. காலியூர்க் கோட்டம்.
17. செங்கரைக் கோட்டம்.
18. படுவூர்க் கோட்டம்.

19. கடிகூர்க் கோட்டம்.
20. செந்திருத்தைக் கோட்டம்.
21. குன்றவர்த்தனக் கோட்டம்.
22. வேங்கடக் கோட்டம்.
23. வேலூர்க் கோட்டம்.
24. சேந்தூர்க் கோட்டம்.

புலியூர்க்கோட்டம் :

இவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பது மிகவும் புகழ் பெற்றதொன்ருக விளங்கியது. பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் சுவாமிகள் அவதரித்த குன்றத்தூர் வளநாடு, புலியூர்க் கோட்டத்தின் ஓர் உட்பிரிவே யாகும்.

தொண்டை நாடு, பாலாறு பாய்ந்து, வளம் சுரந்து நல்கும் மாட்சிமையுடையது. அதன் கண், எங்கணும் சோலைகள் சூழ்ந்து காணப் படும். அச்சோலைகளில் பாளைகள் விரிந்து மணம் கமழும். அப் பூஞ்சோலைகளுள் வண்டுகள் இசை பாடும். மயில்கள் களித்து நடனஞ் செய்யும். இத்தகைய சிறப்பு மிக்க தொண்டை நாட்டில் 24 கோட்டங்கள் உண்டு. அவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பது ஒன்று. அதன் கண் ஒரு பகுதியாகத் திகழ்வது, குன்றை வள நாடு. அவ்வள நாட்டின் தலைநகரம் குன்றத்தூர். அக்குன்றத்தூரிலேயே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழார் என்னும் அருண்மொழித் தேவர் அவதரித்தார். அவரால் சேக்கிழார் திருமரபு சிறந்து விளங்கியது.

தொண்டை நாடு—புலியூர்க் கோட்டம் —குன்றத்தூர் வளநாடு ஆகியவற்றின் சிறப்பினை,

''பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும்
பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலை தோறும்
காலாறு கோலிஇசை பாட நீடுங்
களிமயில்நின் ருடும்இயல் தொண்டை நாட்டுள்
நாலாறு கோட்டத்துப் புலியூர்க் கோட்டம்
நன்றிபுனை குன்றைவள நாட்டு மிக்க
சேலாறு கின்ற வயற் குன்றத் தூரில்
சேக்கிழார் திருமரபு சிறந்த தன்றே''

எனத் 'திருத்தொண்டர் புராண வரலாற்றில்' உமாபதிசிவம் புகழ்ந்துரைத்தல் காணலாம். குன்றத்தூர், போரூர், மாங்காடு, அமரூர், கோட்டூர் ஆகிய வளநாடுகளைத் தன்னகத்தே கொண்ட புலியூர்க் கோட்டத்தின் தலைமை யிடம் ஆகிய புலியூர் என்பது, இந்நாளைய கோடம்பாக்கமேயாகும்.

புலியூர் :

இந்நாளில் கோடம்பாக்கத்தின் ஒரு பகுதியாகத் திகழும் புலியூர் என்பது, பண்டைக் காலத்தில் கோடலம்பாக்கத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த ஒரு பெரும் ஊராகும். இதற்குப் புலியூர் என்னும் பெயர் அமைந்ததற்கு உரிய காரணம் பின்வருமாறு :

முன்னொரு காலத்தில் மத்தியந்தனர் என்னும் ஒரு பெரு முனிவர் இருந்தார். அவருக்கு ஒரு தவப் புதல்வர் தோன்றினர். அப்புதல்வரின் பெயர், மழ முனிவர் (இளங் குழந்தையாகிய முனிவர்) என்பது. அவர், தந்தையாரிடத்தில் நான்கு வேதம், ஆறு அங்கம், மீமாம்சை, புராணம், தருக்கம், தரும சாத்திரம் முதலிய பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தார். கல்வியின் பயன் கடவுளை வழிபடுதலும், அவன் அருளைப் பெறுதலும் என உணர்ந்தார். அதனால் மண்ணுலகில் உள்ள புண்ணியத் தலங்களையெல்லாம் தரிசித்து வணங்கவும், இறைவனைப் பூசித்து வழிபடவும் விழைந்தார். பூக்களைப் பொழுது விடிந்தபின் எடுத்தால் வண்டுகள் தீண்டும். இரவில் எடுக்கச் சென்ருல் வழி தெரியாது. கோங்கு முதலான மரங்களில் மலர் பறிக்கலாமெனில், அவற்றின் அடிமரம் உயர்ந்து வளர்ந்திருத்தலின், கையும் காலும் பனியால் வழுக்கும். ஆதலின், யாது செய்யலாம் என்று பலவாறு எண்ணினர். முடிவில் இறைவனைத் துதித்துப் போற்றி ''அடியேன் நுமக்கு ஏற்ற இனிய எழில் மலர்களைப் பறித்துப் பூசை செய்வதற்குப் பயன்படும் வகையில், அடியேனுடைய கையும் காலும் புலியைப் போல வலிமையான நகங்களைப் பெறவும், அவைகளில் காணும்திறன் மிக்க சிறந்த கண்கள் அமையப் பெறவும், திருவருள் சுரந்தருள்க'' எனப் பணிந்து வேண்டினர். இறைவனும் அதற்கு இசைந்து அவ்வாறே அளித்து அருளினன். இங்ஙனம் மலர் பறித்துச் சாத்தி இறைவனை வழிபடுதற் பொருட்டுத் தம் கால்களில் புலியைப் போன்ற வலிமை மிக்க நகங்களைப் பெற்றதனால், இவருக்குப் புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர், வியாக்கிரம்—புலி; பாதம் —கால்) என்னும் காரணப் பெயர் ஏற்படுவதாயிற்று.

புலிக்கால் முனிவர் (வியாக்கிரபாதர்) :

இவ்வாறு புலிக்கால் முனிவர் என்னும் பெயர் பெற்ற (வியாக்கிரபாத) முனிவர், பல புண்ணியத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்து, தாம் தில்லை என்னும் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானை வழிபட்டு அருள் பெறுதற்கு முன்னர், இங்கு நெடுநாள் தங்கி, தம் பெயரால் ஒரு சிவலிங்கத் திருமேனியை நிறுவி, வழிபட்டு, வாழ்ந்து வந்தார். புலிக்கால் முனிவர் தங்கி வழிபடப் பெற்ற ஊராதலின் இதற்குப் புலியூர் என்றும், இங்குள்ள சிவபெருமானுக்குப் புலியூருடையார் என்றும் பெயர்கள் வழங்குவனவாயின. புலியூர் என்பது, வியாக்கிரபுரி எனவும் வழங்கும். ஆதலின் இங்குள்ள இறைவரின் பெயர், வியாக்கிரபுரீசுவரர் எனவும் வழங்கப்படும். புலிக்கு வேங்கை எனவும் ஒரு பெயர் உண்டாதலின், புலியூர்க்கு வேங்கைபுரம் எனவும், அங்குள்ள இறைவனுக்கு

வேங்கீசுவரர் எனவும் பெயர்கள் அமைந்தன. எனவே புலியூருடையார்—வியாக்கிரபுரீசுவரர், வேங்கீசுவரர் என்னும் பெயர்கள் அனைத்தும், இங்குள்ள சிவபெருமானுக்குரிய திருப் பெயர்களாகும்.

புலிக்கால் முனிவர், இப் புலியூரில் நெடுங்காலம் தங்கிச் சிவபெருமானை வழிபட்டதன் பயனாகவே, பின்னர்த் தில்லைச் சிதம்பரம் (பெரும்பற்றப் புலியூர்) சென்று, அங்கேயும் தம் பெயரால் திருப்புலீச்சுரம் என்னும் திருக்கோயிலை அமைத்து வழிபட்டுத் தவம் புரிந்து, தில்லை நடராசப் பெருமானின் திருநடம்கண்டு மகிழும் பேறு பெற்றார். திருப்பாதிரிப்புலியூர், திருப்பெரும்புலியூர், திரு ஓமாம் புலியூர், திரு எருக்கத்தம் புலியூர் முதலிய தலங்களிலும், வியாக்கிரபாதர் இறைவனை வழிபட்டு மகிழ்ந்தார் என்பது வரலாறு.

பதஞ்சலி முனிவர் :

ஒரு சமயம் திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருந்தார். அவர் தமது அறிதுயில் (யோக நித்திரை) நீங்கி, அரகர சிவசிவ என்னும் திருப்பெயர்களைச் சொல்லி, கைகளைத் தலைமேல் குவித்து வணங்கிக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகப் பத்மாசனம் என்னும் நிலையில் எழுந்தருளியிருந்தார். அங்ஙனம் அவர் மன மகிழ்ச்சியுடன் எழுந்தருளியிருக்கும் நிலைக்குக் காரணம் யாது எனத் திருமகளும், ஆதிசேடனும் பிரமதேவனும் பணிந்து அன்புடன் வினவினர்.

அதற்குத் திருமால், முன்பொருகால் சிவபெருமான் தாருகவன முனிவர்களின் செருக்கை அடக்கித் திருத்துவதற்காகப் பிச்சைத் தேவர் (பிட்சாடனர்) வடிவங் கொண்டு சென்றபோது, தாம் அவருடன் மோகினி வடிவங் கொண்டு உடன் சென்றதனையும், தாருக வன முனிவர்கள் தம் செருக்கடங்கிப் பணிந்தபோது சிவபெருமான் பயங்கர நிருத்தம், சுத்த நிருத்தம், அநுக்கிரக நிருத்தம், சொக்க நிருத்தம், ஆனந்த நிருத்தம் முதலிய திருநடனங்களைச் செய்தருளியதனையும் கூறி, அவைகள் எல்லாம் இப்போது என் நினைவில் எழுந்தன. அதனாலேயே யான் இப்போது அறிதுயிலில் நின்று எழுந்து மகிழ்ந்திருந்தேன் என்று விவரித்து உரைத்தார்.

அந்நிலையில், சிவபிரானின் திருநடனங்களின் திறத்தைப் பற்றித் திருமால் விவரித்து உரைக்கக் கேட்டு வியந்து மகிழ்ந்து, ஆதிசேடன் பக்தியுணர்வால் பரவசப்பட்டு நின்றான். ஆதிசேடனின் பக்தியுணர்வைக் கண்டு மகிழ்ந்த திருமால், ''இத்தகைய சிறந்த பக்தனாகிய நீ, சிவபிரானின் திருநடனத்தைக் கண்டு களிக்க விரும்பினையாயின், அவரை நோக்கித் தவம் செய்து அருள் பெறுக'' என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். அதன்படி ஆதிசேடன், புத்திரப் பேறு விரும்பித் தவங் கிடந்த அத்திரி முனிவரின் மனைவி ஆகிய அநசூயை என்பவளின் கைகளில், ஐந்து தலைகள் கொண்ட சிறு பாம்பாக வந்து பொருந்தினான். அவள் தன் கைகளில் ஒரு சிறு பாம்பு வந்து கிடத்தல் கண்டு அஞ்சிக் கைகளை உதறினாள். அப்போது அச் சிறு பாம்பாகிய ஆதிசேடன், அவளது கால்களின் மேல் விழுந்தான். இங்ஙனம் பாதத்தில் விழுந்ததினால், ஆதிசேடன் பதஞ்சலி (பதம்—கால்; சலித்தல்—விழுதல்) எனப் பெயர் பெற்று, அத்திரி முனிவருக்கும் அநசூயா தேவியார்க்கும் மைந்தராக வளர்ந்து வந்தார். இப்பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரைப் போலவே தில்லைக் கூத்தப் பெருமானின் திருநடனம் காணப் பெருந் தவங்கள் புரிந்து வந்தார்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்''

என்றபடி, தில்லைக் கூத்தப் பெருமானின் திருநடனம் காண விரும்பிய உணர்ச்சி ஒற்றுமையின் காரணமாக, வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் இணையற்ற நண்பர்களாகிப் பெருந்தோழமை உரிமை பூண்டனர். இவ்விருவரும் பல தலங்களை ஒருங்கு சேர்ந்து வழிபட்டுப் பணிந்து இன்புற்றனர். அம்முறையில் கோடலம்பாக்கம் புலியூரில் எழுந்தருளியுள்ள வேங்கீசுவரரையும் பன்னெடுங்காலம் வழிபட்டுப் பணி செய்து போற்றினர். இறுதியாக இவர்கள் இருவரும் தில்லைக்குச் சென்று முறையே திருப்புலீச்சரம், திருஅனந்தேச்சரம் என்னும் திருக்கோயில்களை அமைத்து வழிபட்டுத் தில்லைக் கூத்தப் பெருமானின் திருநடனம் கண்டு மகிழ்ந்து இன்புற்றார்கள் என்பது வரலாறு.

—ஆசிரியர்.

பல்லவர் காலத்தில் சைவ சித்தாந்தம்

திரு. டாக்டர் இரா. நாகசாமி, இயக்குநர், தொல்பொருள்துறை.

அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேருங்
குறியது உடைத்தாய் வேதா
கமங்களின் குறியிறந்து அங்கு
அறிவினில் அருளால் மன்னி
அம்மையோடு அப்பனுகிச்
செறிவொழியாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்.

என்பது, சைவ சித்தாந்த நூல்களில் சிறந்த 'சிவஞான சித்தியாரில்' சுபக்கம் என்னும் பகுதியில் உள்ள மங்கல வாழ்த்துப் பாடல். இதில் சித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்து கிடக்கின்றன. இவற்றைக் கட்டுரையில் ஆங்காங்கே காண்போம்.

சிவனைப் பரம்பொருளாகக் குறிப்பது சைவம். சைவ சமயத்தில் சில உட்பிரிவுகள் உண்டு. இவற்றில் தமிழகத்தில் தழைத்துத் தலைசிறந்து நின்றது 'சைவசித்தாந்தம்' என்னும் மரபு. தமிழ் நாட்டில் ஏராளமான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றில் கி.பி. 6-ஆம் நூற்றுண்டின் இறுதி, 7-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்துதான், கோயில் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் பல்லவர் கல்வெட்டுக்கள். இவற்றை ஆராய்வதால் அக்காலத்தில் 'சைவ சித்தாந்தம்' இருந்ததா? இருந்தது எனில் அதில் காணும் கருத்துக்கள் யாவை? என்பதை வரலாற்று அடிப்படையில் காணலாம். வரலாற்று அடிப்படையில் எதையும் அறிதல் இன்றியமையாதது. இதனல் சிந்தனைத் தெளிவு ஏற்படும். உண்மைத் தத்துவங்கள் சிறப்பாக விளங்கும். ஆதலின் நமக்குக் கிடைக்கும் தொன்மையான கல்வெட்டுக்களில் 'சைவ சித்தாந்தம்' எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது என்று ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

கல்வெட்டுகளிலிருந்து சைவ சித்தாந்தத்தை அறிய மூன்று அரசர்களுடைய கல்வெட்டுகள் முக்கியமாக உதவுகின்றன. அவர்கள் கீழ் வருமாறு :

1. முதல் மகேந்திர வர்மன்.
2. பரமேசுவர வர்மன்.
3. இராச சிம்மன்.

இவர்களது கல்வெட்டை ஆய்வதற்கு முன்னர் சைவ சித்தாந்தப் பொதுக் கருத்துக்களை நினைவு கூரல் நலம்.

1. பதி பசு பாசம் என்னும் மூன்று பொருட்கள் சைவ சித்தாந்த சாத்திரத்தில் கூறப்படுபவை. 2. பதி என்பது சிவபரனே. 3. உலகம் பிறப்பு இருப்பு இறப்பு ஆகிய மூன்று தொழிலை உடையது. 4. சங்கார காரணன் ஆகிய சிவபிரானே இம்முத்தொழிலுக்கும் காரணம். 5. சிவபெருமான் சர்வ வியாபகன். 6. அவனுக்குக் காரணம் ஏதுமில்லை. 7. பசு என்பது உயிர். உயிர் மூன்று அவத்தைப் படும். 8. அழுக்காறு (மலம்) மறைப்பால் உயிருக்கு உண்மை அறிவு இல்லை. 9. உயிருக்கு நல்லறிவு தவத்தினல் வரும். 10. அரன் ஞானத்தாலேயே உயிர் அரனைக் காணும். 11. நமச்சிவாய என்னும் (பஞ்சாக்ஷர) ஜபம் செய்தல் வேண்டும். 12. சிவனிடம் மறவா அன்பு இருந்தால், அவனுடன் ஐக்யமாகப் போவார். 13. மலங்களை (ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று அழுக்காறுகளை) களைதல் வேண்டும். 14. சிவனடியார்களையும், சிவாலயங்களையும், சிவன் என்றே வணங்கல் வேண்டும். 15. இதுவே வீடு பேற்றுக்கு வழி (மார்க்கம்).

மேல் குறிப்பிட்டவை பொதுப்படைக் கருத்துக்கள். இவற்றைப் பற்றித் தெளிவான சாத்திரம், மெய்கண்ட தேவரால் எழுதப்பட்ட சிவஞான போதம் என்னும் நூலில் வகுக்கப் பட்டுள்ளது. சிவஞான போதத்தில் 12 சாத்திரங்கள் தமிழில் இருக்கின்றன. 12 சமஸ்கிருத சூத்திரங்களும் சிவஞான போதம் என்னும் பெயரில் உள்ளன. சமஸ்கிருத சூத்திரங்கள் ரௌரவ ஆகமத்தில் பாச விமோசனம் என்னும் பகுதியில் இருந்தன. அவற்றை மெய்கண்ட தேவர் தமிழில் மொழி பெயர்த்துப் பக்குவான் மாக்களுக்கு உபயோகித்தார் என்று 'சிவாக்ர யோகிகள்' கூறுவார். ஆனல் இதுகாறும் கிடைத்துள்ள ரௌரவகாம ஏட்டுச் சுவடிகள் எதிலும் இச்சூத்திரங்கள் இல்லை என்பதாலும், ஆகம சாத்திரங்களின் மொழி அமைப்புக்கும், சிவஞான போத மொழி அமைப்புக்கும் வேறுபாடு இருப்பதாலும், இவை ஆகமங்களில் இல்லை. சமஸ்கிருத சூத்திரங்களையும் மெய்கண்ட தேவரே இயற்றி இருக்கக் கூடும் என்று ரௌரவ ஆகமத்தைச் சிறப்பாக ஆராய்ந்து வல்லுநர் கூறுவர். சிவஞான போதத்தை ஒப்பரும் சாத்திரமாகப் படைத்துத் தந்த பெருந்தகை மெய்கண்ட தேவரே என்பதில் ஐயமில்லை. மெய்கண்டார் கி.பி. 13-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தார் என்று மு. அருணசலம் அவர்கள் கூறுவார்கள். மெய்கண்டாரின் சீடராக அருள்நந்தி சிவாசாரியார் சிவஞான சித்தி என்னும் அற்புத நூல் ஒன்றை இயற்றியுள்

ளார். 14-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த உமாபதி சிவம், சிவப்பிரகாசம், சங்கல்ப நிராகரணம் முதலிய பல சிறந்த நூல்களை இயற்றியுள்ளார். இந்த நூல்களின் மரபையே 'சைவசித்தாந்த மரபு' என்று கூறுகிறேம். இந்த மரபில் உள்ள அடிப்படைக் கருத்துக்கள் பல்லவர் கல்வெட்டுக்களில் அப்படியே காணப்படுகின்றன என்று பொருத்திக் காண்பிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

கி.பி. 700-ல் காஞ்சியில் மாபெருங் கோயிலைத் தோற்றுவித்த இராஜ சிம்மன் ''சைவ சித்தாந்த மார்க்கத்தை நன்கு கற்று அதனுல் அனைத்து மலங்களும் நீக்கப்பட்டவன்'' என்று அவனது கல்வெட்டே கூறுகிறது. ஆதலின் பல்லவர்கள் பின்பற்றியது 'சைவசித்தாந்தம்' என்னும் மரபே. ஆதலின் சித்தாந்த சாத்திரங்களில் காணப்படும் கருத்துக்கள் எவ்வாறு கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன என ஆராயும் இக்கட்டுரையில் சைவசித்தாந்தம், கி.பி. 600-ல் தமிழகத்தில் மிகவும் உயர் நிலையில் திகழ்ந்தது என்பது பெறப்படுகிறது.

மகேந்திரவர்மன் திருச்சிராப்பள்ளி மலையில் ஒரு குடைவரைக் கோயிலைக் குடைந்திருக்கிறன். அதில் அவனது கல்வெட்டுக்களையும் பொறித்து வைத்திருக்கிறன். சமஸ்கிருத செய்யுட்களாக அமைந்துள்ள அக்கல்வெட்டு, மிகச் சிறந்த சமஸ்கிருத இலக்கியமாகவே திகழ்கிறது. இதில் மூன்று செய்யுட்கள் சைவ சித்தாந்தத் தொடர்புடையவை. இவற்றை ஆய்வதன் முன்னர் அக்குடைவரையின் அமைப்பை அறிந்து கொள்ளல் நலம்.

திருச்சிக் குடைவரை, ஒரு மண்டபம் போல் அமைந்துள்ளது. அதன் ஒரு புறம் கர்பக் கிரகம். கர்பக் கிரகத்தில் நடுவில் சிவ லிங்கம் வைக்கச் சதுரமான குழி ஒன்று உள்ளது. சிவ லிங்கம் இப்பொழுது இல்லை. அபிஷேக நீர் லிங்க பீடத்திலிருந்து விழும் இடத்தில் ஒரு சிறு குழி இருக்கிறது. இதில் அபிஷேக நீரைப் பிடித்துப் பின்னர் வெளியில் அகற்றுவர். கர்ப்பக் கிரகத்துக்கு நேர் எதிரில் சுவரில் மிகவும் எழில் வாய்ந்த கங்காதர மூர்த்தியின் சிலை வடிக்கப்பட்டுள்ளது. சிவ பெருமான் கம்பீரமாக நின்று தன் கற்றைச் சடையில் கங்கை ஆற்றைத் தாங்குகின்றூர். அவர் காலின் இருமருங்கிலும் இரு மனித உருவங்கள் சிவபெருமானைத் தலையால் தாங்குவது போல், வணங்குவதுபோல் காண்பிக்கப்பட்டு உள்ளன. மகேந்திரனின் கல்வெட்டு இந்தச் சிற்பத்தின் இரு மருங்கும் காணப்படுகின்றன. தவிர தூண்களிலும், மேல் விட்டப் பகுதிகளிலும், கர்ப்பக்கிரகத்தின் அடியிலும், அவன் கல்வெட்டு உள்ளது. அது செய்யுள் வடிவில் உள்ளது. கங்காதரரது, இருமருங்கும் காணப்படுகிறது. குடைவரையில் பின்புறச் சுவரில் கி.பி. 10-ஆம் நூற்றுண்டில் எழுதப்பட்ட அந்தாதி ஒன்று கல்வெட்டாக உள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் என்னும் வரகுணன் இக்கோயில் வழிபாட்டுக்குப் பொன் கொடுத்ததைக் கூறும் கல்வெட்டு ஒன்றும் உண்டு. ஆதலின் இக்கோயில், வழிபாட்டில் இருந்து வந்தது என்பது தெளிவு.

மகேந்திரவர்மனுக்கு உள்ள பல பட்டப் பெயர்கள் இக்கோயிலில் வெட்டப்பட்டுள்ளன. அவற்றில் ''த்ருட பக்தி'' என்பதும் ஒரு பட்டப் பெயராகக் காணப்படுகிறது. ''த்ருட பக்தி'' எனில் திடமான பக்தியுடையவன் என்பது பொருள். சிவஞானபோதம், சிவபெருமானிடம் அசையாத பக்தி வேண்டும் என்று,

''தஸ்மாத் தஸ்மின் பராம் பக்திம்
குர்யாத் ஆத்மோபகாரகே''

கூறுகிறது. ''ஆதலின் ஆன்மாவின் நன்மைக்காகப் பரமமான பக்தியை செய்தல் வேண்டும்'' என்பது இதன் பொருள். இதே கருத்து மகேந்திரனின் ''த்ருட பக்தி'' என்னும் பட்டத்தில் அமைந்திருப்பது ஒரு சிறப்பு. மகேந்திரனின் கல்வெட்டில் ஒரு செய்யுள்,

''நிர்மாபிதம் இதம் முதா புருஷோத்தமேன
சைலீம் ஹரஸ்ய தனும் அப்ரதிமாம் அனேன
க்ருத்வா சிவம் சிரஸி தாரயத் ஆத்மஸம்ஸ்தம்
உச்சைஸ்சிரத்வம் அசலஸ்ய கிருதம்கிருதார்த்
தம்''

இந்த புருஷோத்தமனுகிய மகேந்திரனுல், உவகையோடு சிவபெருமானுடைய, கல்லில் இணையற்றதாக அமைக்கப்பட்ட, உருவம் நிர்மாணிக்கப்பட்டது. அதனுல் மனத்தகத்தே உள்ள சிவனை நிர்மாணம் செய்து தலையினுல் தரித்தான் ஆதலின் சிவபெருமான், இவன் தலைமீது உள்ளான் என்பதை உண்மையாக்கினுன்.

இங்குள்ள கங்காதர மூர்த்தியின் காலடியில் மனித உருவம் தலையால் தாங்குவது போல் உள்ளது என்று கூறினேன். இச்சிற்பத்தில் உள்ளதை இச்செய்யுள் உண்மையாக்குகிறது என்று ஒரு பொருள். அசலம் என்றுல் அசையாதது என்று பொருள், இங்கு சிற்பம் எனப் பொருள் பெறும்.

இதற்கு இரண்டாவது பொருள் பின்வருமாறு :

''இந்த மலையின் உச்சியில் கோயிலைஎடுத்து சிவபெருமானைச் செய்திருக்கின்றன். ஆதலால் மனத்தகத்தே இருக்கும் சிவபெருமானை (சிரஸி க்ருத்வா) உச்சியில் செய்து, சிவன் உச்சியில் இருக்கிறன் என்பதை உண்மை ஆக்கினுன்.''

இதற்கு மூன்றுவது பொருள் :

''சிவன் உருவை மேலே செய்ததால் இம் மலை (அசலம் என்றுல் மலை என்றும் பொருள்) உயர்ந்த, (சிறந்த) உச்சியை உடையது என்பது உண்மையாயிற்று'' என்னும் பொருள். இச்செய்யுளிலிருந்து,

1. இம்மலை உயர்ந்த உச்சியை உடையது.

2. சிவன் உச்சியில் உறைகிறன்.

3. சிவனை இவன் தலையாலே தரிக்கிறான் என்னும் மூன்று பொருட்கள் தொனிக்கின்றன.

சைவ சித்தாந்தத்தில் 'திருவடி தீக்ஷை' என்று கூறும் மரபு உண்டு. சிவபெருமானது திருவடிகளை அடியார் தலையில் தாங்குவது என்பது பக்தியின் சின்னமாகக் கருதப்பட்டது. 'அம்மான் அடிநிழல் கீழதன்றோ என்தன் ஆருயிரே' என்று பாடுவார் அப்பர் பெருமான். அப்பர் பெருமானுக்குச் சிவபெருமான் நல்லூரில் திருவடி தீக்ஷை அளித்தார் என்பதை,

''நன்று அருளும் திருவடி என் தலை மேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே''

என்று நாவுக்கரசரே பாடுவார். அடியார் அரனைத் தலைமேல் தாங்குதல் என்னும் கருத்தை மனதில் கொண்டால், 'சிவனைத் தலையிலே தரிக்கிறேன்' என்னும் மகேந்திரனது கல்வெட்டின் பொருள் தெளிவாகும். இதைத் தான்

''சிந்தையிலும் எந்தன் சிரத்தினிலும்
சேரும்வகை
வந்தவனை மண்ணிடை நாம் வாராமல்—
தந்தவனை
மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க
என்பதல்லால்
ஏது சொல்லி ஏத்துவனே''

என்பார் உய்யவந்தார்.

மகேந்திரவர்மனது கல்வெட்டில் மற்றொரு செய்யுள் 'நியாய சாத்திரம்' மரபைக் கூறுவதாகவும் இருபொருள் தொனிக்கும்படி அமைந்துள்ளதுமான செய்யுளாகும். இது தமிழ் நாட்டு சைவ சமய வரலாற்றுக்கு மிகவும் ஒரு ஒப்பரும் ஒளி விளக்கு என்று கூறலாம். ஆதலின் இதை அறிந்து கொள்ளுதல் மிக மிக அவசியம். தர்க்க சாத்திரக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டால் இதை எளிதில் புரிந்து கொள்ளலாம். பொருள் புரிந்து கொள்வது சற்று கடினம் போல் தோன்றும். பயப்பட வேண்டியதில்லை. சொற்களுக்கு இருபொருட்களையும் கூறித் தர்க்க மரபையும் கூறி விளக்கிக் கொள்ள முயற்சிப்போம். அப்படியும் கடினமாக இருந்தால் விட்டு விடுங்கள். மேலே செல்லுங்கள். இறுதியில் பொருள் மட்டும் கூறுகிறேன். அதைப் படித்தால் கூடப் போதுமானது.

மகேந்திரவர்மனுக்கு 'உபமானன்' என்றும், 'அனுமானன்' என்றும், இரண்டு பட்டப் பெயர்கள் இந்தக் கோயிலில் காணப்படுகின்றன. இந்தப் பட்டங்களிலிருந்து மகேந்திரனுக்கு அனுமானத்தில் மீது (தர்க்கம்) எவ்வளவு விருப்பம் இருந்தது என்பது தெளிவு. இதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது செய்யுள் என்ன என்பதைப் பார்க்கலாம்.

குணபர நாமனி ராஜனி
அனேன லிங்கேன லிங்கினி ஞானம்
ப்ரததாம் சிராய லோகே
பிபக்ஷ விருத்தே பராவ்ருத்தம்'

இந்தச் செய்யுளில் சில சொற்களுக்கு இரு பொருட்கள் உண்டு. இந்தச் செய்யுளுக்கே இரு பொருட்கள் உண்டு. முதல் பொருளைக் கூறிவிடுகிறேன். ''குணபரன் என்னும் பெயருடைய அரசனிடத்தில் இங்குள்ள லிங்கத்தினால் மாற்று வழியில் இருந்து திரும்பியதும், லிங்க வழியில் ஈடுபட்டதுமான ஞானம்உள்ளது என்பது உலகில் நெடுங்காலம் நிலவட்டும்.''

இதிலிருந்து ''மகேந்திரன் இங்கு கர்பக்கிரகத்தில் லிங்கத்தைப் பிரதிட்டை செய்திருந்தான். அதனால் இலிங்கத்தை வழிபடும் அடியானாகத் திகழ்ந்தான். இவன் முன்னர் மாற்று வழி ஒன்றைப் பின்பற்றி அதிலிருந்து இப்பொழுது திரும்பி இலிங்கத்தை வழிபடுபவனாகத் திகழ்ந்தான். இந்தப் பொருள் உலகில் பலகாலம் நிலவ வேண்டும் என்று விரும்பினான்'' என அறிகிறோம். இச்செய்யுளின் இப்பொருளை மட்டும் அறிந்து கொண்டால் சைவ சித்தாந்தத்தைப் பொறுத்த மட்டில் போதுமானது. ஆனால் இதற்கு மற்றும் ஒரு பொருளும் உண்டு. அதையும் அறிவது முழுமை தரும்.

இச்செய்யுளின் இரண்டாவது பொருள் தர்க்க மரபில் உள்ளது என்று கூறினேன். ஆதலின் தர்க்க சாத்திரத்தின் சில அடிப்படைக் கருத்துக்களை முதலில் பார்ப்போம்.

மனிதன் அறிவை மூன்று விதமாகப் பெறுகிறான் என்று கருதுவர். நேர்முகமாகக் காண்பது ஒன்று, அனுமானித்து அறிதல் இரண்டு, நூல்களின் வாயிலாக அறிதல் மூன்று என்பனவாகும். இவற்றை நம் சைவ சித்தாந்த நூல்கள் 'காண்டல், கருதல், உரை' என்று கூறும். இதையே சமஸ்கிருதத்தில் 'பிரத்தியட்சம், அனுமானம், சப்தம்' என்று கூறுவார்கள். இவற்றை அளவை அல்லது பிரமாணங்கள் என்றும் கூறுவர். பிரத்தியட்சப் பிரமாணமும், உரை என்னும் நூல் பிரமாணமும், நாம் அறிவோம். அனுமானம் என்னும் பிரமாணம் யாது? அது எவ்வாறு பெறப்படுகிறது. என்பதை ஆன்றோர் ஆய்ந்துள்ளனர். இதற்கு ஒரு உதாரணத்தைக் கொண்டு விளக்குவோம். ஒரு மலை தொலைவில் இருக்கிறது. அதில் பெரும் புகை எழுகிறது. வேறு ஏதும் நம் கண்ணில் படவில்லை. இதிலிருந்து நாம் என்ன கருதுகிறோம்? மலையில் புகை எழுகிறது, அங்கு தீப்பிடித்து இருக்க வேண்டும் என்று முடிவு செய்கிறோம். புகை என்பதைக் காரணமாகக் கொண்டு 'தீ' என்பதை முடிவு செய்கிறோம். எவ்வாறு? நமக்குப் பார்த்துப் பார்த்துப் பழக்கம். எங்கெல்லாம் புகை எழுகிறதோ, அங்கெல்லாம் தீ உண்டு என்பது நமக்குத் தெரியும். நம் வீட்டிலேயே சமையல் அறையில் பார்த்திருக்கிறோம். சமையல் அறைத் தீயையும் புகையையும் எடுத்துக் காட்டாகக் கொண்டு, மலையில் இருக்கும் புகையிலிருந்து தீயுள்ளது என்று முடிவு செய்கிறோம். இதுவே அனுமானம் என்பதாகும். இதையே தர்க்கித்தல் அல்லது கருதுதல் எனலாம்.

இவ்வுதாரணத்தில் 'புகை' என்பதைக் காரணம் அல்லது ஹேது (ஏது) என்ற சொல்

லால் குறிப்பர். தீ என்பது ஏதுவின் வாயிலாகப் பெறப்படும் முடிவு. இதை 'ஊகிக்கும் பொருள்' அல்லது 'சாத்யம்' என்னும் சொல்லால் குறிப்பர். புகை இருக்கும் இடம் மலை. இது பக்ஷம் என்று கூறப்படும். சமையல் அறையை உதாரணமாகக் கொண்டோம். அது பொருத்தமான இடம். ஆதலின் சமையல் அறையை 'சபக்ஷம்' என்று கூறுவர். குளத்தில் தீ இருக்காது. ஆதலின் பொருந்தாத இடம். அதை 'விபக்ஷம்' என்று கூறுவர். மீண்டும் நினைவு கொள்வோம்.

பக்ஷம் : ஏது உள்ள இடம்.
சபக்ஷம் : ஏது பொருந்தும் இடம்.
விபக்ஷம் : பொருந்தாத இடம்.
ஏது : காரணம்.
சாத்யம் : துணியும் பொருள்.

இவை அனுமானம் என்னும் அளவைக்கு அடிப்படைச் சாதனங்கள். சில இடங்களில் 'காரணம்' என்னும் சொல்லை, 'லிங்கம்' என்ற சொல்லாலும், துணியும் பொருள் என்பதை 'லிங்கின்' என்றும் அழைப்பார்கள். சொற்களைக் கண்டு பயப்படக் கூடாது. சொற்கள் தான் வேறே ஒழியப் பொருள் ஒன்றுதான். 'ஏது' என்றாலும், 'சாதனம்' என்றாலும், 'லிங்கம்' என்றாலும் ஒன்றுதான்.

'புகை ஆகிய லிங்கத்தினால் தீயை நான் அறிந்தேன்' என்றால் இந்தக் காரணத்தினால் அறிந்தேன் என்று பொருள் அவ்வளவுதான்.

அதே போல் துணியும் பொருள் என்றாலும், சாத்யம் என்றாலும், லிங்கின் என்றாலும் ஒன்றே. சாதனத்திலிருந்து பெறப்படுவது சாத்யம். லிங்கத்திலிருந்து பெறப்படுவது லிங்கின். இரண்டு சொல் வழக்கு வேறே ஒழிய பொருள் ஒன்றுதான். லிங்கம் என்றால் ஏது என்றும், லிங்கின் என்றால் துணியும் பொருள் என்றும் கொண்டு செய்யுளை அணுகுவோம்.

குணபரன் என்னும் பெயருடைய அரசனிடத்தில் இந்தச் செய்யுளாகிய ஏதுவால், விபட்சத்தில் பொருந்தாத (பட்சத்தில் பொருந்துவதும்) இந்த ஏதுவால் (லிங்கத்தால்) அனுமானன் என்னும் ஞானம், உலகில் நெடுங்காலம் நிலவட்டும் என்பதாகும். இதனால் மகேந்திரனின் பட்டங்களில் 'அனுமானன்' என்று ஒன்று கண்டோம். தனக்கு அனுமானத்தில் உள்ள ஆர்வத்தையும், அனுமானன் என்னும் பட்டத்தையும், லிங்கத்தை வழிபடுவோன் என்பதையும், மாற்று வழியில் இருந்து திரும்பினேன் என்பதையும், ஒரே செய்யுளில் சிலேடையாக அமைத்து, இம்மன்னன் வெளிப்படுத்தியிருப்பதைக் காணும்போது அவன் ஆற்றலை எண்ணி வியக்கிறோம்.

'விபக்ஷ விருத்தே பராவிருத்தம்' என்னும் சொல்லுக்குப் பொருள் பற்றி ஒரு குறிப்பு தெரிந்து கொள்ள வேண்டும். அனுமானத்தினால் அறிவு பெறுகிறோம். அதற்கு 'ஏது' பயன்படுகிறது. ஆனால் பொருந்தாத ஏதுவைக் கொண்டு அறிவுபெற முடியாது. ஆதலின் ஏது பொருந்தாத இடத்தில் இருக்கக் கூடாது. அதைத்தான் சபக்ஷத்தில் பொருந்த வேண்டும், விபக்ஷத்தில் பொருந்தக் கூடாது என்பர். 'விபக்ஷத்தில் பொருந்தாத' என்பதைத்தான்-'விபக்ஷவிருத்தே பராவிருத்தம்' என்னும் சொல் கூறுகிறது. மாற்று வழியில் இருந்து திரும்பியவன் என்ற ஒரு பொருளும் 'விபக்ஷத்தில் பொருந்தாது' என்ற இரண்டாம் பொருளும் இந்தச் சொல்லிலிருந்து பெறுகிறோம்.

பல்லவ மன்னன் ஒருவன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். அப்பர் பெருமானால் சைவ சமயத்துக்கு மாற்றப்பட்டான் என்று, சேக்கிழார் பெரிய புராணத்திலிருந்து அறிகிறோம். அது மகேந்திர வர்மனே என்பது இதனால் உறுதியாகிறது. லிங்கத்தை வழிபடும் சைவத்துக்கு மாறினான் என்பது இதனால் பெறும் பொருள். இதனால் இலிங்க வழிபாடு மிகவும் சிறந்திருந்தது என்றும் அறிகிறோம். இக்குடைவரைக் கோயிலில் தனியாக ஒரு கர்ப்பக் கிருகம் உள்ளதும், அதன் நடுவில் சிவலிங்கம் பிரதிட்டை செய்யச் சதுரமான குழி வெட்டப்பட்டுள்ளதும், இவ்வுண்மையை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உணர்த்தும். இங்கு மேலும் ஒன்று குறிக்க விரும்புகிறேன். பெரும்பாலும் தர்க்க சாத்திரங்களில் அனுமானத்தைப் பற்றிக் கூறும்போது, ஏது, சாத்யம் என்ற சொற்களைத்தான் பயன்படுத்துவர். லிங்கம், லிங்கி என்ற சொற்களை அதிகம் பயன்படுத்த மாட்டார்கள். இந்த திருச்சி கல்வெட்டில், 'லிங்கம்' 'லிங்கி' என்ற சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காண்கிறோம். இதில் ஒரு சிறப்பு இருக்கிறது. சைவ ஆகமங்கள் 28 முக்கியமானவையாகும். இவற்றில் சுப்பிரபேதம் என்ற ஒரு ஆகமம் இருக்கிறது. இந்த சுப்பிரபேத ஆகமத்தில் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்னும் அளவைகள் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. அதில் கீழ் வரும் செய்யுள் காணப்படுகிறது. ''அக்ஷாதி கரணை: த்ருச்யம் பிரத்யக்ஷம் லிங்காத் லிங்கின: விஞானம் அனுமானம் இதிஸ் மிருத்ம்'' என்று உள்ளது. ''கண்கள் முதலிய கரணங்களால் காண்பது பிரயத்க்ஷம். லிங்கத்தினால் (ஏதுவினால்) லிங்கியை (துணியும் பொருளை) அறிவது அனுமானம்'' என்பது இதன் பொருள். சைவ ஆகமத்தில் லிங்கம் லிங்கி என்ற சொற்கள் அனுமானத்திற்கு வழங்கப்படுவது இதனால் தெளிவாகிறது. திருச்சி மலைக்கோயில் சிவனுக்கு எடுக்கப்பட்டது. சைவக் கோயில். சைவ ஆகமங்களில் காணப்படும் சொல் வழக்கையே மகேந்திரன் கல்வெட்டில் பயன்படுத்தியுள்ளான் என்பதும் இதனால் புலனாகிறது. இதே சொற்களைப் பயன்படுத்தி இரு பொருளும் பெறும்படி செய்து உள்ளது மகேந்திரனின் கவிதை ஆற்றலுக்கு எடுத்துக் காட்டு.

மகேந்திர வர்மனின் மற்றும் ஒரு கல்வெட்டுச் செய்யுளையும் காண்போம் :

''சைலேந்திர மூர்த்தனி சிலாபவனே விசித்ரே
சைலீம் தனூம் குணபரோ ந்ருபதி: நிதாய

ஸ்தாநும் விய தத்த விதி: ஏஷ யாதார்த்த சம்ஞும் ஸ்தாணு: ஸ்வயம்ச ஸஹ தேன ஜகத்ஸா ஜாத:''

மலேயின் உச்சியில் சித்ரமானகற்கோயிலில் சிவமயமான உருவைக் குணபரனுகிய அரசன் வைத்துத் தானுவைப் பிரதிட்டை செய்தான். அத்துடன் தானும் உலகில் தாணுவாக (நிலே யாகி) ஆனுன். இது மிகவும் பொருத்தம் அன்ருே!

இந்தச் செய்யுளிலும் இரண்டு பொருட்கள் தொனிக்கின்றன. இக்கோயில் கல்லினுல் உருவைச் செய்ததால், உலகில் இவன் பெயர் என்றும் நிலேத்தது என்பது ஒரு பொருள். 'ஸ்தாணு' என்ருல் சிவபெருமான் என்றும் பொருள். நிலேயானது என்பதும் பொருள். ஸ்தாணு என்ற சொல்லுக்குச் சிவபெருமான் என்ற பொருளும், நிலேயான (கற்சிலே ஆன தாலே) என்ற பொருளும் உண்மையாகும்படி இவன் செய்தான், என்று இச்செய்யுள் கூறு கிறது.

இதன் மற்ற பொருள், மன்னன் ஸ்தாணுவைப் பிரதிட்டை செய்து ஸ்தாணுவாக ஆனுன். சைவ சித்தாந்தத்தில் ஒரு மரபு உண்டு. 'இதை நான் செய்தேன்—இது என்னுல் செய்யப்பட்டது' என்று எண்ணுமல் அனேத்தும் சிவன் அருளாலேயே இயங்குகின்றது. நடைபெறுகின்றது என்ற எண்ணம் சிவனடியார்க்கு வருதல் வேண்டும். அதாவது எப்பொழுதும் சிவன் நினேவாகவே நிற்றல் வேண்டும். சிவனுடனேயே ஐக்யமாகி நிற்றல் வேண்டும்' என்பது சித்தாந்தம் குறிக்கும் மரபு. இதைத் தான் சிவஞான போதம்,

''அவனே தானேயாகிய அந்நெறி ஏகனுகி
இறைபணி நிற்க மலமாயை தன்னெடு வல்வினே
இன்றே''

என்று கூறுகிறது. 'அவனே தானேயாகி' என்னும் சொல்லேக் குறிப்பாகக் காணவும். இதையே சமஸ்கிருத சூத்திரம், ''சிவனே ஐக்யம் கத: சித்த'' என்று குறிக்கிறது. அரனுடன் ஒன்ருனன் என்பது பொருள். மகேந்திரன் (ஸ்தாணு: ஸ்வயம்ச ஜாத:) தானுவைப் பிரதிட்டைச் செய்து தானுவாகத் தானும் ஆனுன். தானுவோடு ஐக்யமானுன் என்பதும் பொருள். இதுவும் சைவ சித்தாந்தத்தில் குறித்துள்ள அதே கருத்து என்பதில் ஐயமில்லே. இதைத் தனது செயல் எனது சிவபிரானுடைய செயலே என்னும் வகையில் அவர் நினேவால் ஒன்றினுன். இது இயல்பே அன்ருே என்றும் இச்செய்யுள் தொனிக்கிறது என்பதை அறியும் போது சைவ சித்தாந்தத் தத்துவங்கள் மகேந்திரனின் காலத்தில் எவ்வளவு வேருன்றி இருந்தன. மகேந்திரன் அதில் எவ்வளவு இலயித்திருந்தான் எனக் காண்கிருேம்.

மகேந்திரன் திடமான பக்தியுடையவன். லிங்கத்தைப் பிரதிட்டைச் செய்து சைவனுகத் திகழ்ந்தான். சிவபெருமானேத் தன் தலேயிலே தரித்திருந்தான். அவருக்குக் கோயில் எடுப்பித்து, அதை அரன் பணியாகவே கருதி, அரன் நினேவாகவே நின்று அவனே தானேயாகி நின்ருன் என்று அவன் கல்வெட்டுக்களிலிருந்து அறிகிருேம். அதே கல்வெட்டுக்களில் உள்ள கருத்துக்களே பின்னர் வந்த சிவஞான போதம், சித்தியார் ஆகிய நூல்களிலும் இருக்கின்றன. இவற்றையே சைவ சித்தாந்தம் என்கிருேம். ஆதலின் கி. பி. 7-ஆம் நூற்ருண்டிலேயே சைவ சித்தாந்தம் தமிழகத்தில் மேலோங்கி நின்றது என்பது கல்வெட்டுக்களாலும் பெறப்படுகிறது.

சைவ சித்தாந்தம்

புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்ப்,
புகல்அளவைக் களவாகிப், பொற்பணிபோல் அபேதப்

பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும்,சொற் பொருள்போற்
பேதாபே தமும்இன்றிப் பெருநூல் சொன்ன

அறத்திறனுல் விளேவதாய், உடல்உயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும்அத் துவிதம் ஆகும்

சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்ருும் !

—உமாபதி சிவாசாரியார்

அகத்தீசுவரர் கோயில்

திரு. ஏ. ஏகாம்பரநாதன், M.A.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலக'த்தின் தென்பகுதியை ஆண்டு வந்த பாண்டிய மன்னர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோயில்கள் பல கட்டி, கலை, சமயம், கல்வி ஆகியவற்றை ஆதரித்து வந்தனர். இப்பாண்டியர் காலக் கோயில்களுள் குமரி மாவட்டத்தில், கன்னியாகுமரிக்கு மூன்று கல் வடமேற்கில் வடுகன்பற்று என்னும் ஊரிலுள்ள (பண்டைய அகஸ்தீஸ்வரம்) அகத்தீஸ்வரர் கோயிலும் ஒன்ருகும். இத் தலத்தில் சிவனுக்கும், திருமாலுக்கும் கோயில்கள் இருப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

அகத்தீஸ்வரர் கோயில் (சிவன் கோயில்)

இக்கோயில் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறையுள் லிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தில் நான்கு தூண்கள் உள்ளன. இத் தூண்கள் உருண்டை வடிவமாகவும், அதன் மேலுள்ள போதிகை நீள் சதுரமாகவும் காணப்படுகின்றன. இம் மண்டபத்தின் நடுவில் நந்தியும், மேற்புறத்தில் விநாயகரும், இரு நாக தேவதைகளும் காணப்படுகின்றனர். அர்த்தமண்டபத்தையடுத்துப் பிற்காலத்தில் கட்டப்பட்ட மகா மண்டபமும், இறைவிக்கென்று கட்டப்பட்ட கோயிலும் உள்ளன. மகாமண்டபத்திலுள்ள நான்கு தூண்களும் சதுர, எண்கோண அமைப்புகளைக் கொண்டவை.

சிவன்கோயிலின் அடித்தளம் உபானம், உபபீடம், குமுதம், ஜகதி, பட்டிகை முதலிய பிரிவுகளை உடையது. அர்த்த மண்டபம், கருவறை முதலியவற்றின் வெளிச் சுவர்களைத் தேவகோட்டங்கள், அரைத்தூண்கள் அழகு செய்கின்றன. அரைத் தூண்கள் தடி, கலசம், கழுத்து, கும்பம், பலகை, போதிகை முதலிய பகுதிகளைக் கொண்டுள்ளன. கருவறையின் வெளிச் சுவர்களிலுள்ள தேவகோட்டங்களில் சிற்பங்கள் இல்லை. ஆனல் தேவகோட்டங்களின் மேலுள்ள தோரணங்களில் தென்புறம் தக்கணமூர்த்தியும், மேற்புறம் யோகநரசிம்மரும், வடபுறம் பிரம்மனும் சிறிய அளவில் காணப்படுகின்றனர். கொடுங்கையில் கூடு அமைப்புகள் உள்ளன.

கோயிலின் விமானம் ஒரு தளமுடையது. தளத்தின் வெளிப் பகுதிகளில் கோஷ்ட பஞ்சரங்களும், அரைத் தூண்களும் உள்ளன. கோஷ்ட பஞ்சரங்களில் சுதை வடிவங்கள் எதுவுமில்லை. இத்தளத்தின் மேற்பகுதியில் நான்கு மூலைகளிலும் பூதகணங்கள், நந்திகள் ஆகியவற்றின் சுதை உருவங்கள் இடம்பெற்றுள்ளன. சிகரத்தின் கழுத்துப் பகுதியிலுள்ள தேவகோட்டங்களில் தென்புறம் தக்கணமூர்த்தியும் மேற்புறம், யோகநரசிம்மரும், வடபுறம் பிரம்மனும், கீழ்புறம் யானைமீதமர்ந்துள்ள இந்திரனும் காணப்படுகின்றனர். சிகரம் எண்கோணவடிவமுடையது. இதன் எட்டுப் பக்கங்களிலும் சிங்க முக வளைவுகளுள்ளன. சிகரத்தின் மேல் ஒற்றைக் கோபுர கலசம் உள்ளது.

மகா மண்டபத்தையொட்டி இறைவிக்கென்று கட்டப்பட்ட தனிக்கோயிலும் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகிய பகுதிகளைக்கொண்டு விளங்குகிறது. கருவறையில் உமையவள் இருகரமுடையவளாக, வலது கையில் நீலோத்பலமலரைப் பெற்றும், இடது கை தொங்கவிடப்பட்டும் அழகுடன் திகழ்கிருள். இக்கோயிலின் வெளிச்சுவர்களிலும் அரைத்தூண்கள், தேவகோட்டங்கள் காணப்படுகின்றன. ஆனல் இத் தேவகோட்டங்கள் சிற்பங்கள் நிறுவுவதற்கு ஏற்றவைகளாக அமைக்கப்படவில்லை. இக்கோயிலின் விமானமும் ஒரு தளமுடையது. தளத்தின் வெளிப் பகுதியில் அரைத் தூண்களும், கோஷ்ட பஞ்சரங்களும் காணப்படுகின்றன. சிகரத்தின் வெளிப்பகுதியில் நந்தி, கணங்கள் முதலியவற்றின் சுதை உருவங்கள் உள்ளன. இவையன்றிச் சிகரத்தின் கழுத்துப்பகுதியில் தென்புறத்திலும் வடபுறத்திலும் அமர்ந்த நிலையிலுள்ள இறையின் சுதை உருவங்கள் இடம்பெற்றுள்ளன. சிகரம் கூண்டு வடிவ அமைப்பு உடையது. இதன் வெளிப் பகுதியில் சிங்க முக வளைவுகளும், மேற்பகுதியில் மூன்று கலசங்களும் உள்ளன. இக்கோயிலின் அமைப்பு, கலைப்பாணி முதலியவற்றை நோக்கும்போது, சிவன் கோயில் கட்டப்பட்ட காலத்திற்குப் பின்னர் தான் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.

விஷ்ணு கோயில் :

சிவன் கோயிலின் தென்புறம் திருமாலுக்கென்று கட்டப்பட்ட தனிக்கோயில் ஒன்றும் உள்ளது. இக்கோயிலும் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய பகுதிகளைக் கொண்டது. கருவறையில் நாற்கரங்களையுடைய திருமாலும், அவரது இருமருங்கிலும் நிலமகளும், மலர்களும் நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றனர். மகாமண்டபத்திலுள்ள தூண்கள் சதுர, எண்கோணவடிவ அமைப்புகளை உடையவை.

கோயிலின் அடித்தளம் உபானம், உப பீடம், குமுதம், கண்டம், பட்டிகை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் வெளிச்சுவர்களில் அரைத் தூண்களும், தேவகோட்டங்களும் உள்ளன. அரைத் தூண்கள் தடி, கும்பம், கலசம், கழுத்து, பலகை, போதிகை முதலிய உறுப்புகளைக் கொண்டுள்ளதோடு மட்டுமின்றி, பலகையின் கீழ்ப்பகுதியில் இதழ் அமைப்பு களும் பெற்றுள்ளன. தேவகோட்டத்தில் சிற் பங்களோ, அவற்றின்மேல் தோரணங்களோ இடம்பெறவில்லை.

இக்கோயிலும் ஒரு தளத்தினையுடையது. தளத்தின் வெளிச்சுவரை அரைத்தூண்களும், கோஷ்ட பஞ்சரங்களும் அணி செய்கின்றன. இத்தளத்தின் நான்கு மூலைகளிலும் கருடனும், அவற்றின் இருமருங்கிலும் சிங்கங்களும் காணப் படுகின்றன. சிகரத்தின் கழுத்துப் பகுதியி லுள்ள தேவகோட்டங்களில் தென்புறம் தக் கணாமூர்த்தியும், வடபுறம் பிரம்மனும், மேற் புறம் யோக நரசிம்மரும், 'கீழ்ப்புறம் யானை மீதமர்ந்த இந்திரனும் உள்ளனர். சிகரம் எண் கோண வடிவமுடையது. இதன் எட்டுப் பக்கங்களிலும் சிங்க முக வளைவுகளுள்ளன. சிகரத்தின்மீது ஒரு கோபுர கலசம் காணப்படு கிறது. இக்கோயில், சிவன் கோயிலின் கலைப் பாணியை ஒட்டிப் பிற்காலத்தில் கட்டப்பட் டுள்ளது.

அத்திமரம் :

சிவன் கோயிலின் வடபுறத்தில் அத்திமரம் ஒன்றுள்ளது. இம்மரத்தின் கீழ் அகத்திய முனிவர் தென்னாடு வந்தபோது தவம் செய் தார் என்னும் செவிவழிச் செய்தியும் நிலவி வருகிறது. இம்மரத்தைச் சுற்றிலும் கருங் கல்லால் அமைக்கப்பட்ட பீடத்தில் விநாயகர், நாகதேவதைகள், நந்தி முதலிய சிறிய சிற் பங்கள் காணப்பெறுகின்றன.

சுற்று மதில் :

இத்தலத்திலுள்ள சிவன், திருமால் கோயில்களைச் சுற்றிலும் கட்டப்பட்டுள்ள திருச்சுற்று மதில் பிற்காலத்தைச் சார்ந்த தாகும். முன்னர் கட்டப்பட்ட சுற்றுமதில் சிதைக்கப்பட்டுள்ளது. சிதைந்த மதிலின் ஒரு பகுதியினைக் கோயிலின் மேற்புறத்தில் காண லாம்.

கல்வெட்டுகள் :

சிவன்கோயிலின் அடித்தளத்திலும், மகா மண்டபத்திலுள்ள தூண் ஒன்றிலும் கல்வெட் டுக்கள் காணப்படுகின்றன. இவையன்றி இக் கோயிலின் தெற்கில் எழுத்துப்பாறை என்ற ழைக்கப்படும் பாறை ஒன்றிலும் கல்வெட் டுக்கள் உள்ளன. இக்கோயிலின் அடித்தளத்தி லுள்ள கல்வெட்டுக்கள் பாண்டியர் காலத் தவை. இவற்றுள் சில முழுமையாக இன்றிச் சிதைந்து காணப்படுகின்றன.

பாண்டிய மன்னனாகிய சடையவர்மன் ஸ்ரீவல்லபனது இரண்டாவது ஆட்சியாண்டில் (கி.பி. 1123) பொறிக்கப்பட்ட கல்வெட்டில் ''ஸ்வஸ்தி ஸ்ரீ திருமடந்தையும், ஜயமடந்தை யும் திருப்புய.....இருநிலமும் பெருமையெய்த எண்டிசையுங் குடை நிழற்ற மன்னவரெல்லாம் வந்திறைஞ்ச....சக்கரவர்த்திகள் ஸ்ரீ வல்லப தேவர்.....'' என்னும் மெய்க்கீர்த்தி காணப் படுகிறது. இக்கல்வெட்டில், பாண்டியமன்னன் திருப்பூவணத்து மாளிகையிலுள்ள அழகிய பாண்டியன் கூடத்துப் பள்ளிக் கட்டிலில் இனிது வீற்றிருந்து இக்கோயிலுக்கு நூற்று ஏழரை மாடைகளைத் (பொன் நாணயங்கள்) தானமாக வழங்கினான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது1. இதுபோன்று இம்மன்னனது மூன்றாவது ஆட்சி யாண்டில் (கி.பி. 1124) திரு அகஸ்தீஸ்வர முடைய மகாதேவருக்கு (சிவன்கோயிலுக்கு) தினமும் தவறாது வழிபாடு நடத்த நூற்றைம் பதரை ($150\frac{1}{2}$) மாடைகள் வழங்கப்பட்டுள் ளன.2. மேலும் இவ்வரசனது நான்காவது ஆட்சியாண்டில் (கி.பி. 1225), இக்கோயிலைச் சார்ந்த மடம் ஒன்றினில் வாழ்ந்து வந்த சிவ யோகியார்களுக்கும், தினமும் கன்னியா தீர்த்த மாடி (கன்னியாகுமரியில் குளித்துவரும்) இக் கோயிலில் பூசை செய்து வந்த பூசாரிகளுக்கும் உணவளிப்பதற்காக சில நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன.3 இதுபோன்று, ஸ்ரீவல்லப னின் அரசியாகிய உலகமுழுதுடையாளின் வேண்டுகோளுக்கிணங்க சிவயோகிகளுக்கு உண வளிக்கவும் நிலங்கள் வழங்கப்பட்டதை மற்று மொரு கல்வெட்டு கூறுகிறது.4

கோயிலின் அடித்தளத்தில் வடபுற முள்ள கல்வெட்டு அழகிய மணவாளப் பெருமாளுக்கு ஆடித் திருவோண நன்னாளில் நடக்கும் பூசைக்குக் களபம் கொடுத்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டு 14-15-ஆம் நூற் றாண்டைச் சார்ந்தது என்று கருதப்படுகிறது. மகா மண்டபத் தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு, அகஸ்தீஸ்வரத்து உலகுதொழநின் றான், காரி என்பவர்களால் இத்தூண் நிறுவப் பட்டதாகக் கூறுகிறது.6 இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள் சிலவற்றில் திருமந்திரஓலை, புரவுவரித் திணைக்கள நாயகம் முதலிய அதி காரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எழுத்துப்பாறையிலுள்ள இரு கல்வெட்டு களும் கொல்லம் ஆண்டு 614-ல் (கி.பி. 1438) பொறிக்கப்பட்டவை. ஆனால் இவற்றில் மன்ன னது பெயர் குறிப்பிடப்படவில்லை. இக்கல் வெட்டுகள், மன்னனது பிறந்த நாளில் அகஸ் தீஸ்வரம் என்னும் உதையமார்த்தாண்ட சதுர் வேதிமங்கலத்திலுள்ள பட்டர்களுக்கு (பிராம ணர்கள்) அகரம் (வேதம் பயிலும் இடம்) ஏற் படுத்திக் கொடுத்து, அதில் ரிக், யஜுர், சாம வேதங்களைப் பயில்வதற்கும், அவர்களது மருத் துவச் செலவிற்கும், மண்பாண்டத் தேவை களுக்கும் நிலங்களைத் தானமாக வழங்கியதைக் குறிக்கின்றன. இந்நிலங்கள் தெற்குளத்தின் அருகிலும் (கவற்குளம்), அழகிய சோழநல் லூரிலுள்ள (நல்லூர்) பெரியகுளத்தின் பக்கத்

திலும், கருப்புக்கோட்டையிலும், புதுக்குளம், தேவிகுளம் (தேவளம்), (நாணம்பிகுளம்) (ஞானம்பாளம்) ஆகிய குளங்களை ஒட்டியுள்ள புரவுகளிலும், முட்டத்திற்கு (முட்டப்பதி) மேற்கிலும், சுசீந்திரம் பற்றிற்குத் தெற்கிலும் மணக்குடி பற்றிலும் காணப்பட்டன.7

இக்கல்வெட்டுகளில் நில அளவைகள், அளவுகோயில்களின் பெயர்கள், சில அதிகாரிகளின் பெயர்கள் முதலியன இடம்பெற்றுள்ளன. கி.பி. 15-ம் நூற்றுண்டில் அகஸ்தீஸ்வரம் என்ற ஊருக்கு உதையமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலம் என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வூர் புறத்தாய நாட்டு தென்வாசி வாரண நன்னுட்டிலுள்ள ஒரு பகுதியாகும் என அறிய வருகிறோம். ஆனல் கன்னியாகுமரி பகவதியம்மன் கோயிலிலுள்ள கல்வெட்டு ஒன்று புறத்தாய நாடும், தென் வாரணவாசி நாடும் ஒன்று என்று கூறுகிறது.8 பகவதியம்மன் கோயில் கல்வெட்டிலுள்ள 'தென் வாரணவாசி நாடு' என்னும் பெயர், எழுத்துப்பாறைக் கல்வெட்டில் ''தென்வாசி வாரண நாடு'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

காலம் :

அகஸ்தீஸ்வரர் கோயிலின் அடித்தளத்திலுள்ள கல்வெட்டுகள் பாண்டிய மன்னனுகிய சடையவர்மன் ஸ்ரீவல்லபன் காலத்தவையாதலால், கி.பி. 12-ம் நூற்றுண்டில் இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும். மகாமண்டபத்திலுள்ள தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு இத்தூண் உலகுதொழநின்ருன், காரி என்பவர்களால் நிறுவப்பட்டதென்பதைக் குறிக்கிறது. இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் கி.பி. 17-ம் நூற்றுண்டு வரிவடிவம் பெற்றிருப்பதாலும், மகாமண்டபம் பிற்காலக் கலை அமைப்புக்களைக் கொண்டிருப்பதாலும் 17-ஆம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். மேலும், இம்மண்டபத்தை ஒட்டிக் காணப்படும் இறைவியின் கோயிலும், தெற்கிலுள்ள விஷ்ணு கோயிலும் பிற்காலக் கலைப் பாணியில்தான் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, சிவன் கோயிலின் கருவறை, அந்தராளம், அர்த்தமண்டபம் ஆகிய பகுதிகள் மட்டும் கி.பி. 12-ம் நூற்றுண்டைச் சார்ந்தவையாகும்.

அபிராமி அந்தாதி கல்வெட்டுத் திறப்புவிழா

சென்னை சைதாப்பேட்டை செங்குந்த கோட்டம் என்னும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில், 26-1-77 புதன்கிழமை காலை 10 மணி அளவில், முன்னுள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையிலும், திருமதி இந்து பாலா சுகாதியா அவர்கள் முன்னிலையிலும், தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்களால், சிறப்புற நிகழ்த்தப்பெற்றது. இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராசன், நீதிபதி மாண்புமிகு பி. ஆர். கோகுலகிருஷ்ணன், நமது அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., திரு எம். சூரியராஜ், பி.ஏ., பி.எல்., திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., திரு இரா. சுராஜ், திரு என். சங்கரநாராயணன், திரு நடராஜ முதலியார் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். திரு டி.என். செல்வராஜ் வரவேற்புரையும், திரு பி. எஸ். கந்தசுவாமி முதலியார் நன்றியுரையும் நவின்றனர். இவ்விழாவுக்குரிய ஏற்பாடுகள் ''நண்பர் குழாம்'' உறுப்பினர்களால் சிறப்புற ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது.

—ஆசிரியர்.

மலைமேலே கலைமுனிவர்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

எந்நாடு சென்றாலும் அந்நாட்டு முனிவரைத் தேடி உள்ளுறவு கூடி மகிழ்வது என் வழக்கம். பெரிய செல்வத் திருமாளிகைகள், விண்ணோங்கிய அரண்மனைகள், கண்குளிரும் காட்சிச் சாலைகள், ஆடல் பாடல் அரங்குகள், அழகுப் பொழில்கள், சுருசுருப்பான தொழிற் சாலைகள்—இவையெல்லாம் சாதாரணக் காட்சிகளே. அரிதினும் அரிது, ஆன்மசித்தர் உறவு. உறவிற் சிறந்தது துறவு! முத்திக்கு வித்து முனிவர் உறவே! மெல்போனில் சிறந்த அறிவாளர் கூடி எனக்கு விருந்து வைத்தனர். அவ் விருந்தினர் என் முறைப்படியே உணவு வேண்டினர். நான் அட்டிலிற் புகுந்தேன். மீன் ஊன் முட்டை சாராயம்—காப்பி—டீ—அங்கே வரக் கூடாதெனத் தடை செய்தேன். நல்ல அரிசியும் பருப்பும் களைந்து ஒரு பெரிய பாத்திரத்தில் வேக வைத்தேன். அன்பர்களைக் காய்கறிகளைத் திருத்தச் செய்தேன். காலிஃப்ளவர், தக்காளி, வெண்டைக்காய், உருளைக் கிழங்கு, காரட்டு எல்லாம் பதமாக அரிந்து வேகும் பாத்திரத்திலே போட்டேன். தேங்காய் உடைத்துத் துருவிப் போட்டோம். கீரை வகைகள், கொத்துமல்லி, கருவேப்பிலை, ஸ்பினாஷ் எல்லாம் போட்டு நன்றாக வெந்ததும் மிளகுப் பொடி தூவி, மஞ்சள் பொடி சேர்த்து, கமகமவென்று கதம்பம் தயாரானது. பிறகு கோதுமை ரவையும் பாசிப் பருப்பும் பிஸ்தா, முந்திரிப் பருப்பும் வேகவிட்டு, ஏலம், ஜாதிக்காய் சேர்த்து, பால் விட்டுக் கிளறி, கற்கண்டுப் பொடி சேர்த்துப் பாயாசம் செய்தோம். உருளைக் கிழங்கு வருவல் செய்தோம். அப்பளம் பொரித்தோம். எல்லோரும் சேர்ந்து கதிர் வணக்கம் செய்தோம். தட்டுகளில் கதம்பம் வருவல் அப்பளம், கிண்ணிகளில் பாயாசம் தந்தோம். ரேடியோவைத் திருகி விட்டோம். பாட்டுக் கேட்டுக் கொண்டே சாப்பிட்டோம். உண்ட பிறகு யாரும் சுருட்டுப் பிடிக்கவில்லை. எல்லோரும் சிறிது மர நிழலில் நாற்காலி போட்டு அமர்ந்து மௌனமாயிருந்தனர். ஐந்து கார்கள் வாசலில் வந்து நின்றன. ''செல்வோம்; டன்டெனாங் குன்றில் விளங்கும் (வில்லியம் ரிக்கெட்ஸ் முனிவர்) சாந்தவனத்திற்கு அழைப்பு வந்துவிட்டது. இருபத்தைந்து பேர் புறப்பட்டோம். யாரா ஆற்றங்கரையில் வண்டிகளை நிறுத்திச் சிறிது உலாவினோம். வீண் பேச்சு இல்லை. வில்லியம் ரிக்கெட்ஸ் முனிவர் பற்றிய நூலும் அறிக்கைகளும் ஒவ்வொருவர் கையிலும் இருந்தன. அவற்றைப் படிப்பது சிந்திப்பது, மௌனமாகத் தியானிப்பது — இவையே எங்கள் தொழிலாகி, மலையடிவாரத்தை அடைந்தோம். மலைப் பாங்கரெல்லாம் பச்சைப் பசேல்—மரங்கள்! வானோங்கி வளர்ந்து அடர்ந்து நிழல் பரப்பும் அந்தக் கருணைப் பசுமையூடு நாங்கள் மெய்ம் மறந்து நடந்தோம். ஃபர், ஸிடார், ஓக், பைன் முதலிய பல வகை மரங்களுக்கு மலையேறிச் சென்றோம். பாதையில் ஒரு முள், கல் இல்லை. பெரிய பெரிய மரங்களைச் சுற்றி மேடை கட்டிப் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. சில இடங்களில் ரொட்டி, பிஸ்கட், சோடா, பழச்சாறுகள் விற்றனர். அந்த இயற்கைப் பொழில் மனம் மகிழ, உடல் சிலிர்க்கக் கண் குளிர எங்களை வரவேற்று மேலே நடத்தியது. வழியே காட்டு விலங்குகளின் சத்தம் கேட்டது. அவை உரிமையுடன் தத்தம் குரலில் உள்ளெழுச்சியைக் காட்டிக் கொண்டிருந்தன. யாரும் அங்கே வேட்டையாடக் கூடாது. உயிர்க் கொலை செய்யக் கூடாது. அதே கங்காருக் கூட்டம் ஒன்று ஏதோ மாநாடு நடத்துவது போல வட்டமாக அமர்ந்து கணுகுணுக்கின்றன. பல நிறப் புட்கள் இனிய குரலெடுத்துக் கலகலப்பாகப் பேசிக் கொள்ளுகின்றன. மலைக்காட்டினின்று சிற்றருவிகள் சலசலத்து இறங்குகின்றன. அவற்றின் நீர் படிகத்தை உருக்கி வார்த்தது போலிருக்கிறது. இதோ முனிவர் நிலையம் வந்துவிட்டது.

பாறைகளின் அழகிய சிற்பங்கள் கலைச் சுவை ததும்புகின்றன. சொற்களுக்கரிய அற்புதம். எல்லாம் முனிவர் செதுக்கிய கலையழகு! இயற்கையழகு கொஞ்சும் பச்சை மலையில் கலையழகைச் செதுக்கிய முனிவர் தமது குகை வாயிலில் கை உயர்த்தி நிற்கிறார். ஒரு தொண்டர் அவர் வரலாற்றையும் அனுமதிகளையும் விளக்கும் அறிக்கைகளைத் தருகிறார். எங்களுக்குப் படிக்கவோ பேசவோ தோன்றவில்லை. நேயர்களுக்காகச் சில குறிப்புகளைத் தருகிறோம்.

வில்லியம் ரிக்கெட்ஸ் அமெரிக்காவின் இயற்கை அறிஞன் ஹென்றி தோரோ போன்ற உயிர்க் கருணை வள்ளல். சிறு வயது முதல் அவர் வாழ்க்கை இயற்கை அழகிலே தோய்ந்தது.

இயற்கையுள்ளத்திலே
இன்பம் இருக்குதம்மா
உயர்மலை வனத்தில்—என்
உள்ளம் உலாவுதம்மா!

ஆர்க்கும் அருவியிலே—இறைவன்
அருள் தவழுதம்மா
பார்க்கும் கதிரவனில்—புனிதப்
பைபிள் பேசுதம்மா

என்று வில்லியம் ரிக்கெட்ஸ் இளம் வயது முதலே பாடினான். மைகேல் ஆஞ்சலு, ரஃபேல் போன்று அழகிய உருக்களைச் செதுக்கினான்.

The mountain laughs with flowing streams
The streams laugh into fields
See how the face of Nature beams
with gold and ruby yields !

ஓடும் அருவிகளில் உயர்மலை சிரிக்கும் ;
ஓங்கும் பயிர்நிலத்தில் ஓடை ஓடிச்சிரிக்கும்
காடு வனங்களிலே சொக்கத் தங்கமணிகளைப் போல்
கனிமலர் சிரிக்கும் அதைக் கண்டென்உளம் சிரிக்கும்;

என்று பாடுவான். பியானோ வாசிப்பான். ஓவியம் தீட்டுவான். உள்ளக் கிளர்ச்சியைப் பீலி முனையிற் காட்டுவான். இனிய குரலில் இறைவனைப் பாடுவது, இயற்கை அழகைச் சிலை வடிப்பது—ஆகிய இரண்டும் அவன் இயல்பு ஆயின. வேறு உலகோருக்குரிய ஆசைகள் அவன் உள்ளத்தைத் தொடவில்லை. வில்லியம் ரிக்கெட்ஸ் தூய சைவ உணவையே உட்கொண்டான்—முதன்மையாகக் கனிகள். அவன் அடிக்கடி பழங்குடி மக்களுடனே பழகி அவர்கள் பண்பாட்டைப் பயின்றான். ஆத்திரேலியாவிலே குடியேறின வெள்ளைக்காரர்கள் பழங்குடி மக்களைக் கொடுமை செய்தனர். நகருக்குள் வந்தால் சுட்டனர். அவர்கள் முன்னேறு மூலைக் காடுகளில் ஒதுக்கி ஒடுக்கப்பட்டார்கள். இக்கொடுமைகளைக் கலைமுனிவன் பலமாகக் கண்டித்தான். அவர்கள் பண்பாடுகளைப் பொருட் செறிவுள்ள சிற்பங்களாகத் தீட்டினான். பழந் திருவாளர் பண்பாடுகளைப் பயின்று அறிந்து கொண்டு பாட்டாலும், உளியாலும் தீட்டி உலகுக்கு விளக்கினான். வேதனை தரும் சோதனைமேல் சோதனை வந்தன. படலம் படலமாக வந்தன. தான் இயற்கையில் கண்ட இறைவனை முனிவன் எல்லா இடமும் சம உரிமையுடனே கண்டான். காட்டு விலங்குகளிடம் கருணை காட்டினான். கங்காருக்கள் அவனைச் சூழ்ந்தன. கங்காரு இலை தழைகளையே உண்டு வாழும். அதுபோல மனிதன் செடி உணவையே உண்டு, உயிர்க் கொலை செய்யாது வாழலாமே என்று பேசினான் வில்லியம்.

1935-ம் ஆண்டு அவன் ஓர் அக்க வேலையிற் புகுந்தான். டன்டனங் (Dandenang) மலைமேல் நல்ல நீரோட்டமான இடத்தில் 4.5 ஏகரா நிலம் வாங்கித் தனது ஆத்மீக சாதனைகளைத் தொடங்கினான். நல்ல களிமண்ணில் அழகான உருக்களைச் செய்து, தீயில் சுட்டுப் பண்படுத்தி, அவற்றை மலைமேல் இணைத்துச் சுற்றிலும் கலையழகு வடித்தான். அச்சிலைகளில் அவன் உள்ளம் பேசியது. புட்களும் விலங்குகளும் அவன் கருணைக் கலையை விரும்பின. பழங்குடி மக்கள் அவனைப் போற்றினர். ஆனால் பொருமைக்காரர் தூற்றினர். அவன் புகழின் மேல் கரி பூசினர். அவன் இரவு பகலாக வடித்த சிலைகளை உடைத்தனர். வில்லியம் ரிக்கட்ஸ் மனச் சாந்திக்காக இந்தியாவுக்கு வந்து, நமது நாட்டு யோக புங்கவரைத் தரிசித்தான். தங்கம் பொங்கும் நாட்டை விடத் தவம் பொங்கும் இந்தியாவை அவன் விரும்பினான். யோக சாதனங்களை அறிந்து பயின்றான். மீண்டும் அதே மலைமேல் குகை அமைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்தான். தான் படைத்த வண்ணச் சிலைகள் பகைவராலே தகர்க்கப்பட்டன. எனினும் அவர்களுக்கும் அறிவு வரும்படியான பைபிள் காட்சிகளைச் சிலை வடித்தான் மலை முனிவன். அன்பர் கூட்டம் அவன் சூழலில் அமைதி கண்டது. 1960-ல் அரசாங்கத்திற்கு அன்பர் விண்ணப்பம் செய்து ரிக்கட்ஸ் முனிவருக்குப் பதினான்கு ஏக்கர் நிலம் உதவச் செய்தனர். அத்தனையும் புனித நிலம் என்று பாதுகாப்புற்றது. அதற்குப் பழங்குடி மக்கள் பலமான பாதுகாப்பாக நின்றனர். அரசாங்கம் கருத்தும் காவலுமாக நின்று முனிவருக்கு உதவியது. முனிவன் கலையும் சிலையும் கவலையில்லாது முன்னேறின. பழங்குடி மக்களின் பண்பாட்டைச் சிலையால் வடித்தான் மலை முனிவன். அவர்கள் உள்ளம் அவனிடம் அன்பால் இணைந்தது.

உலகத் தாயின் உயர்ந்த சிலையும், தாயின் பிள்ளைகள் இருபுறமும் தவழ்ந்து விளையாடும் காட்சியும் காணக் காண இன்பம் அளிப்பவை ஆகும். ஆயிரக் கணக்கான அன்பர் முனிவன் வாழ்வையும் கலை நயத்தையும் கண்டு களிக்கின்றனர். அங்கே சிலைகளைப் பதமாக்க மின்சாரச் சூளைகளும், அன்பர் தங்கியிருக்கும் குடில்களும், உணவகங்களும், தோட்டத் தொழிலகங்களும் வளர்ந்துள்ளன. முனிவர் மலைக் குகையில் நல்ல வசதியுடன் வாழ்கிறார். பாறை ஊற்று உள்ளது. குளிர் காய மின் வெப்பக் கருவியுள்ளது. அன்பர் அமர்ந்து பேச நாற்காலிகள் உண்டு. தியானத்திற்குச் சிலுவைக் காட்சி மிளிரும் ஒரு குகை உண்டு. சுற்றிலும் பசும் பொன்னழகு குலுங்குகிறது.

இந்த அழகான குகாலயத்தில் நாங்கள் புகுந்து ஓம் என்றோம். மின்னல் போலத் துள்ளி வந்தார் வில்லியம். 'நீலவுடை, நீலத் தொப்பி, புன்னகை முகம். வருக வருக! மகரிஷி வருக! அமர்க! மிக்க மகிழ்ச்சி'' என்று முனிவர் எங்களை வரவேற்றார். அரிய நாள், புனித நாள், புண்ணிய நாள்—வில்லியம் முனிவருக்கு வணக்கம். நாங்கள் கொணர்ந்த கனிகளைத் தந்தோம். ரொட்டி பிஸ்கோத்து கேக் தந்தோம்.

ஒரு மாணவனிடம் ஆரஞ்சுக் கனிகளைப் பிழிந்து தேனிட்டுத் தரச் சொன்னார். கோப்பையில் கனிச் சாறு வந்தது. பருகினோம். எனது நூல்களை அன்பளித்தேன். உடனே Gospel of Perfect Life என்னும் நூலைப் பிரித்தார், படித்தார், குதித்தார்.

In tune with nature
know the nature - self
Rest in that natural
Blissful relief

இயல்பான உன்னை இயல்பா யறிந்தே
இயல்பாய் இன்புற் றிரு

இயல்பு திரியா திருத்தலே இன்பம். நம் இயல்பு உண்மை அறிவு இன்பம். நாம் சுத்த ஆன்மா. ஆத்ம ராஜ்யத்தைப் பற்ற உள்ளாட்சி புரி. நீயே உனக்கு அரசன். ஆன்மா பொது, எதுவும் அதுவே... உறவும் துணையும் உன் ஆன்மா. ஆம் ஆம்'' என்று எழுந்தார்.

'The Soul I am
I am the Om'!

என்று சீழ்க்கையடித்தார். தானே அகழ்ந்த ஊற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கண்ணாடிக் கோப்பையில் அளித்தார்.

A heavern I find
Here in my mind!

ஆன்மா நான்—நானே ஓம்—என்னின்பம் என்னுள்ளே! இந்த மலை வனத்தில் இயற்கையில் உரிமையுடன் பெருமையாக வாழ்கிறேன். செடி கொடி மரங்களெல்லாம் என் உறவினர், பறவை விலங்குகளெல்லாம் என் குழந்தைகள். பழங்குடி மக்கள், புதர்வாழ் புதல்வர் என் அன்பிற்கு உரியவர். இயற்கை என் இலக்கியம்; உடுவான் என் பைபிள், இயற்கையில் ஊன்றிக் கொண்டு சுற்றுலகைக் காண்கின்றேன். என்னை அறிந்து உலகை அறிகிறேன்.

நான் : ஆஸ்திரேலியப் பழங்குடிகளை எப்படிக் காண்கிறீர்? அவர்கள் நிலை என்ன? என் கொள்கை : 1. பாருலகம் எங்கெங்கும் பாரோர் உரிமையாமோ? 2. மனிதனுக்கில்லை மனிதன் அடிமை. அனைத்தும் வல்லானுக்கே ஆள்.

The world belongs
Collectively to all
And not to any
individual
No man is above
to any other man
All souls belong
to the Almighty one.

முனிவர் : இதுதான் முழுவுண்மை. நான் புட்களையும் விலங்குகளையும் கூட என் கூடப் பிறந்தவராகவே கருதுகிறேன். புதர்வாழ் மக்களான (Bush-men) பழங்குடிகளே, இந் நிலத்தினர். இந்நிலத்தில் வெள்ளையர் குடியேறிக் கொண்டு, நிலத்துரிமையாளரைச் சுட்டனர், வெட்டினர், தாழ்த்தினர், மடமையில் ஆழ்த்தினர். அவர்களை உயர்த்தி முன்னேற்றுவதே என் கடமை. அவர்களையே என் சிற்பச் சிலைகளில் சிறப்பாக விளக்கி வருகிறேன். வன வாசிகளை வெள்ளையர் துப்பாக்கியால் சுட்டழித்ததை நான் கண்டிக்கிறேன். மனிதனை மனிதன் பிரித்து வருத்தும் கொடுமையை எதிர்க்கிறேன். அரசியல் பிரிக்கிறது; ஆத்மீகம் சேர்க்கிறது. நான் எனது எனக்கே என்று செருக்காடும் அரசியல் உலகைப் பிரித்தழிக்கிறது. பிரிவினை செய்யும் மதமும் பயனில்லை.

நான் : ஒரே கடவுள் ஒரே உலகம்
ஒரே ஆன்ம நேயர்நாம்
ஒரே வானக் குடைநிழலில்
ஒரே குலமாய் வாழுவோம்

இதுவே என் கொள்கை.

Prosper All Conscious
of the **one in all**.

அனைவரிடமும் உள்ள ஒன்றை உணர்ந்து எல்லாரும் கூடி வாழ்க... என்று பாடுவோம். இந்த ஆன்ம நேயத்தை Soul Sings (ஆன்மா பாடுகிறது) என்ற இந்த இசை நூலில் பாடியுள்ளேன்.

நூலைத் தந்தேன்—அதில் சில பாடல்களை அவர் இனிமையாகப் பாடி மகிழ்ந்தார்.

எல்லோருக்கும் அன்பு
எல்லோருக்கும் இன்பம்
எல்லோருக்கும் உரிமை

இதுவே மாந்தர் பெருமை Dignified human role என்று பாடி என் குறிப்பேட்டில் இவ்வாறு எழுதிக் கையெழுத்திட்டார் முனிவர்.

O great Yogi
My life is expressed in this lovely forest scene,
It is an inner Spritual awakening
Words Cannot reveval this awakening
That alone can understand the beautiful,
Compelling mystery of life in Nature

—William Rickettes

இந்த இனிய வனக்காட்சியின் விளக்கமே
என் வாழ்க்கை.
அந்த வாழ்க்கை அந்தராத்ம விழிப்பிலாவது
இந்த விழிப்பைச் சொல்லால் விளக்க முடியாது
அதுவே இயற்கை வாழ்வின் அழகையும்
ஆழ்ந்த ரகசியத்தையும் விளக்க வல்லதாகும்.

—வில்லியம் ரிக்கெட்ஸ்

எங்களைச் சுற்றும் காண்பித்து வழியனுப்பும்போது முனிவர் எனது நூலைப் பிரித்து :

Hail Righteous souls !
Let righteous goodness reign
Let all live as
a Super race divine

நல்லறிஞரோங்கி நலமோங்கிப் பூ வெங்கும்
எல்லாரும் வாழ்க இசைந்து

வில்லியம் முனிவர் என் ஆங்கில நூல்களைப் படித்து ஆசி கூறினர். இத்தகைய முனிவர் உறவு வளர்க.

***

சைவசித்தாந்த சாத்திரங்கள்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,
திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

சாத்திரங்களாவன யாவை ?

சிவநெறியிற் கொள்ளப்படும் அடிப்படை உண்மைகளையும் கொள்கைகளையும் முறைப்படுத்தி உணர்த்தும் நூல்கள் சாத்திரங்கள் எனப்படும். சாசனஞ் செய்வது சாத்திரம். சாசனம்—ஒழுங்கு, ஆணை. பொருள்களை ஒழுங்குபடக் கூறுதல் பற்றியும், சற்குரு வடிவில் தோன்றி இறைவன் தன் ஆணையை இந் நூல்கள் வடிவில் வைத்தல் பற்றியும் இவை சாத்திரம் எனப்படும்.

இவ்வியல்புள்ள, ஞான மெய்ந்நெறி உணர்த்தும் நூல்களுள், ஆதித் தமிழ் முதல் நூலாக இஞ்ஞான்று காண நிற்பது பத்தாந் திருமுறையாக உள்ள திருமூலர் திருமந்திரமே ஆகும். ஆயினும், பிற்காலத்து (எட்டாம் நூற்றுண்டு முதல்) வெவ்வேறு கொள்கையாளர்கள், தத்தம் கொள்கைகளைத் தாபனம் செய்யப் புகுந்து, சமுதாயத்தில் உள்ள மக்கள் உள்ளத்தை வெறுஞ் சொற்போர்களில் செலுத்திப் பொருட் பெற்றிகளை உணர வொட்டாதபடி பற்பல கொள்கைகளைப் பிரசாரஞ் செய்து குழப்பம் விளைத்தமையால், அக்குழப்பம் நீங்கி மக்கள் தெளிவுணர்வு பெற்றுய்தற் பொருட்டுச் சிவாநுபூதிச் செல்வர்கள் அருளிச் செய்த செந்தமிழ் நூல்கள் பதினன்கு உளவாயின.

அவை (1) திருவுந்தியார், (2) திருக்களிற்றுப்படியார், (3) சிவஞான போதம், (4) சிவஞான சித்தியார், (5) இருபா இருபஃது, (6) உண்மை விளக்கம், (7) சிவப்பிரகாசம், (8) திருவருட் பயன், (9) வினவெண்பா, (10) போற்றிப்பஃறொடை, (11) உண்மை நெறி விளக்கம், (12) கொடிக்கவி, (13) நெஞ்சுவிடு தூது, (14) சங்கற்ப நிராகரணம் என்பவை ஆகும்.

சாத்திரங்களின் தனிப்பெருமை :

இவை சுருக்கல் விளக்கல் என்னும் அழகு உடையனவாய்க் கேட்போர் உள்ளத்தை வீண் சொற் போரினின்று மீட்டுப் பொருள்களின் உண்மையியல்பை நோக்கிக் கண்டு தெளியுமாறு துணைபுரிவன. சொற்சாலங்களால் அறிவை மயக்காதவை. பொருள்களை அளவைகளாலும் பொருந்துமாற்றலும் தெளிய எடுத்துக் காட்டுவன. திருநான்மறை முடிவு எனப்படும் உபநிடத முடிவுகளை, வேதங்களின் மந்திர பாகத்தோடும் சிவாகம ஞானபாதத்தோடும் முரணுதபடி கொண்டு, விளக்குவனவாய் இருத்தலோடு, செந்தமிழ்ப் பயனய், உயர் ஞான மூல இலக்கியங்களாயுள்ள திருமுறைகளில் ஊடுருவி நிற்கும் அருளியலைக் காட்டுவனவாகவும் அமைந்துள்ளது. தமிழ் மக்களின் வாழ்வியல் அமைப்பு (The Constitution of Tamil way of life) எனத் தகும் பொது மறையாகிய திருக்குறளோடு முரண்படுதல் இன்றி, அதன்கண் உள்ள ஞானவியலின் விளக்கவுரைகளாகவும் இவை அமைந்துள்ளன. இக் காரணங்களால் இவை தலையாய பிரமாண நூல்களாக வைத்துப் போற்றப் பெறுவன.

இவை மக்கள் பொய்யை நீக்கி மெய்யில் நிற்குமாறு, மெய்யைக் கண்டு காட்டுதலால் மெய்கண்ட நூல்கள் எனவும், மறை முடிவின் சித்தாந்தம் கூறும் சிவாகம ஞானபாதப் பொருள் உணர்த்துதல் பற்றிச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனவும் வழங்கும்.

3. பொதுப் பொருள் நிலை :

(1) முடிநிலை உள்பொருள்கள் :

இறை, உயிர், தளை என்னும் மூன்று பொருள்கள் என்றும் உள்ளவை. இவற்றுள் எதனையும் இல்பொருள் என்றே, பிறிதொன்றன் திரிந்தநிலை அல்லது வேறுபடு தோற்றம் என்றே கூறுதல் அடாது. ''பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில்—பதியினைப் போற்பசு பாசம் அநாதி'' என்பது திருமூலர் உபதேசம். பதி எனினும், இறை எனினும், இறைவன் எனினும் பொருந்தும். பதி—காப்பது; 'முறை செய்து காப்பாற்றுவதனை' மன்னவனுக்கும் இறைக்கும் உள்ள பொதுத் தன்மை என்பர் திருவள்ளுவர். பசு—கட்டப்பட்டது, உயிர்; பாசம்—கட்டும் கருவி, தளை.

இவற்றுள் இறை இயற்கை முற்றுணர்வு உடையது; தானே அறிந்து உயிர்களை அறிவிப்பது. உயிரையும் தளையினையும் தனது தடைப்படாத உணர்வாற்றலில் அடங்கக் கொண்டு செயற்படுத்த வல்லது அஃது ஒன்றே; ஆதலால் ஏகம் அல்லது ஏகன், ஒன்று அல்லது ஒருவன் எனப்படும். என்றும் எவ்வகை மாறுதலும் இன்றி, தளையின் நீங்கித் தன்னைத் தலைப்பட்டு ஒற்றித்து நின்று உணரும் முத்தான்மாக்களுக்குத் தூய அறிவாய் அந்தமில் இன்பமாய், பேரருட் பெருக்காய் உணர்ந்து நுகர வருவது. இவ்வியல்புகள் உடைமை பற்றி இது சைவ நூல்களால் சிவம் அல்லது சிவன் எனவும், தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் மெய்ப்பொருள், செம்பொருள், உள்ளது, வாய்மை, சார்பு எனவும், பலபெயர்களால் குறிக்கப்படும்.

உணர்த்த உணர்வது உயிர். இஃது இயல்பாகவே அகவிருள் எனப்படும் மூல மலத்

தால் தடுக்கப்பட்ட அறிவு, விழைவு, செயலாற்றல்களை உடையது. உடம்பிற்கட்டுற்று நின்று, நான் எனும் உணர்வுடையதாய், உலகப் பொருள்களையும் பிற உயிர்களையும் விரும்பியும் வெறுத்தும் முயன்று, இன்பத் துன்ப நுகர்ச்சி உடையதாய், பிறந்து இறந்து வருவது. உயிர்கள் உடம்புதோறும் எண்ணிறந்தவை ஆதலால், அவை அநேகன் என்னும் சொல்லால் குறிக்கப்பெறும்.

இறைவன் எப்பொருளையும் அதில் தோய்தலின்றித் தனித்து நின்று அறிபவன்; எல்லாவற்றையும் ஒருங்கே அறிந்தாங்கு அறிந்து நிற்பவன் எனவும், உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நின்று, ஒவ்வொரு பொருளாய்ச்சுட்டி ஒருபுடைபட அறிந்து வருவது எனவும், வேறுபாடு அறிந்து கொள்ளத்தக்கது.

தளை ஆணவம் கன்மம் மாயை என வகைப்படும். இவை அறிவித்தாலும் அறிய மாட்டாத சடப்பொருள்கள். இவை முறையே இருள், இருவினை, மருள் என்னும் காரணக் குறிகளால் திருக்குறளில் வழங்கப்படுதல் அறியத் தக்கது.

இம் மூன்றனுள் ஆணவமானது உயிர்களின் அறிவு, விழைவு, செயல் ஆற்றல்களைத் தடுத்து அவற்றை அணுத்தன்மைப்படுத்தி நிற்பது. இதன் இயல்பை,

''இருளான தன்றி இல(து) எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்''

''ஒருபொருளுங் காட்டா(து) இருள்உருவம்
காட்டும்
இருபொருளுங் காட்டா(து) இது''

என்னும் திருவருட் பயன் குறட்பாக்கள் இனிது விளக்குகின்றன ; உலகத்தில் உள்ள பலவகைப் பொருள்களையும், அவற்றின் உண்மையும், இயல்புகளும் தோற்றாவண்ணம், மறைத்து நிற்கும் பொருள் புற இருளே ஆகும் ; அது போல, இறைவனையும், உயிரையும், இருவினைகளையும் வினைப்பயனையும், பிறப்பு வீடுகளின் காரணத்தையும் தோன்றாதபடி மறைத்து நிற்பது ஆணவம் எனப்பட்ட அகவிருளே ஆகும். புற இருள் தன் இருப்பை மறைத்துக் கொள்ளாது. அகவிருள் தன் இருப்பையும் காட்டுவதில்லை. அதனால் அன்றோ புறத்தே ஒளியைத் தேடிப் பெறும் மக்கள், அக இருளை நீக்கி ஒளிபெற அவாவுதலும் இல்லை. முயலுதலும் இல்லை.

ஆணவத்திற்கும் மாயைக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளுதல் வேண்டும். நஞ்சு ஒருவன் குருதியில் கலந்து நிற்பின் அவன் உடம்பைச் செயல்படாதபடி முடக்கும். தனக்கு மாற்றாக உள்ள மருந்து கொடுக்கப்பெற்ற போது தன் வலிகுன்றி அடங்கும். அதுபோல, ''மூலமலமும் உயிரின் உணர்வில் கலந்து நின்று, அதனை உணர்விழக்கச் செய்யும். தனக்கு மாற்றாக உள்ள, மாயையின் காரியங்களாகிய உடல், பொறி, கரணம் என்பவற்றை இறைவன் உயிர்க்குக் கூட்டுதலால், உயிர் அவற்றோடு கலந்து நிற்கும்போது, மலம் தன் வலி குறைந்து, உயிர்க்குச் சிற்றறிவு நிகழ இடங்கொடுத்து நிற்கும். முடிவில் இறைவன் திருவருள் ஆற்றலால் அதன்வலி முழுதும் கெடும்போது, அஃது ஒரு செயலுமின்றி அடங்கிக் கிடக்கும். அந்நிலையில் உயிர் வியாபக உணர்வுடையதாய் இறைவனைத் தலைப்பட்டுச் சார்ந்து அருள் ஒளியும் பேரின்பமும் பெற்று ஒன்றி நிற்கும். இந்நிலையே அந்தமில் இன்பத்து அழிவில் வீடு ஆகும். இதுவே உயிர்களின் முடிந்த குறிக்கோள், உயர்வற உயர் நலம்.

உயிரை அதன்பண்டைய தொடக்காகிய ஆணவத்தின் பிடிப்பிலிருந்து விடுவித்தற் பொருட்டு முதல்வன் தன் பேரருளால் அதற்கு உடல், அகப்புறக் கருவிகள், நிலன், நுகர்ச்சிப் பொருள் என்னும் நான்கனையும் புணர்த்துகின்றான். இந்நான்கும் தனு, கரணம், புவனம், போகம் எனப்படும். இவை ஆக்கப்பட்டவை. ஆதலால் இவற்றிற்கு முதற் காரணமும், நிமித்த காரணமும், துணைக் காரணங்களும், இவற்றால் விளையும் பயனும், பயன்கொள்வோரும் என்பவை இன்றியமையாதிருத்தல் வேண்டும்.

இவற்றின் முதற்காரணம் அருவாய், வியாபகமாய் அவ்வக்காரியங்களைத் தோற்றுவிக்கக் கூடிய ஆற்றல் உருவாய் உள்ள சட சக்தி ஆகிய மாயை. மாயை என்னும் சொல் மாயா என்னும் ஆரியச் சொல்லின் திரிபே ஆகும். மா—ஒடுங்குதல், யா—வருதல். உரு நிலையில் புலப்படும் பொருள்கள் எல்லாம் அரு நிலையில் ஒடுங்கிப் புலப்படாது நிற்றற்கும், மீளப் புலப்படவருதற்கும் இடமாய் உள்ள முதற் பொருளே மாயா எனப்பட்டது. மாயையின் காரியம் மாயேயம் எனப்படும்.

இனி மாயேயமாகிய காணப்படும் உலகிற்கு நிமித்த காரணன் இறைவன். இறைவன் (சத்தி சங்கற்பத்தால்) உலகத்தை மாயையாகிய சட சத்தியினின்றும் தோற்றி நிறுத்தி ஒடுக்கி மீளவும் தோற்றுவிப்பன்.

இங்ஙனம் உலகு உயிர்களைத் தொழிற்படுத்தும்போது முதல்வன் அவற்றைத் தன் உணர்வாற்றலில் அடங்கி நிற்கச் செய்து தொழிற்படச் செய்வன். காந்தம் இரும்புத் துண்டுகளைத் தன் இழுப்பு ஆற்றற் சூழலில் அடங்கக் கொண்டு வலிக்கும்போது, இரும்புத் துண்டுகள் மாறுதல் அடையும். காந்தம் மாற்றமின்றி இருக்கும். அதுபோல இறைவன் மாற்றமாம் வையகத்தைத் தொழிற்படுத்துவன். தான் எவ்வகை மாறுதலும் அடையான். மேலும் காந்த சக்திக்கும் இரும்புத் துண்டுகளுக்கும் உள்ள சம்பந்தம் இருமையின் ஒருமை ஆகும். அதாவது காந்த சக்தி இரும்புத் துண்டுகளுக்கு வேறாயினும், அவற்றோடு கலந்து ஒற்றுமைப்பட்டு உடன்நின்று அவற்றைச் செலுத்துகிறது; அதாவது இருபொருள்கள் ஒற்றுமைப்பட்டு உள்ளன. இச்சம்பந்தமே உபநிடதங்களில் அத்வைதம், அத்விதீயம் எனக் குறிக்கப்பெறும். இச்சொல்லைத் தமிழ் நூலார் அத்து

விதம் எனத் தமிழ் இலக்கண விதிப்படிஆளுவர். முதல்வனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தமும், உயிர்களுக்கும் மாயேயத்திற்கும் உள்ள சம்பந்தமும் இருமையின் ஒருமையாகிய அத்துவித சம்பந்தமே யாகும்.

காந்தக் கல்லைப்போல முதல்வனும், அதன் இழுப்பு ஆற்றல்போல அவனது உணர்வாற்றலும் உள்ளன. காந்தக் கல்லும் அதன் இழுப்பாற்றலும் பொருண்மையால் ஒன்றேயாயினும், ஒரு வகையில் இரண்டாகக் கருதும்படி நிற்பவை. இங்ஙனம் ஒரு பொருளே தனக்குள் இருதன்மை தோன்ற நிற்கும் நிலையில் அவ்விரண்டிற்கும் உள்ள பிரிவுபடாத சம்பந்தத்தை ஒருமையின் இருமை எனல் ஆம். இச்சம்பந்தத்தைத் தமிழ் நூலார் தற்கிழமை எனவும், வடநூலார் தாதான்மிய சம்பந்தம் எனவும் வழங்குவர். தாதான்மியம் என்னும் சொல் அதுதான் ஆதல் என்னும் பொருளைத் தரும். இறைவனுக்கும் அவனது உணர்வாற்றலுக்கும் உள்ள சம்பந்தம் தற்கிழமை அல்லது தாதான்மியம் எனப்படும். இவ் உணர்வாற்றலே உலகமாகிய காரியத்திற்குத் துணைக் காரணம் எனப்படும். உயிர்கள் தோறும் தனு கரண புவன போகங்கள் வேறு வேறாக அமைந்து வேறு வேறு பயன்களைத் தருதலால் அதற்குக் காரணம் அவற்றின் ஆணவத் தொடக்கின் வன்மை மென்மை பற்றி உண்டாகும் இருவினைகள் ஆம். இவ்விருவினைகள் முதல்வன் உணர்வாற்றலின் வழிநின்று காரியங்களைத் தோற்றுவிப்பன. ஆதலால் இவை இறைவனது உணர்வாற்றலின் வழிப்படும் துணைக் காரணம் எனப்படும்.

''நங்கையினால் நாம்அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகனும்''

எனத் திருக்களிற்றுப்படியிலும், 'ஆணையின் இருவினையின்' எனச் சிவஞான போத இரண்டாம் சூத்திரத்திலும், 'இனி, இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வருமென்றது' என அதன் வார்த்திகத்தினும் வருதல் காண்க.

உலகப் படைப்பால் பயன்பெறுபவை உயிர்கள் என்று உணர்தல் வேண்டும். இறைவனது பேர் உணவின் முன் உலகப் பொருள்கள் முனைந்து நிற்கமாட்டா. ஆதலால் முதல்வன் அவற்றைப் பற்றி இன்பத் துன்பம் உறுதல் இலன். உலகப் பொருள்களும் அறிவில்லாத சடப் பொருள்கள் ஆதலால் முதல்வனை அறியமாட்டா. இனி உலகப் பொருள்களையும் முதல்வனையும் முறையே பிறப்பு நிலையிலும் வீட்டு நிலையிலும் அறிந்து பற்றிப் பயன்கொள்ளுபவை உயிர்களே ஆகும்.

உலகப் படைப்பால் உயிர்கள் பெறும் இடைநிலைப் பயன் அவற்றைப் பற்றியுள்ள பாசமாகிய ஆணவத்தின் வலி, படி முறையில் குறைந்து அடங்க, அம்முறையினால் வளர்மதி போல உயிர்கள் தம் வியாபக உணர்வு மலரப் பெறுதல். 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' என்பது திருவாசகம். பாரித்தல்—வளர்த்தல். முடிந்த பயன் உயிர் பாசத்தின் நீங்கிச் சிவத்தைப் பெறுதல்.

இங்ஙனம் சிவநெறியிற் கூறப்படும் உண்மைகள் எல்லாம் அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஐயம் திரிபு அற இந்நூல்களால் தெரிவிக்கப்படும்.

இயல்பாகவே ஆணவத்தில் தொடக்குண்டு நிற்கும் உயிர் முதல்வனால் கொடுக்கப்படும் பரம், சூக்குமம், தூலம் என்னும் உடல்களையும், அகப் புறக் கருவிகளையும் பெற்று அவற்றோடு கூடி நிற்கும்போது தனக்கு முன் இருந்த மூல மல காரியமாகிய அறியாமையினின்று விடுபட்டு, அறிவு சிறிது விளங்கப் பெறும். அவ்வறிவு முளைக்கும்போதே, ஆணவத்தின் தூண்டுதலால், தன்னை நோக்கி உணர்தல் இன்றி, உலக நுகர்ச்சியை நோக்கும் அவா உடையதாய் நிற்கும். இவ் அவா இருள் மலத்தால் தூண்டப்பெற்று அதனை உயிர் பற்றி நிற்பதன் விளைவாய், உயிர்தோறும் சிற்சில வேறுபாடுகளுடன் நிகழும். இவ் அவாவே கன்மம் அல்லது மூலகன்மம் எனப்படும். இனி இவ் அவாவிற்கு ஏற்றபடி சூக்கும உடலும், தூல உடலும், சூழ்நிலையும் அமையப்பெற்று, உயிர் உலகப் பொருள்களை நோக்கி, விரும்பியும் வெறுத்தும் முயலும். அம்முயற்சி நினைவு மொழி செயல் என மூன்றாக வெளிப்பட்டு, நல்லவை தீயவை எனப் பாகுபட்டு நிற்கும். இம் முயற்சியே இருவினை அல்லது கான்மியம் எனப்படும். கன்மத்தின் காரியம் கான்மியம் எனப்படும். கன்மம் கான்மியம்என்பனவற்றின் வேறுபாடு கருதாதபோது இரண்டும் கன்மம் என ஒன்றாகவே எண்ணப்படும்.

கன்மம் அல்லது மூலகன்மம், ஆணவம், மாயை என்பவற்றோடு உடன் வைத்து எண்ணப்படும் அநாதி குற்றமாம். இருவினை என்பது அக்கன்மத்தின் விளைவாய், மாயேயமும் தானும், வித்தும் மரமும்போல நாசத்தில் உற்பத்தியாய்த் தொடர்ந்து, பிரவாக அநாதியாய் வருவது. திருவள்ளுவர்,

''அவாவென்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து''

என்றதனால் மூலகன்மத்தையும், 'இருள் சேர் இருவினையும் சேரா' என்றதனால் கான்மியத்தையும் குறித்தருளினர்.

தொடரும்

ஸ்ரீ வைஷ்ணவ மாதர் மாநாட்டுத் தலைமையுரை

திருமதி T. G. தாராபாய் அம்மையார், M.A., B.T.

கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் !

''ஈசனே அனைத்தும் ஆகிறார். கருவியாயிருப்பவரும் அவரே. காரணமாயிருப்பவரும் அவரே. மனிதனைக் கருவியாக வைத்துக்கொண்டு தம் செயலை அவர் செய்து முடிக்கிறார்.'' என்பது ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களின் திருவாக்கு. இந்த வாக்கினுக்கு ஒப்ப அடியேன் இப்பேரவையின் தலைமைத் தொண்டினை ஏற்று, சிரம் தாழ்த்தி வணங்கி நிற்கின்றேன். அடியாளைப் போன்றார் இச்செயலுக்குச் சிறிதும் அருகரல்லர். ஆனால் அறிவு அளவுபட்டதாயிருப்பினும், ஆர்வம் என்பதொன்றும் உள்ளது அன்றோ! அந்த ஆர்வம் எத்துணை அரிய காரியத்திலும் நுழையச் செய்தல் இயல்புதானே! அடியாளிடத்தும் அக்கோட்பாட்டைத்தான் கொள்ளல் வேண்டும் என வேண்டுகின்றேன்.

அடியேனது புத்திக்குப் புலப்பட்ட சில பொருள்களை, விண்ணப்பிக்கும் முகத்தால், மேம்பட்ட ஞானமுடையவர்களுக்கும் அரிதான செயலை ஒருவாறு செய்ய முன் வந்திருக்கிறேன்.

''அகலில் அகலும்! அணுகில் அணுகும்!
அகன்று நிற்பவர்களுக்கு சர்வேஸ்வரன் வெகுதூரம்
அணுகி வழிபடுகிறவர்களுக்கு அவன் அருகில்
நிற்பான்!''

''உயர்வு அற உயர் நலம் உடையவன் எவன்? அவன்
மயர்வு அற மதி நலம் அருளினன் எவன்? அவன்
அயர்வு அறும் அமரர்கள் அதிபதி எவன்? அவன்
துயர் அறு சுடர் அடி தொழுது எழு, என்மனனே!''

இதற்கு மேல் உயர்ந்தது இல்லை என்று சொல்லக் கூடிய கல்யாண குணங்களின் தகுதியை உடைய சர்வேசுவரனைத் தொழுது மேன்மை அடைவாய் என் நெஞ்சே! எனத் திருவாய் மொழியில் முதலிலேயே உபதேசித்திருக்கிறார் நம்மாழ்வார்.

வைணவ சமயத்திற்கு உறுதி அளிப்பவை பக்தியும், ஞானமும். அன்பும், பக்தியும் செலுத்துவதற்குக் கல்யாண குணங்கள் கொண்ட தெய்வம் வேண்டியதாகிறது. சைவ சமயத்தவர்களும் பக்தி நெறியைத்தான் பிரதானமாக உபதேசிக்கிறார்கள். உள்ளத்தில் பக்தி உண்டாவது சர்வேசுவரன் அருளினால்தான். அவன் அருளின்றி அவனுக்குப் பக்தி செலுத்தும் பாக்கியமும் உண்டாகாது. மோட்சத்திற்குச் சாதனம் பக்தி. அந்தப் பக்தியை அடைவதற்கும் ஈசுவரனுடைய அருள் வேண்டும். துயரத்தைத் தீர்ப்பது பகவானுடைய சரணமே. பகவத் கீதையில் கண்ணன் காட்டிய வழியிலும், 'மற்ற முறைகளை எல்லாம் விட்டு என்னைச் சரணடை! உன்னுடைய எல்லா தாபங்களும் தீரும். துயரப் படாதே'! என்று

ஸர்வதர்மான் பரித்யஜ்ய
மாம்ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச:

என்ற சுலோகத்தில் ஆணித்தரமாக விளக்குகிறார்.

பகவானை வழிபடும் வகையிலும் மூர்த்தி பேதங்களிலும் குழப்பமடையாமலும், ஒரே ஈசனைத்தானே எல்லோரும் பலவித மூர்த்திகளாகக் கொண்டு பலவிதமாகப் பூசிக்கிறார்கள் என்று உணர்ந்து பலவித மார்க்கங்களில் பூசிக்கலாம். ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற இவ்வைந்து பூதங்களை அடிப்படையாகக் கொண்டு எல்லாப் பொருள்களிலும் தானே ஆகி ஈசன் எங்கும் பரவி இருக்கிறார். இதையே கீதையில் பகவான், ''ஐந்து பூதங்களுக்கும் நானே வித்து; என்னையன்றிச் சராசரங்கள் ஏதுமில்லை'' என்று உபதேசிக்கிறார்.

இந்த உண்மையை ஆழ்வார்களும் அவர்களுடைய பாசுரங்களில் எடுத்துரைத்து, நாம் அறிந்து நற்பேற்றை அடையும் பொருட்டு, இவற்றை அழியாப் பயனை எய்தக் கூடிய பெருவிதிகளாக வைத்துச் சென்றார்கள். உலகச் சுழலில் சுழன்று கொண்டிருக்கும் ஒருவருக்கு அமைதியையும், ஆனந்தத்தையும் அளிப்பதில் இவற்றினும் மேலானது வேறொன்றும் இல்லை.

''மனித சென்மத்தில் பகவானை அனுபவிக்கும் முறை, அர்ச்சாவதார சொரூபத்தில் நிற்கும் பரமனுக்குக் கைங்கரியங்களையெல்லாம் குறைவறச் செய்வதேயாகும்!'' என்று ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். நீசர்களாகிய நம் மேலும் அன்பு வைத்த தேவனை, ஒரு நற்குணமும் இல்லாத நமக்கு அருள் புரியும் திருவேங்கடத்தானைப் புகழ்ந்து பாடுகிறார் நம்மாழ்வார்.

''குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்!
அன்று ஞாலம் அளந்த பிரான்! பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை
ஒன்றுமே தொழ, நம்வினை ஓயுமே!''

சர்வேசுவரன் அர்ச்சாவதாரமாய் நின்று தரிசனம் தரும் திருமலை ஒன்றையே வணங்கினால் கூடப் போதும். திருமலையானே நம்

பாவங்களைத் துடைத்துவிடுவான் என்று பெருமாளின் மகிமையைப் பெருமாளின் மலைமேல் ஏற்றிப் பாடுகிறார்.

''நாட்களைச் செல்லவிட வேண்டாம்; உடலில் சக்தி இருக்கும் போதே புருஷோத்தமனைத் தரிசித்துச் சரணடைய முற்பட வேண்டும். தோன்றி மறையும் மின்னலைக் காட்டிலும் நிலையில்லாத உடலிது, பொருள்களிடத்து வைத்திருக்கும் ஆசைகளை முற்றிலும் அகற்றி விடு. உயிரை இறைவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுமானால், பகவானை விரும்பி, கடவுள் பற்றைப் பற்றிக் கொள்ள வேண்டும். பற்றை ஒழித்த நிலை ஸ்திரமாக இருக்க வேண்டுமெனில் மனதை ஈசனிடம் செலுத்த வேண்டும்''. கீதையில்கண்ணன் சொன்ன,

''விஷயா விநிவர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹின:
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
பரம்திருஷ்டவா நிவர்த்ததே''

என்ற சுலோகத்தையும் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்திரியங்களை உலக விஷயங்களின் மேல் செலுத்தாமல் ஒழிந்தால் விஷயங்கள் தூர நிற்கும். ஆயினும் அவற்றில் 'ரஸம்' இருந்து கொண்டே இருக்கும். ''பரம த்ருஷ்டவா''—அதாவது மனத்தைப் பகவான் மேல் செலுத்தினால் அதுவும் நீங்கும். கர்ம யோக அப்பியாசத்தாலும், பக்தியாலும், உறுதியாலும் சாந்தி நிலையை அடைந்து விட்டால் எல்லாப் பேதங்களும் அற்றுப்போகும். சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, சுருசி, வாசனை அற்றவர்களாகவும் ஆகுதல் நலம்.

எம்பெருமான் ஒருவனே துணை !

''கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரண்!'' அனைத்தையும் அவன் திருவடியில் சமர்ப்பித்து உன்னுடைய பாரம் என்று விட்டு விட்டு, நம்முடைய கடமையைச் செய்தல் வேண்டும்.

''கொண்ட பெண்டிர், மக்கள்,
உற்றார், சுற்றத்தவர் பிறருள்
கண்டதோடு பட்டது அல்லால்
காதல் மற்று யாதும் இல்லை!
எண்திசையும் கீழும் மேலும்
முற்றவும் உண்ட பிரான்
தொண்டரோமாய் உய்யல் அல்லல்
இல்லை கண்டீர் துணையே!''

என்று ஆரம்பித்து ''அவனே துணை, அவனே சரண், அவனுக்கு அடிமையாவதே பொருள், அதுவே அரண், அதுவே சமார்த்தியம், இன்பம், குணம், எல்லாம் மற்று ஏதுமல்ல'' என்று பத்துப் பாசுரங்கள் பாடுகிறார் நம்மாழ்வார்.

ஸ்ரீ வைணவ சமயத்தில் பற்றுக் கொண்டு இப்பெரிய மாநாட்டில் இத்தொண்டினைச் செய்ய வாய்ப்பளித்த ஸ்ரீ வைணவ பக்த சிரோமணிகளுக்கு அன்போடு கூடிய நன்றி செலுத்தி, அடியாளை இந்நிலைக்கு வர அருளிய அன்னையார் பண்டித கிருஷ்ணவேணி அம்மையாரின் திருவடிகளுக்கும் வணக்கம் செலுத்தி அமைகிறேன்.

''அகலகில்லேன் இறையும் என்று
அலர்மேல் மங்கை உறை மார்பா!
நிகர்இல் புகழாய்! உலகம்
மூன்று உடையாய்! என்னை ஆள்வானே!
நிகர்இல் அமரர், முனிக்
கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!
புகல் ஒன்று இல்லா அடியேன்
உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே!''

திருமயிலைத் திருவள்ளுவர் கோயில் கும்பாபிஷேக விழா

சென்னைத் திருமயிலையில் உள்ள தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானின் திருக்கோயிலின் கும்பாபிஷேக விழா, 21—2—77 திங்கட்கிழமை காலை, 9 மணி முதல் 10.30 மணிக்குள், மிகவும் சிறப்புற, வேதாகம விதிமுறைச் சடங்குகளின்படி நிகழ்ந்தது. முன்னாள் நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார், திருமதி சாரதா பரமேசுவரன், வணிக வரி மற்றும் அற நிலையத் துறைச் செயலர் திரு ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ். முதலிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்து கொண்டனர். கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் நிகழ்ந்த சிறப்புக் கூட்டத்திற்கு, அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். தலைமை தாங்கினார். திருவாளர்கள் நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார், 'வாகீச கலாநிதி' திரு கி. வா. ஜகந்நாதன், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், தொல்பொருள் துறை இயக்குநர் திரு இரா. நாகசாமி, துணை ஆணையர் திரு எம். சூர்யராஜ் ஆகியவர்கள் சிறப்புரை நிகழ்த்தினர். துணை ஆணையர் திரு வி.எஸ். கோதண்டபாணி, இணை நேர்முக உதவியர் திரு பெ. புலியூருடையான், உதவி ஆணையர் திரு சி. சுப்பிரமணியப் பிள்ளை, மேற்பார்வைப் பொறியாளர் திரு வி. சம்பந்தம் முதலிய அதிகாரிகள் பலரும், விழாவிற் கலந்து கொண்டனர். ஏழை எளியவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பெற்றன. ஸ்தபதிகள் பட்டாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றனர். மிகவும் குறுகிய காலத்தில், நீண்ட காலமாகத் தேங்கிக் கிடந்த திருப்பணிகளைச் செய்து நிறைவேற்றி, கும்பாபிஷேக விழாவையும் சிறப்புற நிகழும்படி ஏற்பாடுகள் புரிந்த அறநிலையத் துறையின் அலுவலர்களையும், குறிப்பாக அறநிலைய ஆணையர் அவர்களையும், பொதுமக்கள் பலரும் புகழ்ந்து போற்றிப் பாராட்டி மகிழ்ந்தனர்.

— ஆசிரியர்.

கும்பகோணத்தில், காஞ்சி ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அவர்களின் ஆக்ஞைப்படி நடைபெற்ற வித்வகலாதி ஸதஸ்ஸில், நமது அறநிலைய ஆணையர் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதல் (10—12—76 & 12—12—76)

பதிவு எண். எம். 7039

மதுரை அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், (11—I—77) தேதியில் நடைபெற்ற திருவெம்பாவை—திருப்பாவை விழாவில், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் உயர்திரு எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்புரையாற்றிய போது எடுக்கப்பெற்றது. அருகில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர் உயர்திரு எல். அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் அமர்ந்துள்ளார்கள்.

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.